Vol.9, Issue 3 | Annual Subscription ₹ 600
Rotary News, August 2026, Chennai



@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

இந்தியா

www.rotarynewsonline.org



Rotary

ADVT.



Rotary District 3212
CREATE LASTING IMPACT
அறம்
Olayinka Hakeem Babalola
Rtn. AKS Er. Muruganandam M
DISTRICT PROJECT 2026 - 2027
The Journey Begins!
From Hope to Empowerment
OUT OF 1,000 SEWING MACHINES,
PHASE 1 DISTRIBUTES
351
SEWING MACHINES
Rtn. Gandhi Krishnan
DISTRICT GOVERNOR
Empowering Women.
Strengthening Families.
Building a Better Tomorrow.
Empowering Women
Creating Livelihoods
Building Stronger Communities
16 AUGUST 2026
FOUNDATION SEMINAR
TIRUNELVELI
Rtn. TN. Arunachalam @ Nandu
DISTRICT GENERAL SECRETARY
Rtn. PA. Sivakumar Raja
CHIEF ASSISTANT GOVERNOR
Project Chairman
Rtn. Selva Alagu
ASSISTANT GOVERNOR
Rotary District 3212 | Service Above Self | Together Create Lasting Impact.

# உள்ளே




46

சுந்தரவனத்திற்கு ஒரு பசுமை உயிர்நாடி



12

IT கனவுகளுக்கு இறக்கை கொடுக்கும் RC பம்பாய்



54

மைசூரில் ரோட்டரியின் நம்பிக்கைப்பள்ளி



60

தண்ணீரும் வாழ்வாதாரமும் தந்த மாற்றம்



34

மேனகா காந்தியுடன் உரையாடல்



36

கருடனுக்கு வாழிடம் அமைத்த பாகல்பூர் ரோட்டேரியன்கள்



Rotary

A publication of Rotary Global Media Network


## முக்கிய அறிவிப்பு

### ஆண்டு சந்தா கட்டணத் திருத்தம்

அன்பார்ந்த சந்தாதாரர்களே,

ரோட்டரி நியூஸ் இதழின் ஆண்டு சந்தா கட்டணம் ஜூலை 1, 2026 முதல் பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது:


- அச்சுப் பதிப்பு: **₹600**
- மின்னணு பதிப்பு: **₹360**

இதற்கேற்ப உங்கள் சந்தா ரசீது அனுப்பி வைக்கப்படும்.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், தாமதமின்றி இதழை உடனுக்குடன் பெறவும், ரோட்டேரியன்கள் **மின்னணு** (e-version) **பதிப்பைத்** தேர்வு செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் தொடர்ந்த ஆதரவுக்கும் ஒத்துழைப்புக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

## சிந்தனையை தூண்டும் கடிதங்கள்




*RI இயக்குநரின் செய்தியான 'உயர்ந்த இலக்கை நோக்கி முன்னேறுவோம்' உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரித்து சங்கங்களை வளர்ப்பதற்கான RAG (சிவப்பு-மஞ்சள்-பச்சை) பகுப்பாய்வு தொடர்பாக மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. இதே RAG கொள்கையை சங்கத் திட்டங்களுக்கும் பயன்படுத்தலாம்.*

*ஒரு சங்கத் திட்டம் தவறாக நடைமுறைப் படுத்தப்படுவது கண்டறியப்பட்டால், அந்த செயல்படுத்தும் முறையை உடனடியாக மாற்றி, மிகவும் பொருத்தமான உத்தியை கையாள வேண்டும். இதுவே சிவப்பிலிருந்து மஞ்சளுக்கும், இறுதியில் பச்சைக்கும் மாற்றத்தை ஏற்படுத்தும். குறைந்த உறுப்பினர் எண்ணிக்கை கொண்ட ஒரு சங்கம் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதில் சில தடைகளை எதிர்கொள்வது உண்மைதான். அதனால்தான் உறுப்பினர் வளர்ச்சி முக்கியமானது. எனவே, இயக்குநரின் செய்தியில் பரிந்துரைக்கப்பட்டுள்ளபடி, ரோட்டரி சங்கங்களின் நீண்டகால நிலைத்தன்மைக்காக உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிக்க 1:2:3 (ரோட்டேரியன், ரோட்டராக்டர், இண்டராக்டர்) விகிதம் ஒரு சிறந்த அணுகுமுறையாகும்.*

*நிரஞ்சன் கார்,* RC *புவனேஸ்வர்* — D 3262

*RI தலைவர் ஒலயின்கா பாபலோலா தமது ஜூலை மாத செய்தியில், "நீங்கள் உங்கள் சமூகத்தையும் உலகையும் எவ்வளவு அதிகமாக மாற்றுகிறீர்களோ, அவ்வளவு அதிகமாக நீங்களும் மாறுவீர்கள்" என்று கூறியுள்ளார். எனினும், உலகப் புகழ்பெற்ற தத்துவஞானியான J கிருஷ்ணமூர்த்தி, தனிமனித உணர்வு முதலில் மாற்றமடையாமல் சமூகமும் உலகமும் அடிப்படையில் சீர்திருத்தப்பட முடியாது என்று கூறியுள்ளார்.*

*ஏனெனில், "நீயே உலகம், உலகமே நீ"; தனிமனிதன் உள்ளுக்குள் மாறும்போதே உண்மையான உலகளாவிய மாற்றம் நிகழ்கிறது. எனவே, ரோட்டரி தலைவர்கள் உள்ளார்ந்த மாற்றத்தை பெற வேண்டும், அப்போதுதான் அவர்களால் சமூக சேவையில் முன்னேற முடியும்.*

K M K *மூர்த்தி,* RC *செகந்திராபாத்* — D 3150

*RI தலைவர் பாபலோலா, இந்த ஆண்டின் கருப்பொருளான நீடித்த தாக்கத்தை உருவாக்குங்கள் என்பதற்கு புதிய பரிமாணத்தை அளிக்கிறார். தாக்கம் என்பது வெளிப்புறமானது மட்டுமல்ல, பயனாளியை உள்ளுக்குள் மாற்றும் அகநிலை யானதும் கூட என்று அவர் வலியுறுத்துகிறார். மாற்றம் என்பது வெறும் தொடக்கம் மட்டுமே, ஆனால் தாக்கம்தான் நிலைத்து நிற்பது. பலரும் இந்த முக்கியமான அம்சத்தை தவற விடுகின்றனர்: சேவை நடவடிக்கைகள் நமது ஆளுமையை மறுவடிவமைத்து, நமது பார்வையை மாற்றி, நம்மை உள்ளிருந்து மாற்றுகின்றன.*

*புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு சட்டமன்றத்தில், ரோட்டரி பின்னணி கொண்ட 23 எம்.எல்.ஏக்கள் தேர்ந் தெடுக்கப்பட்டதன் மூலம் ரோட்டரியின் ஆற்றலும் எட்டுப் பாடும் முழுமையாக வெளிப்பட்டது. குறிப்பிடத்தக்க வகையில், மாநில அமைச்சரவையில் இடம்பெற்ற ஐந்து*

*கிராமப்புற பெண்களுக்கு திறன் வளர்ப்பு* என்ற கட்டுரை புதிய உறுப்பினர்களை எங்கள் சங்கத்தில் சேர்க்க உதவியாக இருந்தது. இது மற்றவர்களை இந்த அமைப்பில் இணைய ஈர்த்த ஒரு நேர்த்தியாக எழுதப்பட்ட கட்டுரையாகும். திட்டப் பணி நன்கு விளக்கப்பட்டிருந்தது. உறுப்பினர் வளர்ச்சிக்கு ஆதரவளித்த ஆசிரியர் ரஷீதா பகத்திற்கு மிக்க நன்றி. ரோட்டேரியன்கள் செய்யும் பணிதான் தானாகவே பேசுகிறது.

எங்கள் சங்கத்தில் மக்களை சேர இணைக்க இந்த ஜூலை இதழின் கூடுதலாக 5-10 பிரதிகள் வேண்டும்.

ராதேஷ்யாம் மோடி
RC அகோலா — D 3030

ஜூலை இதழில் வெளியான கொழுப்பு (கொலஸ்ட்ரால்) பற்றிய சுகாதார கட்டுரை, கொழுப்பு தொடர்பான நோய்களின் தன்மையையும், அதிக அளவு கொழுப்பு இதயத்தை எப்படி பாதிக்கிறது என்பதையும் நன்கு விளக்கியது.

இன்றைய பரபரப்பான வாழ்க்கையில், மக்கள் நல்ல உணவு எது, கெட்ட உணவு எது என்பதைப் பற்றிய போதிய விழிப்புணர்வு இல்லாமல் கிடைப்பதை உண்டு, இதன் மூலம் தாங்களே இலவசமாக நோய்களை வாங்குகிறார்கள். இந்நிலையில், இதய நோய்கள் மற்றும் அவற்றை தடுப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த மேலும் பல மருத்துவ முகாம்கள் நடத்தப்பட வேண்டும். அனைத்து RI மாவட்டங்களும் கொழுப்பு பரிசோதனை முகாம் நடத்த வேண்டும்.

எங்கள் RID 3231-ல், புதிய தலைவர் மற்றும் அவரது குழுவினரின் பதவியேற்பு விழாவின்போது இதய நோய்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. மேலும், அனைவருக்கும் மார்பு வலிக்கான மருந்துகளும் வழங்கப்பட்டன. இதுபோன்ற முகாம்கள் மேலும் நடத்தப்பட்டால் நன்றாக இருக்கும்.

சிவபெருமாள் சுப்ரமணி
RC வாலாஜாபேட் — D 3231

ஆசிரியரின் குறிப்பான *மாற்றம், முன்னேற்றத்திற்கான நம்பிக்கை* என்ற தலைப்பில், நாட்டின் பொறுப்பை இளைய தலைமுறை ஏற்றுக்கொள்வதன் முக்கியத்துவம் நேர்த்தியாக விளக்கப்பட்டுள்ளது. இளைஞர்களை திறம்பட நிர்வகித்து

*ரோட்டேரியன்களில் 29 வயதான ஒரு பெண்மணியும் அடங்குவர். இது ரோட்டரி வரலாற்றில் அரிதான, பெருமைக்குரிய ஒரு நிகழ்வாகும். இந்த தலைவர்கள் சமூகத்தில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்துவார்கள்.*

*N அந்திரி வேதி, RC ஹைதராபாத் மெகா சிட்டி — D 3150*

*RI தலைவர் பாபலோலாவின் செய்தியாலும், ரோட்டரியில் அவரது குறிப்பிடத்தக்க பயணத்தை அறிந்ததாலும் நான் மிகவும் ஊக்கமடைந்தேன்.*

*என்னை மிகவும் கவர்ந்தது, நிலைத்துநிற்கும் சேவைத் திட்டங்கள் சமூகங்களில் மட்டுமல்ல, நம் சொந்த வாழ்க்கையிலும் நீடித்த தாக்கத்தை உருவாக்குகின்றன என்ற அவரது வலிமையான நம்பிக்கையே. இன்று, மாற்றம் என்பது வெறும் நிலையான ஒன்றல்ல, அது வேகமெடுத்துக் கொண்டிருக்கிறது. நமது சிறந்ததை விடச் சிறப்பாக செயல்பட நம்மை நாமே சவால் விட்டுக் கொள்ள வேண்டிய தருணம் இது.*

*நீடித்த தாக்கத்தை உருவாக்க வேலையைத் தொடங்குவோம்.*

*பியூஷ் தோஷி, RC பேலூர் — D 3291*

சரியான வாய்ப்புகளை வழங்கினால், அவர்கள் இந்தியாவை உலக அரங்கில் ஒரு பலமான சக்தியாக முன்னேற்றக்கூடிய பெரும் சொத்தாக மாறக்கூடும் என்று ஆசிரியர் சரியாகவே கூறியுள்ளார்.

மறுபுறம், முறையற்று கையாளப்பட்டால், இளைஞர்கள் கையாள முடியாத ஒரு பொறுப்பாக மாறக்கூடும். இளமை என்பது கண்டுபிடிப்பு மற்றும் கனவுகளின் வயது. ஒரு நாட்டின் மிகப்பெரிய செல்வமும் பலமும் அதன் இளைஞர்களே, இளைஞர்களின் தரமே நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கிறது. எனவே, நமது அமைப்புக்கோ அல்லது நாட்டுக்கோ ஒரு பிரகாசமான எதிர்காலத்தை உறுதி செய்ய வேண்டுமெனில், முதலில் நமது இளைஞர்களை வலுப்படுத்தி, அதிகாரமளிக்க வேண்டும். அவர்களது ஆற்றல் சமூக நன்மைக்காக பயன்படுத்தப்படும் வகையில் நமது இளைஞர்களை வடிவமைப்பது நமது கடமையாகும்.

ஜூன் இதழின் அட்டைப் படம் மனதைத் தொடும் வகையில் இருந்தது, மேலும் கிரண் ஜெஹ்ரா எழுதிய "*சுயசார்புக்கான பாதை*" என்ற கட்டுரையை படித்தேன், ஒருவரின் அர்ப்பணிப்பும் உறுதியும் சாத்தியமற்றதை சாத்தியமாக்கும் என்பதை உணர்ந்து மிகவும் நெகிழ்ந்தேன். பார்வையற்றோருக்காக பாராட்டத்தக்க சேவையை செய்த RC கொச்சின் குளோபல் சங்கத்தின் தலைவர் ஜாய் A தட்டிலுக்கும் அவரது உறுப்பினர்களுக்கும் என் பாராட்டுக்களை தெரிவிக்க எனக்கு வார்த்தைகளே இல்லை.

ராஜ் குமார் கபூர்
RC ரூப் நகர் — D 3080

2030-ம் ஆண்டுக்குள் 1.25 மில்லியன் ரோட்டேரியன்கள் மற்றும் 1.25 லட்சம் ரோட்டராக்டர்கள் என்ற உறுப்பினர் இலக்குடன், ரோட்டராக்டர்களுக்கும் ரோட்டரி நியூஸ்-க்கு சந்தா செலுத்துவதை கட்டாயமாக்குவது ரோட்டரிக்கு புத்திசாலித்தனமான நடவடிக்கையாக இருக்கும். இது ரோட்டராக்டர்களுக்கு ரோட்டரி உலகிற்கான ஒரு சாளரத்தை திறந்துவிடும், உள்ளூர் மற்றும் உலகளாவிய அளவில் அதன் வழிகாட்டும் கொள்கைகளுடன் இணைந்து, அவற்றுக்கு ஏற்ப மாற்றிக் கொள்ள அவர்களை ஊக்குவிக்கும்.

R முரளி கிருஷ்ணா
RC பர்ஹம்பூர் — D 3262

நாளுக்கு நாள், ரோட்டரி நியூஸ் ஒவ்வொரு இதழிலும் படிக்க சுவாரஸ்யமான தகவல்களும் கட்டுரைகளும் நிறைந்த புதிய தோற்றத்தை பெற்றுவருகிறது. இளம் ரோட்டேரியன்களுக்கான ஒரு பகுதியை Young Rotarians Window என்ற தலைப்பில் தொடங்கலாம் என நினைக்கிறேன். இது இளம் மற்றும் புதிய ரோட்டரி உறுப்பினர்களிடமிருந்து கருத்துகளையும் கருத்துக்களையும் ஈர்க்கும்.

பரமேஷ் தேவ் சவுத்ரி
RC கவுஹாத்தி சவுத் — D 3240

**அட்டைப் படத்தில்:**
பால்கரில் உள்ள ஆர்யன் உயர்நிலைப் பள்ளி மாணவி பூர்வா கெட்கர், பள்ளியில் RC பாம்பே அமைத்த IT இன்னோவேஷன் லேபில் தான் உருவாக்கிய திட்டப்பணியை காட்சிப்படுத்துகிறார்.

*We welcome your feedback Write to the Editor:*
**rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com.**
*Mail your project details, along with hi-res photos, to*
**rotarynewsmagazine @gmail.com.**
*Messages on your club/district projects, information and links on zoom meetings/webinar should be sent only by e-mail to the Editor at*
**rushbhagat@gmail.com** *or* **rotarynewsmagazine@gmail.com.**
*WHATSAPP MESSAGES WILL NOT BE ENTERTAINED.*

# உங்களுக்கு என் சவால்

அமைதி தற்செயலாக உருவாவதில்லை. அதைத் திட்டமிட்டு நாட வேண்டும்; உத்திபூர்வமாகக் கட்டமைக்க வேண்டும்; நாம் செய்யும் அனைத்திலும் நோக்கத்துடன் பின்னிப் பிணைக்க வேண்டும். இந்த ஆண்டில் ரோட்டரி உலகின் முன் நான் வைக்கும் சவால் இதுதான்.

அமைதியைக் கட்டியெழுப்புவதை ரோட்டரி தனது கவனம்செலுத்தும் துறைகளில் ஒன்றாக அங்கீகரிக்கிறது. ஆனால், சில திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் பணிப் பிரிவாக மட்டுமே அமைதியைப் பார்க்கக் கூடாது என்பது என் நம்பிக்கை. ஒவ்வொரு திட்டத்தையும் வகுக்கும்போதும், ஒவ்வொரு சேவையையும் மேற்கொள்ளும்போதும், நாம் ஏற்படுத்த விரும்பும் உண்மையான தாக்கம் என்ன என்று கேட்கும்போதும், அமைதியின் கண்ணோட்டத்தைத் தேர்ந்தெடுத்துப் பார்க்க வேண்டும்.

பொருளாதாரம் மற்றும் அமைதிக்கான நிறுவனம், நேர்மறை அமைதிக்கான எட்டு தூண்களை அடையாளப் படுத்தியுள்ளது: திறம்படச் செயல்படும் அரசு; ஆரோக்கியமான வணிகச் சூழல்; வளங்களின் சமமான பகிர்வு; பிறரின் உரிமைகளை ஏற்றுக்கொள்ளுதல்; அண்டை சமூகங்களுடன் நல்லுறவு; தகவலின் சுதந்திரமான பரிமாற்றம்; உயர்ந்த மனிதவளத் திறன்; குறைந்த அளவிலான ஊழல். நீடித்த அமைதியைச் சாத்தியமாக்கும் சூழல்களை இத்தூண்கள் விவரிக்கின்றன.

அவற்றை உன்னிப்பாகப் பார்க்கும்போது, ரோட்டரிக்கான அளப்பரிய வாய்ப்புகளை நான் காண்கிறேன். நமது பணி தானாகவே அமைதியை மேம்படுத்திவிடும் என்பதற்காக அல்ல; நாம் அதை நோக்கத்துடன் செய்தால் அவ்வாறு நிகழும் என்பதற்காக. இங்கே முக்கியமான சொல்-நோக்கத்துடன் செயல்படுதல்.

ஒரு குடிநீர்த் திட்டம் தானாக அமைதியை உருவாக்காது. ஆனால், வளங்களை அனைவரும் சமமாக அணுகுவது சமூக நம்பிக்கையை எவ்வாறு வலுப்படுத்தும் என்று கேட்டு, நேர்மறை அமைதித் தூண்களை மனதில் கொண்டு வடிவமைக்கப்படும் குடிநீர்த் திட்டம், அமைதிக்கான அடித்தளத்தை அமைக்கத் தொடங்கும். ஒரு தொழிற்பயிற்சித் திட்டம் நல்லிணக்கத்தை உறுதி செய்யாது. ஆனால், பிளவுபட்ட சமூகங்களைப் பகிரப்பட்ட பொருளாதார வாய்ப்பின் அடிப்படையில் ஒன்றிணைக்கும் நோக்கத்துடன் அது செயல்பட்டால், நல்லிணக்கம் உருவாகத் தொடங்கும். திட்டம் மாறுவதில்லை; அதன் நோக்கமே மாறுகிறது.

கொலம்பியாவில், ரோட்டரியின் 'அமைதி மற்றும் வளமைக்கான பாதைகள்' திட்டம் இதைச் செயல்முறையில் காட்டுகிறது. பல தசாப்தங்களாக ஆயுத மோதல் மற்றும் இடப்பெயர்வால் பாதிக்கப்பட்ட சமூகங்களுடன் பணிபுரியும் இந்தத் திட்டம்,



பொருளாதார அதிகாரமளிப்பை மோதல் தீர்வுப் பயிற்சி மற்றும் சமூகங்கள் முன்னெடுக்கும் நல்லிணக்கத்துடன் இணைக்கிறது. அமைதி விரும்பப்பட்ட பக்கவிளைவாக இருக்கவில்லை; அது திட்ட வடிவமைப்பின் மையமாக இருந்தது. நாம் அனைவரும் பின்பற்ற வேண்டிய அளவுகோல் இதுவே.

அடுத்த திட்டத்தைத் திட்டமிடும்போது, அதன் கவனத்துறை எதுவாக இருந்தாலும், ஒரு கணம் நின்று இந்தக் கேள்வியைக் கேளுங்கள்: "இது அமைதிக்கான சூழலை எவ்வாறு உருவாக்குகிறது?" நேர்மறை அமைதியின் தூண்களைப் பாருங்கள். உங்கள் பணியுடன் அவை இணையும் இடத்தைக் கண்டறியுங்கள். பின்னர், அந்த இணைப்பை நோக்கமுடையதாக மாற்றுங்கள். நீங்கள் கண்டறிவதை உங்கள் சங்கம், மாவட்டம் மற்றும் சமூகத்துடன் பகிருங்கள்.

அமைதியை அடைய வேண்டிய இலக்காக அல்லாமல் நடைமுறையாகப் பேசத் தொடங்கும் அளவுக்கு, அது நாம் செய்வதனைத்தையும் இயல்பாக வடிவமைக்கும். இது வேறுபட்ட பணியைச் செய்வதைப் பற்றியது அல்ல. அதிக விழிப்புணர்வு, உயர்ந்த நோக்கம், நாம் உருவாக்க விரும்பும் உலகைப் பற்றிய தெளிவான பார்வை ஆகியவற்றுடன் நமது பணியை வேறுவிதமாகச் செய்வதைப் பற்றியது. ஒவ்வொரு ரோட்டரி திட்டத்திலும் திறன் உள்ளது. தற்செயலால் அல்ல, நமது தேர்வால் அதை வெளிக்கொணர்வதே நமது பணி.

**ஓலாயின்கா பாபலோலா**
தலைவர், ரோட்டரி இன்டர்நேஷனல்

RI தலைவரிடமிருந்து...



# ஒவ்வொரு குழந்தையின் கல்விக்கனவு

மாணவர் போராட்டங்கள், வினாத்தாள் கசிவுகள், காவல்துறையின் தடியடி-சமீப நாட்களில் இவையே நமது சிந்தனையை ஆக்கிரமித்துள்ளன. இதில் யார் சரி, யார் தவறு என்பதை ஒதுக்கிவிட்டு, நாட்டைச் சூழ்ந்துள்ள இந்தச் சுழலின் அடிப்படைக் காரணத்தைப் பார்ப்போம். அதனை அழகாக ஒரே சொல்லில் கூறலாம்: “கனவு” அல்லது “ஆர்வம்”.

சாதி, சமூகம், வர்க்கம், மதம், கிராமம், நகரம் என எல்லா வேறுபாடுகளையும் கடந்து நிற்கும் கனவு இது. நமது இளைஞர்களும் அவர்களது பெற்றோரும், கிடைக்கக்கூடிய மிகச் சிறந்த கல்வியைப் பெற வேண்டும் என்று விரும்புகிறார்கள். குறிப்பாக ஏழ்மையான குடும்பங்களைச் சேர்ந்த பெற்றோர், அதற்காகத் தங்கள் வளங்களை நம்ப முடியாத அளவுக்கு நீட்டிக்கத் தயாராக இருக்கிறார்கள்.

எனது 45 ஆண்டுகளுக்கும் மேலான பத்திரிகைப் பயணத்தில் இந்தியாவின் சிறிய, பெரிய கிராமங்கள் பலவற்றுக்குச் சென்றிருக்கிறேன். சிறு, குறு விவசாயிகள், தினக்கூலித் தொழிலாளர்கள், சுயஉதவிக் குழுப் பெண்கள் ஆகியோரின் குடும்பங்கள், தங்கள் குழந்தைகள் தனியார் பள்ளிகளில் படிப்பதாகப் பெருமையுடன் கூறியுள்ளனர். அரசுப் பள்ளிகள் பற்றிய கருத்தும் யதார்த்தமும் திருப்திகரமாக இல்லாததால், குழந்தைகளைத் தனியார் பள்ளிகளில் படிக்க வைக்க ஒரு வேளை உணவைக்கூடத் தியாகம் செய்ய அவர்கள் மகிழ்ச்சியுடன் தயாராக இருக்கிறார்கள்.

வீட்டு உதவியாளர்கள், தற்காலிகத் தொழிலாளர்கள் பலரிடமிருந்து நாம் கேட்டிருக்கும் சொற்றொடர் இதுதான்: “வயிற்றைக் கட்டி குழந்தையைப் படிக்க வைத்தோம்.” அதாவது, அடிப்படைத் தேவைகளையும் உணவையும் குறைத்துக்கொண்டு குழந்தையின் கல்விக்காகத் தியாகம் செய்தோம் என்பதே அதன் பொருள்.

இந்தியர்கள் கல்விக்கும் அதிக மதிப்பெண்களுக்கும் அளிக்கும் பெரும் முக்கியத்துவத்தை விளக்க, புகழ்பெற்ற அமெரிக்க அரசியல் விமர்சகரும் எழுத்தாளருமான தாமஸ் ஃபிரீட்மன் 2005-ல் எழுதிய The World is Flat நூலைவிடச் சிறந்த உதாரணம் இருக்க முடியாது. உலகமயமாக்கல் தொடங்கிய காலத்தில் எழுதப்பட்ட அந்த நூலில், அவர் தனது இரு மகள்களிடம் கூறுகிறார்: “பெண்களே, நான் வளர்ந்தபோது என் பெற்றோர், ‘டாம், இரவு உணவை முடி; சீனாவிலும் இந்தியாவிலும் மக்கள் பட்டினியாக இருக்கிறார்கள்’ என்பார்கள். நான் உங்களுக்குச் சொல்வது: வீட்டுப்பாடத்தை முடித்துவிடுங்கள்; சீனாவிலும் இந்தியாவிலும் மக்கள் உங்கள் வேலைகளுக்காகத் துடிக்கிறார்கள்.”

பெங்களூருக்குப் பயணம் செய்தபோது, கல்வியறிவு பெற்ற இளம் இந்தியர்கள் தொழில்நுட்பத்தைத் தழுவி, அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளிடமிருந்து வெளிப்பணியாக வரும் பல சேவைகளை மிகக் குறைந்த செலவில் வழங்கியதைக் கண்டு ஃபிரீட்மன் வியந்தார். உலகம் எல்லைகளற்றதாக மாறியபோது, தொழில் நுட்ப அறிவும் திறமையும் கொண்ட இந்திய, சீன இளைஞர்கள், அதிக ஊதியம் தரும் வேலைகளுக்காக அமெரிக்க இளைஞர்களுடன் போட்டியிட்டனர். பெங்களூரிலோ பெய்ஜிங்கிலோ ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் தொலைவில் அமர்ந்தபடியே இதைச் செய்ய தொழில்நுட்பமும் டிஜிட்டல்மயமும் வழிவகுத்தன.

சுருக்கமாகச் சொன்னால், கல்வி வேலைவாய்ப்பைத் தருகிறது; நல்ல கல்வி சிறந்த வேலைவாய்ப்பையும் ஒளிமயமான எதிர்காலத்தையும் தருகிறது. அதனால்தான் உலகம் முழுவதும், குறிப்பாக இந்தியாவில், ரோட்டரியன்கள் எழுத்தறிவு, கல்வி, குறிப்பாக வசதியற்றோரின் கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறார்கள். இம்மாத அட்டைப்படக் கட்டுரையில் RC பாம்பே செய்திருப்பதைப் போல, டிஜிட்டல் வகுப்பறைகள், நூலகங்கள், நவீன ஆய்வகங்களை உருவாக்கி வருகின்றனர்.

ஆனால் 2005-ஐ ஒப்பிடுகையில், இன்று படித்தவர்களின் எண்ணிக்கை பெருகியுள்ளதால் வேலைவாய்ப்புச் சந்தை சுருங்கிவருகிறது. செயற்கை நுண்ணறிவுக் காலத்தின் தொடக்கமும் இளைஞர்களை அச்சம், பாதுகாப்பின்மை, பதற்றத்தில் ஆழ்த்துகிறது. அதிகாரமும் செல்வாக்கும் கொண்ட மூத்த தலைமுறையினர், இளைஞர்களின் கனவுகளை நிறைவேற்ற இயன்ற அனைத்தையும் செய்ய வேண்டும். அவர்களுக்குத் தேவை நேர்மையான, வெளிப்படையான, நம்பிக்கை, வளமை, வெற்றியளிக்கும் எதிர்காலத்தை உறுதிசெய்யும் கல்வி அமைப்பு.

இந்தச் சூழலில் ஒரு நம்பிக்கையளிக்கும் முன்னேற்றமாக, தேர்வுச் சீர்திருத்தப் பணிக்குழுவை, தொழில்நுட்ப முன்னோடியும் ஆதார் நிறுவனத் தலைவருமான நந்தன் நிலேகனி தலைமையில் இந்திய அரசு அமைத்துள்ளது. நமது குழந்தைகள் சிறந்ததற்கே தகுதியானவர்கள்; அதற்குக் குறைவான எதற்கும் அல்ல. நல்லதே நடக்கும் என நம்புவோம்.



ரஷீதா பகத்

ADVT.


SHIKHAR
Proud Partner of
Rotarians
Across India
Creating Memorable
Journeys for Rotarians
Worldwide
Leave the details to us.
Live every moment, stress free.
Shikhar Travels India Pvt Ltd
HOTEL
Hotels
Transportation
On Trip Support
VISA
Visa
Experiences
EVERY DETAIL TAKEN CARE OF. ALL YOU DO IS ENJOY
Whether you're travelling for a Rotary Convention, a club fellowship tour, a family holiday, or an international adventure, Shikhar Travels ensures every detail is taken care of.
Travel with confidence. Travel in Good Company.
Exclusive Benefits for
Rotary Members
• Personalised Travel Planning
• Exclusive Group Departures
• Member-only Travel Benefits
Since 1979
Trusted by 1000+ Rotarians
& Travellers
Scan to Explore
Exclusive Tours
+91 97178 91151
tours@shikhar.com
www.shikhar.com
M 66, Ground Floor, Lajpat
Nagar 2, New Delhi 110024

# RI இயக்குனர் செய்தி



## அனைத்தும் சங்கத்திலிருந்தே தொடங்குகிறது

ஒவ்வோர் ஆண்டும் ரோட்டரி அமைதியாகத் தன்னைப் புதுப்பித்துக்கொள்கிறது. உலகெங்கிலும் ஆளுநர்கள், உதவி ஆளுநர்கள், சங்கத் தலைவர்கள் மற்றும் மாவட்டத் தலைவர்கள் புதிய பொறுப்புகளை ஏற்கின்றனர். பழக்கமான நடைமுறைகளுக்குப் பதிலாகப் புதிய சிந்தனைகள் தோன்றுகின்றன; புதிய அணிகள் ஒன்றிணைகின்றன; சங்கங்கள் சேவையின் புதிய அத்தியாயத்தைத் தொடங்குகின்றன. ஆனால் ரோட்டரியின் எதிர்காலம் பதவியேற்பு விழாவில் அரிதாகவே தீர்மானிக்கப்படுகிறது. ஒவ்வொரு சங்கமும்-நாம் உருவாக்கும் அனுபவங்கள், வளர்க்கும் நட்புகள், வழங்கும் சேவை வாய்ப்புகள் மூலமாகவே வடிவம் பெறுகிறது.

ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் யின்கா பபலோலா, அவரது அன்புத் துணைவி ஆன் ப்ரசியுடன் இணைந்து, “நீடித்த தாக்கத்தை உருவாக்குவோம்” என அழைப்பு விடுத்துள்ளார். செயல்பாடுகளைத் தாண்டி, நிலைத்திருக்கும் விளைவுகளில் கவனம் செலுத்துமாறு இந்தக் கருப்பொருள் நம்மைத் தூண்டுகிறது. சமூகங்களை வலுப்படுத்தும்போது, தலைவர்களை உருவாக்கும்போது, திட்டம் முடிந்த பின்னரும் ஊக்கமளிக்கும் சங்கங்களை அமைக்கும்போதுதான் நீடித்த தாக்கம் உருவாகிறது.

எனவே உறுப்பினர் சேர்க்கை மற்றும் புதிய சங்க வளர்ச்சி மாதமான ஆகஸ்ட் சிறப்பான முக்கியத்துவம் பெறுகிறது. உறுப்பினர் வளர்ச்சியை எண்ணிக்கையின் அடிப்படையில் பார்க்கிறோம்; ஆனால் நிலையான வளர்ச்சி, சேர்ந்திருப்பதற்கான உணர்விலிருந்து தொடங்குகிறது. ஒவ்வொரு புதிய உறுப்பினரும் உற்சாகம், புதிய யோசனைகள், சேவை செய்யும் உண்மையான விருப்பத்துடன் வருகிறார். அந்த உற்சாகம் வளரவோ மங்கவோ செய்வது, சங்கத்தில் அவர்கள் அனுபவிக்கும் பண்பாட்டைப் பொறுத்தே அமைகிறது.

உலகெங்கிலும் உறுப்பினர்களைத் தக்கவைத்தல் நமது பெரிய சவால்களில் ஒன்றாக உள்ளது. வரவேற்கப்படுவதாகவும், மதிக்கப்படுவதாகவும், பங்கேற்கச் செய்யப்படுவதாகவும், பாராட்டப்படுவதாகவும் உணருமிடத்தில்தான் மக்கள் நீடித்து இருப்பார்கள். பங்கேற்பை ஊக்குவிக்கும், புதிய சிந்தனைகளை ஏற்கும், வளர்ந்து வரும் தலைவர்களுக்கு வழிகாட்டும், அர்த்தமுள்ள நட்புறவை உருவாக்கும் சங்கங்கள் எப்போதும் துடிப்புடன் இருக்கும். ஆகவே உறுப்பினர் சேர்க்கை என்பது ஒரு குழுவின் பொறுப்பல்ல; ஒவ்வொரு ரோட்டேரியனின் பொறுப்பாகும்.

இதனால்தான் ரோட்டரியின் செயல் திட்டம் இன்று மிகவும் பொருத்தமானதாக உள்ளது. தாக்கத்தை அதிகரித்தல், சென்றடைவதை விரிவுபடுத்தல், பங்கேற்பாளர் ஈடுபாட்டை மேம்படுத்தல், மாற்றத்துக்கு ஏற்பத் தழுவும் திறனை உயர்த்தல் என்ற அதன் நான்கு முன்னுரிமைகள் ஆரோக்கியமான ரோட்டரியின் அடித்தளங்களைத் தொடுகின்றன. அவை வெறும் உத்திசார் இலக்குகள் அல்ல; சங்கங்கள் எதிர்கொள்ளும் பல சவால்களுக்கான நடைமுறைத் தீர்வுகளும் ஆகும். அவற்றை முழுமனதுடன் ஏற்றுக்கொண்டால், வலுவான உறுப்பினர் தளம், அதிக ஈடுபாடு, அர்த்தமுள்ள சேவை இயல்பாகத் தொடரும்.

ரோட்டரி குடும்பத்தை விரிவுபடுத்துவதும் சம அளவு முக்கியம். ரோட்டரி, ரோட்டராக்ட், இன்டராக்ட் ஆகியவற்றை வலுப்படுத்தும் 1:2:3 வளர்ச்சி மந்திரம், வளர்ச்சி என்பது எண்ணிக்கையல்ல என்பதை நினைவூட்டுகிறது. ஒவ்வொரு புதிய சங்கமும் மேலும் பலருக்குச் சேவை, தலைமைத்துவம், சமூகத் தேவை களுக்குப் பதிலளிக்கும் வாய்ப்பைத் திறக்கிறது. இதன் மூலம் ரோட்டரி துடிப்புடனும் பொருத்தத்துடனும் எதிர்காலத்துக்குத் தயாராகவும் இருக்கும்.

இந்தப் புதிய ரோட்டரி ஆண்டு வேகமெடுக்கும்போது, ஒவ்வொரு தொடக்கமும் தரும் நம்பிக்கையை ஏற்றுக் கொள்வோம். நட்புறவுக்கு முன் நண்பர்களையும், பதவிக்கு முன் நோக்கத்தையும், கடமைக்கு முன் வாய்ப்பையும் மக்கள் காணும் சங்கங்களை அமைப்போம். கூட்டங்கள் முடிந்த பின்னரும் உறுப்பினர்கள் நினைவில் வைத்திருக்கும் அனுபவங்களை உருவாக்குவோம். நாம் சொன்னதையோ செய்ததையோ மக்கள் மறந்தாலும், ரோட்டரி அவர்களை எப்படி உணர வைத்தது என்பதை என்றும் நினைவில் கொள்வார்கள்.

அதைச் சரியாகச் செய்தால், உறுப்பினர் வளர்ச்சி ஏற்படும்; தலைமைத்துவம் செழிக்கும்; நாம் அனைவரும் இணைந்து உண்மையிலேயே நீடித்த தாக்கத்தை உருவாக்குவோம்.

**KP நாகேஷ்**
RI இயக்குநர், 2025–27

2027
மாநாடு

# மாநாட்டுடன் இனிய சுற்றுலாவும்



ரோட்டரி இன்டர்நேஷனல் மாநாட்டின் கூடுதல் சிறப்பு, உற்சாகமூட்டும் கலாசார நகரத்தின் இதயத்துக்கே உங்களை அழைத்துச் செல்வதுதான். ஜூன் 26–30 நடைபெறும் மாநாட்டின் நகரமான பார்சிலோனா இதற்கு விதிவிலக்கல்ல. துடிப்பான தெருவாழ்க்கை, பிரமிக்கவைக்கும் கலை மற்றும் கட்டடக்கலை, பாரம்பரிய கத்தலான் உணவு ஆகியவற்றை அனுபவிக்க ஆண்டுதோறும் லட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகிறார்கள்.

தெற்கு ஐரோப்பாவையும் மத்தியதரைக் கடல் பகுதியையும் சுற்றிப்பார்க்க பார்சிலோனா சிறந்த மையமாகும். மாநாட்டின் நட்புறவு இல்லத்தில் பல்வேறு உலகக் கலாசாரங்களை அறிந்த பின், உலகளாவிய பொழுதுபோக்கு மற்றும் ஊக்கமளிக்கும் முக்கிய நிகழ்வுகளைக் கண்டு மகிழ்ந்த பின், ஸ்பெயினில் தங்கியோ ஐரோப்பாவைச் சுற்றியோ எளிய விடுமுறையைத் திட்டமிடலாம்.

குடும்பத்துடன் ரசிக்க ஏராளமான இடங்கள் உள்ளன: தேவதைக் கதையை நினைவூட்டும் பார்க் குவெல் முதல் லா பார்சிலோனெட்டா கடற்கரை வரை. ரயில் மற்றும் விமான இணைப்புகள் மூலம் மயோர்கா, இபிசா தீவுகளுக்கும் செல்லலாம். அதிவேக ரயிலில் மாட்ரிட் மற்றும் பிற ஸ்பெயின் நகரங்களுக்கும், பாரிஸ், லியோன், மார்செய் உள்ளிட்ட பிரெஞ்சு நகரங்களுக்கும் எளிதில் பயணிக்கலாம்.

பயணத் துணை தேடுகிறீர்களா? மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் வடிவமைக்கும் சிறப்புப் பயண அனுபவங்களில் இணையுங்கள்; அல்லது குடும்பத்தினரையும் உடன் அழைத்துச் செல்லுங்கள். பிரமாண்ட மேடை நிகழ்வுகள், புகழ்பெற்ற பேச்சாளர்கள், தொடக்கக் கொடியேற்ற விழா உள்ளிட்ட மறக்கமுடியாத தருணங்கள் அனைவரையும் கவரும். இது எளிதாகத் திட்டமிடக்கூடிய விடுமுறை.

**Registration opens in September. Sign up for email updates and special promotional rates at *convention.rotary.org*.**



**ஆளுநர் குழு**

| | |
|---|---|
| RID 2981 | வைத்தியநாதன் K |
| RID 2982 | செந்தில்குமார் C |
| RID 3000 | R B S மணி |
| RID 3011 | அஜீத் ஜலான் |
| RID 3012 | அமித் குப்தா |
| RID 3020 | ஸ்ரீராம் குட்டிகொண்டா |
| RID 3030 | ராஜேஷ் V பாட்டீல் |
| RID 3040 | சன்ஸ்கர் கோத்தாரி |
| RID 3053 | பிரிஜ் மோகன் அகர்வால் |
| RID 3055 | நைமிஷ் N ராவணி |
| RID 3056 | அருண் பகாடியா |
| RID 3060 | நிலேஷ் R ஷா |
| RID 3070 | அனில் குமார் சிங்கல் |
| RID 3080 | ரீட்டா கல்ரா |
| RID 3090 | அமித் குமார் |
| RID 3100 | பாயல் கௌர் |
| RID 3110 | ஜஸ்பீர் சிங் பாட்டியா |
| RID 3120 | பூனம் குலாட்டி |
| RID 3131 | நிதின் S தாமலே |
| RID 3132 | ஜெயேஷ் R படேல் |
| RID 3141 | ராஜன் துவா |
| RID 3142 | நிலேஷ் V ஜாவந்த் |
| RID 3150 | உதய் சுதிர் பிலானி |
| RID 3160 | கேசவ் ரெட்டி P |
| RID 3170 | லென்னி டா கோஸ்டா |
| RID 3181 | சதீஷ் போலார் |
| RID 3182 | B M பட் |
| RID 3191 | அனில் குப்தா |
| RID 3192 | ரவிசங்கர் டகோஜு |
| RID 3203 | K பூபதி |
| RID 3204 | M V மோகன்தாஸ் மேனன் |
| RID 3205 | ஜோஷி சாக்கோ |
| RID 3206 | R S மாருதி |
| RID 3211 | K G நாயர் |
| RID 3212 | காந்தி கிருஷ்ணன் |
| RID 3231 | T S ரவிக்குமார் |
| RID 3233 | ஸ்ரீராம் துவ்வுரி |
| RID 3234 | சுரேஷ் D ஜெயின் |
| RID 3240 | அசிம் காந்தி A |
| RID 3250 | அனு நரங் |
| RID 3261 | ஆலம் S ரூப்ரா |
| RID 3262 | அனில் குமார் சமல் |
| RID 3291 | தபஸ் பட்டாச்சார்யா |

அச்சு மற்றும் பதிப்பாளர் P T **பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது.

ஆசிரியர்: **ரஷீதா பகத்.**

கட்டுரைகளை திருத்தவோ/சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.

This periodical is published by **PT Prabhakar** from Dugar Towers 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008, on behalf of **Rotary News Trust**, edited by **Rasheeda Bhagat** and printed by **Rasi Graphics** at 40 Peters Road, Royapettah, Chennai 600 014, India.

**அறங்காவலர் குழுவினர்**

| | |
|---|---|
| K P நாகேஷ்<br>RI இயக்குனர் மற்றும்<br>RNT தலைவர் | RID 3191 |
| M முருகானந்தம்<br>RI துணைத்தலைவர்<br>மற்றும் இயக்குநர் | RID 3000 |
| A S வெங்கடேஷ்<br>TRF அறங்காவலர் | RID 3234 |
| ராஜேந்திர K சாபூ | RID 3080 |
| கல்யாண் பானர்ஜி | RID 3060 |
| சேகர் மேத்தா | RID 3291 |
| அசோக் மகாஜன் | RID 3141 |
| P T பிரபாகர் | RID 3234 |
| Dr மனோஜ் D தேசாய் | RID 3060 |
| C பாஸ்கர் | RID 3000 |
| கமல் சங்வி | RID 3250 |
| Dr பரத் பாண்ட்யா | RID 3141 |
| Dr மகேஷ் கோட்பாகி | RID 3131 |
| ராஜு சுப்ரமணியன் | RID 3141 |
| அனிருதா ராய்சௌத்ரி | RID 3291 |
| குர்ஜீத் சிங் சேகோன் | RID 3070 |
| குலாம் A வஹன்வதி | RID 3141 |

**செயற்குழு**
**உறுப்பினர்கள்** (2026–27)

| | |
|---|---|
| பாயல் கௌர்<br>தலைவர், ஆளுநர் குழு | RID 3100 |
| லென்னி டா கோஸ்டா<br>துணைத்தலைவர்,<br>ஆளுநர் குழு | RID 3170 |
| R சுப்ரமணி<br>செயலாளர், ஆளுநர் குழு | RID 3000 |
| அஜீத் ஜலான்<br>பொருளாளர், ஆளுநர் குழு | RID 3011 |

**ஆசிரியர்**
ரஷீதா பகத்

**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும்**
**விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

Contributions are welcome but will be edited. Content can be reproduced with permission and attributed to RNT.

**TRF**
**தலைவரிடமிருந்து...**



# எல்லைகளைக் கடக்கும் பரிவு

மருத்துவமனையில் என் தந்தையின் அருகில் அமர்ந்திருந்த போது, அவரது குரலைவிட இப்போது சீராகப் பேசிக்கொண்டிருந்த இயந்திரங்களின் மெல்லிய ஓசையைக் கேட்டேன். அந்தக் கணத்தில் வாழ்க்கை அதன் அடிப்படைகளுக்கு வந்ததுபோல் உணர்ந்தேன். கடுமையான நோய் அப்படித்தான் செய்கிறது. எது முக்கியம் என்பதை வெளிப்படுத்துவதுடன், நம் அனைவருக்கும் முக்கியமாக இருக்க வேண்டியவற்றை மென்மையாகவோ வேதனையுடனோ நினைவூட்டுகிறது.

என் தந்தை முற்றிய புற்றுநோயை எதிர் கொண்டிருந்தார். பாதை சீரற்றதாகவும் பல நேரங்களில் கொடுமையானதாகவும் இருந்தது. இருப்பினும், அந்தக் கடினமான தருணங்களில்கூட ஒரு எளிய உண்மை மனதில் பதிந்தது: எங்கிருந்தாலும் ஒவ்வொருவருக்கும், அவர்களின் கண்ணியத்தை மதிக்கும் மருத்துவப் பராமரிப்பு கிடைக்க வேண்டும். சிகிச்சை மட்டுமல்ல, பரிவும் வேண்டும். மருந்து மட்டுமல்ல, அவர்களின் வாழ்க்கை மதிப்புமிக்கது என்ற உறுதியும் வேண்டும்.

செவிலியர்கள் பழகிய நேர்த்தியுடன் செயல்படுவதையும், மருத்துவர்கள் நேர்மையையும் நம்பிக்கையையும் வழங்குவதையும் பார்த்தபோது, கோடிக் கணக்கானோர் இத்தகைய ஆதரவைப் பெற மாட்டார்கள் என்ற எண்ணம் வந்தது. அவர்களது வாழ்க்கை குறைவான மதிப்புடையது என்பதற்காக அல்ல; நாடுகள், சமூகங்களிடையே மருத்துவ அணுகல் இன்னும் சமமாக இல்லாததால். இது அரசியல் வாதமல்ல; மனிதநேயக் கேள்வி.

ஒவ்வொரு குடும்பமும் குணமடைவதற்கான ஒரே வாய்ப்பைப் பெற வேண்டும். ரோட்டரியில் எனது ஆண்டுகள் எனக்குக் கற்றுத்தந்தது, இந்த நம்பிக்கையைப் பல கலாசாரங்களும் நாடுகளும் பகிர்கின்றன என்பதை தி ரோட்டரி ஃபவுண்டேஷன் நமக்குக் காட்டுகிறது என்பதே. நோய் தடுப்பு, சிகிச்சைக்கான சர்வதேச மேம்பாட்டு நிதி குறைந்துவரும் இந்த நேரத்தில், அத்தியாவசிய சுகாதாரத் திட்டங்கள் வேகம் இழக்கும் அபாயம் உள்ளது. அதைத் தடுக்கத் தேவையான சமூக அடிப்படையிலான ஆதரவை நமது அறக்கட்டளையும் அதன் உறுப்பினர்களான நீங்களும் வழங்குகிறீர்கள்.

பாகிஸ்தானில் தடுப்பூசிகளுக்கும், மொசாம்பிக்கில் சுகாதாரப் பணியாளர்களுக்குப் பயிற்சிக்கும், குவாதமாலாவில் பலவீனமான சுகாதார அமைப்புகளை வலுப்படுத்து வதற்கும் நாம் நிதியளிக்கிறோம். அறக்கட்டளை வழியாக, சர்வதேச ஒத்துழைப்பு என்பது வெறும் கோட்பாடல்ல. தாராளம், கூட்டாண்மை, பகிரப்பட்ட மனித நேயத்துடன் செயல்படத் தேர்ந்தெடுக்கும்போது அது நிறைவேற்றக்கூடிய பொறுப்பு. நமது கூட்டு தலைமை குறித்து நான் பெருமைப்படுகிறேன்.

உறக்கத்துக்கும் விழிப்புக்கும் இடையில் இருந்த என் தந்தையின் கையைப் பிடித்தபோது, வாழ்க்கை எவ்வளவு மென்மையானது, விலைமதிப்பற்றது என்பதை மீண்டும் உணர்ந்தேன். நியாயம் நிலவும் உலகின் அளவுகோல் அதன் செல்வமோ அதிகாரமோ அல்ல; பாதிக்கப்படக்கூடியவர்களை அது எவ்வளவு உறுதியாகப் பாதுகாக்கிறது என்பதே.

என் தந்தையின் போராட்டம் தனிப்பட்டது; துரதிர்ஷ்டவசமாக, அவர் ஜூனில் மறைந்தார். ஆனால் ஒவ்வொரு உயிரையும் சமமாக மதிக்கும், சமமான மற்றும் பரிவான மருத்துவப் பராமரிப்புக்கான போராட்டம் உலகளாவியது. அது நம் அனைவருக்கும் உரியது. நமது அறக்கட்டளைக்கான உங்கள் தாராளமும் அர்ப்பணிப்பும், எல்லைகளைக் கடந்து அக்கறை காட்டும் எளிய செயலும், யாரும் புறக்கணிக்கப்படாத உலகத்திற்கு நம்மை நெருக்கமாக்குகின்றன.

**ஜெனிபர் ஜோன்ஸ்**
TRF அறங்காவலர் தலைவர்

# IT கனவுகளுக்கு இறக்கை கொடுக்கும் RC பாம்பே

ரஷீதா பகத்



*RC பாம்பே அமைத்த பள்ளியின் IT இன்னோவேஷன் லேபில் தாங்கள் உருவாக்கிய மாதிரிகளுடன் மாணவர்கள்.*



RID 3141-ன் RC பாம்பே சங்கத்தின் ஒரு முன்னோடித் திட்டம், தன்னுடைய IT இன்னோவேஷன் லேப்கள் மற்றும் கரியர் பவுண்டேஷன் லேர்னிங் சென்டர்கள் (CFLC) மூலம், பின்தங்கிய மற்றும் கீழ்-நடுத்தர வர்க்கக் குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களிடையே IT கல்வியறிவையும் தொழில்நுட்பத் திறன்களையும் தீவிரமாக ஊக்குவிப்பதாகும். மும்பைக்கு அருகிலுள்ள பால்கர், வாடா, போய்சர், தஹானு போன்ற பகுதிகளில் உள்ள பின்தங்கிய சமூக மாணவர்களை இது இலக்காகக் கொண்டுள்ளது.

RC பாம்பே (RCB) உறுப்பினரான PDG சந்தீப் அகர்வாலாவால் வடிவமைக்கப்பட்ட இத்திட்டம் பற்றி அவர் விளக்குகிறார்: “AI மற்றும் இது போன்ற திறன்கள் பிரபலமான வார்த்தையாக மாறுவதற்கு வெகு காலத்திற்கு முன்பே, 2022–23-ல் நான் DG-யாக இருந்த போது, பால்கரில் ஒரு தொண்டு நிறுவனப் பள்ளியில் இதுபோன்ற முதல் ஆய்வகத்தை அமைத்தேன். இது மராத்தி மொழி மூலப் பள்ளியாக இருந்தாலும், மாணவர்களுக்கு IT பற்றி எந்தப் பின்னணியும் இல்லாவிட்டாலும், எதிர்கால தொழில்களை ஏற்றுக்கொள்ள இந்த மாணவர்களை தயார்படுத்த வேண்டும் என்ற எங்கள் தீர்மானத்தில் உறுதியாக இருந்தோம்.”

“நான்கு ஆண்டுகளுக்குள் AI உலகையே ஆக்கிரமிக்கும் என்று யாருக்குத் தெரியும்? எட்டாம் வகுப்பிலிருந்தே தொடங்கி, மாணவர்களை AI, ரோபாட்டிக்ஸ், IoT, 3D பிரிண்டிங், தரவு அமைப்புகளில் திறமையாக்கியுள்ளோம்” என்று அவர் மேலும் கூறுகிறார்.

முக்கியத் திட்டங்களில் ரோபாட்டிக்ஸ், IoT, 3D பிரிண்டிங், தரவு அறிவியல் ஆகியவற்றில் பயிற்சி அடங்கும். கிராமப்புற மகாராஷ்டிராவில் (போய்சர், பால்கர்) சங்கம் பல STEM ஆய்வகங்களை அமைத்து, நேரடி கற்றலை ஊக்குவிக்கிறது. RCB IT ஆய்வகங்களைச் சேர்ந்த மாணவர்கள் தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்று, IoT மற்றும் AI கண்டுபிடிப்புகளை வெளிப்படுத்தியுள்ளனர். பாவிஷ்ய யான் மற்றும் லைட்ஹவுஸ் ஆகியவை,

மாணவர்களின் வேலைவாய்ப்பு திறனை மேம்படுத்த IT கற்றலையும் அறிவியல் அடிப்படையிலான கல்வியையும் ஒருங்கிணைக்கும் திட்டங்களாகும். “பின்தங்கிய பின்னணி கொண்ட மாணவர்களுக்கு நடைமுறை தொழில்நுட்பத் திறன்களை வழங்கி, டிஜிட்டல் இடைவெளியைக் குறைப்பதே இந்த முயற்சிகளின் நோக்கம்” என்று RCB-யின் முன்னாள் தலைவர் வினீத் பட்நாகர் கூறுகிறார்.

IT இன்னோவேஷன் குழுவின் இணைத் தலைவரான உதய் சங்கானி, இது வெறும் ஆய்வகங்களைத் திறந்து, இளைஞர்களுக்கு கணினி அணுகலையும் அடிப்படை IT திறன்களையும் வழங்குவதை விட மிகவும் அதிகமானது என்று விளக்குகிறார். “மிகவும் முன்னோக்கிய, எதிர்கால IT திறன்களையும் தொழில்நுட்பங்களையும்






*ஒரு மாணவி தனது திட்டப்பணி குறித்து பார்வையாளர்களிடம் விளக்குகிறார்.*







ரஷீதா பகத்

இளைஞர்களுக்கு வழங்கும் ஆய்வகங்களை நாங்கள் அமைக்க விரும்பினோம் – இவை புதுமையானவை மட்டுமல்ல, 3D பிரிண்டிங், ரோபாட்டிக்ஸ் மற்றும் பிற தானியங்கு பயன்பாடுகளில் உறுதியான முடிவுகளைப் பெற உதவும்.”

சிலிக்கான் வேலியிலிருந்து இந்தியா திரும்பி மும்பையில் குடியேறிய இரு பிரவாசிகளால் தொடங்கப்பட்ட க்ரோக் லேர்னிங் என்ற நிறுவனத்துடன் இணைந்து இந்த ஆய்வகங்கள் உருவாக்கப்பட்டன. சாஹினில் உள்ள ஒரு மராத்தி பள்ளியில் அவர்கள் ஒரு மாதிரி IT ஆய்வகத்தை அமைத்திருந்தனர்; இளைஞர்களுக்காக ஒரு IT திட்டத்தைச் செய்ய விரும்பிய சங்கானியும் RC பாம்பேயின் மற்ற சில உறுப்பினர்களும் இதைப் பார்வையிட்டனர்.

இந்த கருத்தையும் ஆய்வகத்தையும் பிடித்த அவர்கள், RID 3141-ன் கீழ் வரும் ஆதிவாசி பகுதியான பால்கரில் இதேபோன்ற ஆய்வகத்தைத் தொடங்க முடிவு செய்தனர். இதன் விளைவாக, நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, பால்கரில், இந்த ரோட்டேரியன்கள் ஒரு அறக்கட்டளையால் நடத்தப் படும் பள்ளியை அடையாளம் கண்டனர்; அது 1,500 சதுர அடி அறையை வழங்கியது, இதனை அறிவுப் பங்குதாரருடன் சேர்ந்து ஆய்வகமாக வடிவமைத்து மாற்றினர். சங்க உறுப்பினரான யோகேஷ் மஹன்சாரியா, தனது நிறுவனமான மஹன்சாரியா டயர்ஸ் மூலம் இந்த ஆய்வகத்திற்கு CSR நிதி வழங்க முன்வந்தார்; கடந்த நான்கு ஆண்டுகளாக சங்கம் அமைத்துள்ள மற்ற ஆய்வகங்களுக்கும் தொடர்ந்து ஆதரவளித்து வருகிறார்.

அடுத்த ஆய்வகம் வாடாவில் உள்ள ஒரு பள்ளியிலும், பின்னர் போய்சரிலும் அமைக்கப்பட்டது. மொத்தத்தில், 7 முதல் 11-ம் வகுப்பு வரையிலான பின்தங்கிய குடும்ப குழந்தைகளுக்காக தொண்டு நிறுவனப் பள்ளிகளில் நான்கு ஆய்வகங்கள் அமைக்கப்பட்டன. மனதைத் தொடும் விஷயம் என்னவென்றால், இதுவரை கிட்டத்தட்ட 10,000 மாணவர்கள்

இந்த RC பம்பாய் திட்டத்தால் பயனடைந்துள்ளனர், அவர்களில் 50 சதவீதம் பெண்கள்!

அடிப்படை முதல் சிறப்பு IT திறன்கள் வரை பயிற்சி பெற்று, ஆர்வத்துடன், பால்கரில் முதல் ஆய்வகத்தில் பயிற்சி பெற்ற பல குழந்தைகள் இப்போது கல்லூரி சென்று, முக்கியமாக பொறியியல் பட்டங்கள் அல்லது டிப்ளோமாக் களைப் பயின்று வருகின்றனர். இந்த ஆய்வகங்களில் நடக்கும் கற்பித்தல் மற்றும் கற்றல் முறை, "இன்னோவேஷன் IT-ல் அடிப்படை பயிற்சி" என்று சங்கத் தலைவர் பிமல் மேத்தா விளக்குகிறார். "எல்லாமே நடைமுறை சார்ந்தது, வகுப்பறை கோட்பாட்டுப் படிப்பு எதுவும் இல்லை. அவர்கள் நேரடித் திட்டங்களைச் செய்கிறார்கள், இதனால் கருத்துகளை நன்றாகப் புரிந்துகொள்ள முடிகிறது."

இது ஒரு நிரந்தர, நிலைத்த திட்டமாக இருக்க வேண்டும் என்பதால் சங்கம் பள்ளிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்வதாக சங்கானி மேலும் கூறுகிறார். "ஆய்வகத்திற்கு வரும் மாணவர்களில் 50 சதவீதம் உங்கள் பள்ளியிலிருந்தும், மற்ற 50 சதவீதம் சுற்றியுள்ள பள்ளிகளிலிருந்தும் இருக்க வேண்டும் என்று நிபந்தனை விதிக்கிறோம். பரந்த தாக்கத்தை ஏற்படுத்துவதே இதன் நோக்கம். சில நேரங்களில், அருகில் அதிக பள்ளிகள் இல்லாததால் இதைச் செய்ய முடியாமல் போகும்."

மாணவர்கள் எதற்கும் பணம் செலுத்த வேண்டியதில்லை. இந்தத் திட்டத்திற்கான ஆண்டு செலவான தோராயமாக ரூ.20 லட்சம் முழுவதும், சங்க உறுப்பினர்களின் நன்கொடைகள் மற்றும் மஹன்சாரியா டயர்ஸ் உள்ளிட்ட CSR நிதிகள் மூலம் ஈடுசெய்யப்படுகிறது.

தனது ஐந்தாம் ஆண்டில், இந்தத் திட்டத்தின் கற்றல் நோக்கம் கரியர் ஃபவுண்டேஷன் லேர்னிங் கிளாஸஸ் என்ற புதிய பகுதியுடன் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இது 9-ம் வகுப்பிலிருந்து தொடங்கி, போட்டித் தேர்வுகளுக்கு மாணவர்களை தயார்படுத்துவதை உள்ளடக்கியது, மற்றொரு அறிவுப் பங்குதாரருடன் இது செய்யப்படுகிறது. இந்தப் பாடநெறியில் ஸ்மார்ட் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் வகுப்பறை படிப்புகளும் மெய்நிகர் பயிற்சியும் அடங்கும். இரண்டு படிப்புகளும் ஒரே நேரத்தில் நடக்கின்றன.

இந்த யோசனை எப்படி உருவானது என்று கேட்டதற்கு, "கல்வியறிவில் ஈடுபட நாங்கள் எப்போதுமே விரும்பினோம், பெற்றோர்களாக IT திறன்களைப் பெறுவதன் முக்கியத்துவத்தை நாம்



*ஒரு ஸ்மார்ட் அக்ரிகல்சர் மாதிரி, (இடதிலிருந்து) RC பாம்பே தலைவர் பிமல் மேத்தா, IT இன்னோவேஷன் குழு இணைத் தலைவர் உதய் சங்காணி, ஸ்வாதி மாயேகர், பரிதோஷ் ரூங்டா மற்றும் சங்கத்தின் முன்னாள் தலைவர் வினீத் பட்நாகர் ஆகியோருக்கு விளக்கப்படுகிறது.*

அனைவரும் அறிவோம்” என்று சங்கானி கூறுகிறார்.

இந்தக் குழந்தைகளுக்கு அடிப்படை AI திறன்களும் கற்பிக்கப்படுகிறதா என்று கேட்டதற்கு, சில மாதங்களுக்கு முன்பு அமைக்கப்பட்ட, எல்ஃபின்ஸ்டோன் இன்ஸ்டிட்யூஷன் என்ற ITI-ல் உள்ள மேலும் மேம்பட்ட ஆய்வகத்தில் இது செய்யப்படுவதாக பட்நாகர் கூறுகிறார்; இது மும்பையின் மையப் பகுதியில், செயின்ட் சேவியர் கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ளது. 2026 ஜனவரியில் தொடங்கப்பட்ட இந்த சிறப்பு மையத்தில், தொழில் 4.0 திறன் மேம்பாடு, 3D பிரிண்டிங், IoT, மேம்பட்ட AI பயிற்சி ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படுகிறது.

இந்த மையத்தில் உள்ள ஒரு பளபளப்பான ஆய்வகத்தில் நுழைகிறேன், இது சிறந்த தனியார் பள்ளி ஆய்வகங்களில் காணப்படும்





ரஷீதா பகத்

உபகரணங்களைக் கொண்டுள்ளது. பெரிய அறையில் லேப்டாப்புகளுடன் 12 மேசைகள் உள்ளன. மேசைகளைச் சுற்றி, டெஸ்ட் டியூப்கள், பல்புகள், பிளாஸ்டிக் மாதிரிகள் போன்ற பிரகாசமான வண்ண பொருட்களும், நன்கு பொருத்தப்பட்ட அறிவியல் ஆய்வகத்தில் காணப்படும் பிற உபகரணங்களும் பரவியுள்ளன. சிறிய பானை செடிகள், கொடிகள், புல் மூலம் காட்டப்படும் விவசாய நிலத்தின் மாதிரிகள் ஆகியவற்றின் பசுமையும் கண்களைக் கவர்கிறது.

தானியங்கு தயாரிப்புகளும் அமைப்புகளும் இங்கு உருவாக்கப்படுவது தெளிவாகத் தெரிகிறது. ஒவ்வொரு தயாரிப்பும் IT மற்றும் IT தீர்வுகளைப் பயன்படுத்தி எப்படி உருவாக்கப்பட்டது என்பதை என்னுடன் வந்த ரோட்டேரியன்கள் விளக்குகின்றனர். ஒவ்வொரு பேட்ச்சிலும் 24 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க முடியும், மேலும் பல்வேறு பரிசோதனைத் திட்டங்களில் மூழ்கியிருக்கும் இளைஞர்களால் இது நிரம்பியுள்ளதைக் காண்கிறேன். “வகுப்புகளில் மாணவர்கள் உண்மையிலேயே ஈடுபட்டு, கற்றலில் மும்முரமாக இருப்பதைக் கண்டோம்” என்பதால் எல்ஃபின்ஸ்டோன் ITI உடன் இணைந்ததில் சங்கம் மகிழ்ச்சி அடைந்தது. “இங்கே புதுமையான IT-யுடன், ஜெனரேட்டிவ் AI அவர்களது பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளது, மேலும் ChatGPT, Gemini போன்ற சில AI தளங்களை எப்படி பயன்படுத்துவது என்று அவர்களுக்குக் கற்பிக்கப்படும். மெஷின்-லேர்னிங் தொடர்பான குறியீட்டையும் அவர்கள் கற்றுக்கொள்கிறார்கள்” என்று சங்கானி விளக்குகிறார்.

இந்த ஆண்டின் கருப்பொருளான RISE-க்கு (“மாறிவரும் தேவைகளுடன் மறு சீரமைத்தல், செயல்பாடுகளை ஒருங்கிணைத்து ஒத்திசைத்தல், நோக்கத்துடன் அளவை உயர்த்துதல், சமூகம் மற்றும் பங்குதாரர்களுடன் ஈடுபடுதல்”) “இது நன்கு பொருந்துவதால்” எல்ஃபின்ஸ்டோன் மையம் அவர்களது IT இன்னோவேஷன் லேப் திட்டத்துடன் சேர்க்கப்பட்டதாக அவர் கூறுகிறார்.

“நம்மைச் சுற்றியுள்ள சமூகங்களின் தேவைகள் தொடர்ந்து

மாறிக்கொண்டே இருக்கின்றன, AI, ரோபாட்டிக்ஸ் போன்ற தொழில்நுட்பங்களிலிருந்து அதிகரித்து வரும் பயன்பாடுகள் உருவாகின்றன. இளம் குழந்தை களுக்கு வேறுபட்ட சூழல் தேவை, இந்த வகையான ஆய்வகம் அவர்களது எதிர்பார்ப்புகளுக்கு நன்கு பொருந்துகிறது" என்று பட்நாகர் மேலும் கூறுகிறார்.

ரோட்டேரியன்கள் என்னை அழைத்துச் சென்ற ஒரு மேசையில், தொழில்துறையில் பல்வேறு செயல்பாடுகளுக்குப் பயன்படுத்தக்கூடிய ரோபோ கை மாதிரியை உருவாக்கும் மூன்று இளைஞர்களைக் காண்கிறேன். பல உற்பத்தித் தொழிற்சாலைகளில் வெல்டிங், அரைத்தல் போன்ற ஆபத்தான, மீண்டும் மீண்டும் நடக்கும் பணிகள் இன்னும் கைமுறையாகவே செய்யப்படுவதாக ரோட்டேரியன்கள் விளக்குகின்றனர். ரோபோ கைகளைப் பயன்படுத்தி இயந்திரமயமாக்கல் இந்தப் பணிகளை வேகமாகவும் பாதுகாப்பாகவும் துல்லியமாகவும் மாற்ற முடியும். பேக்கேஜிங், லாஜிஸ்டிக்ஸ், உணவு, மறுசுழற்சி போன்ற தொழில்களில் இதுபோன்ற ரோபோ கைகள் பயன்படுத்தப்படலாம்.

மற்றொரு மேசையில், ஒரு குறிப்பிட்ட தொழில்நுட்பத்தைப் (LoRa எனப்படும்) பயன்படுத்தி, பல்வேறு பயிர்களின் நீர் தேவைக்கேற்ப நீர்ப்பாசன செயல்முறையை தானியங்கு படுத்தும் ஒரு ஸ்மார்ட் மற்றும் அளவிடக்கூடிய நீர்ப்பாசன அமைப்பின் மாதிரியைப் பார்க்கிறேன். இணைய இணைப்பு குறைவாக அல்லது இல்லாத தொலைதூரப் பகுதிகளில் உள்ள பெரிய பண்ணைகளுக்கு இது மிகவும் ஏற்றது என்று எனக்குக் கூறப்படுகிறது.



மண் இல்லாமல் செடிகளை வளர்க்கும் நவீன விவசாய முறையான ஹைட்ரோபோனிக்ஸ் மூலம் நிலையான விவசாயம் செய்யக்கூடிய ஒரு மாதிரியில் மற்றொரு குழு இளைஞர்கள் மூழ்கியிருக்கிறார்கள். மண்ணுக்குப் பதிலாக, கோகோ கயிர், பெர்லைட் போன்ற நீர் அடிப்படையிலான, ஊட்டச்சத்து நிறைந்த ஊடகங்களில் பயிர்கள் வளர்க்கப்படுகின்றன.

pH, ஈரப்பதம், வெப்பநிலை சென்சார்கள் போன்ற உணரிகளை, நீர் பம்புகள், வளர்ச்சி விளக்குகள் போன்ற தானியங்கு கருவிகளுடன் இணைத்து, ஹைட்ரோபோனிக் சூழலைக் கண்காணித்துக் கட்டுப்படுத்துவது எப்படி என்று இளைஞர்கள் விளக்கும் பெரும்பாலானவை எனக்கு புரியவில்லை. ஆனால் அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை அவர்கள் நன்கு அறிந்திருப்பது தெளிவாகத் தெரிகிறது - அவர்களது உற்சாகம், ஆர்வம், திருப்தி ஆகியவை நன்கு வெளிப்படுகின்றன.

மாணவர்கள் ஸ்மார்ட் பார்க்கிங் மேலாண்மை, ஸ்மார்ட் பிரிண்டிங் போன்ற திட்டங்களிலும் பணியாற்றுகின்றனர். IoT, ரோபாட்டிக்ஸ், 3D மாடலிங் ஒவ்வொன்றிலும் மூன்று மாத பயிற்சியைப் பெறுகின்றனர்.

"நாங்கள் ரோட்டரியில் எப்போதுமே அளவை உயர்த்துவதில் நம்பிக்கை கொண்டிருக்கிறோம், ஆனால் நோக்கமில்லாத அளவல்ல. நாங்கள் செய்யும் அனைத்திலும், தாக்கத்தையும் முடிவுகளையும் அளவிடுகிறோம். இப்போது எங்களிடம் 5 IT ஆய்வகங்கள் உள்ளன, ஏனெனில் நாம் அளவை உயர்த்தாவிட்டால், தாக்கம் உணரப்படாது என்பது





எங்களுக்குத் தெரியும்” என்று பட்நாகர் கூறுகிறார்.

பாதுகாப்புப் பணியாளரின் மகனான 18 வயது ஸ்வப்னில் அனில் ஷிகோஹான், மண் ஈரப்பத உணரிகள் எப்படி வேலை செய்கின்றன, தண்ணீரைச் சேமிக்க இயற்பட்ட முறையின்றி செடிகளுக்குத் தண்ணீர் ஊற்ற எப்படி தானியங்குபடுத்தலாம் என்பதை விளக்குகிறார். அவரது தோழர் சித்தேஷ், இந்தத் தொழில்நுட்பம் தொலைதூரப் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு எப்படிப் பயன்படும் என்பதை விளக்குகிறார். “15 கிமீ தொலைவிலிருந்து என் மொபைல் ஃபோனில் இந்த அமைப்பை இயக்க முடியும்” என்று அவர் கூறுகிறார், மேலும் இந்தப் பயிற்சியை முடித்தபின் IoT தொழில்நுட்பராக வேலை கிடைக்கும் என்று நம்பிக்கையுடன் இருக்கிறார். மற்றொரு மாணவரான ராஜேஸ்வர், கைமுறை பேக்கேஜிங்கை மாற்றக்கூடிய வண்ணக்குறியீட்டு உணரிகள் கொண்ட தானியங்கு இயந்திரங்கள் பற்றி விளக்குகிறார்.

கடைக் கண்காணிப்பாளராகப் பணிபுரியும் தந்தையின் மகன் தல்ஹா ஷேக், பல்வேறு வண்ண உணரிகள் எப்படி பல்வேறு பொருட்களை அடையாளம் காணும் என்பதைக்

காட்டுகிறார். விஸ்வாஸ் ரங்கம்பே, பெரிய அலுவலக வளாகங்கள், மால்கள், மருத்துவமனைகள் போன்ற இடங்களில் வாகன ஓட்டிகள் காலி பார்க்கிங் இடங்களைக் கண்டறிய சிரமப்படும் நிலையை மாற்றக்கூடிய ஸ்பாட் பார்க்கிங் மேலாண்மை பற்றி விளக்குகிறார்.

ஒரு ஆசிரியரான அதர்வா தேசாய், மொத்தத்தில் ஒவ்வொரு நாளும் மூன்று பேட்ச்களில் சுமார் 300–350 மாணவர்களுக்குக் கற்பிப்பதாகக் கூறுகிறார். இந்த மாணவர்களை பாராட்டும் அவர், “அவர்கள் புத்திசாலிகளாகவும் கடின உழைப்பாளிகளாகவும் இருப்பது மட்டுமல்ல, இந்த ஆய்வகம் வழங்கும் அறிவை உள்வாங்குவதில் மிகவும் ஆர்வமாக உள்ளனர்” என்று புன்னகைக்கிறார். இந்த இளைஞர்கள், “ஒரு நல்ல வேலைக்கும் பிரகாசமான எதிர்காலத்திற்கும் வழி தேடுகிறார்கள். இந்த ஆய்வகத்துடன், அந்த வழியைப் பெறும் வாய்ப்பு அவர்களுக்கு உள்ளது” என்று அவர் மேலும் கூறுகிறார்.

பார்க்கிங் அமைப்பு எப்படி வேலை செய்கிறது என்பதை விஸ்வாஸ் ரங்கம்பே தொடர்ந்து விளக்குகிறார்: “ப்ராக்சிமிட்டி சென்சார்கள் போன்ற மலிவான, நியாயமான கூறுகளைப் பயன்படுத்தி பார்க்கிங் இடத்தைக் கண்டறிகிறோம்... இதற்கு உணரிகள் உள்ளதால், பார்க்கிங் இடம் கிடைக்கும்போது கேட் தானாகவே திறந்து மூடும். தகவல் தொடர்பு நெறிமுறை நேரடி புதுப்பிப்புகளை வழங்குகிறது, அமைப்பு கிளவுட் இணையத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.” இந்தத் தொழில்நுட்பத்தைப் புரிந்துகொள்ள நான் சிரமப்படும் அதேவேளையில், அவரது ஆங்கில வெளிப்பாட்டால் ஈர்க்கப்படுகிறேன்; அவரது ஆங்கில மொழித் திறனைப் பாராட்டியபோது, “இல்லை மேடம், அவ்வளவு நன்றாக இல்லை. ஆனால் ஆம், நான் நிறைய படிக்கிறேன். ஃபோனில் விளையாட்டுகள் விளையாடுவதற்குப் பதிலாக, நான் படிக்கிறேன்” என்று அவர் தன்னடக்கத்துடன் கூறுகிறார்.

தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் தந்தையின் மகள் கோமல் ரெஷீம், போலீஸ் துறையில் சேர்ந்து அங்கு IT பணி செய்ய விரும்புகிறார்!




*எல்பின்ஸ்டோன் ITI-ன் IT இன்னோவேஷன் லேபில் மாணவர்கள் உருவாக்கிய ரோபோ கை (Robot Arm) ஒன்றை சங்காணி பார்வையிடுகிறார்.*

கடினமான சூழல்களில் விவசாயத்திற்கு உதவும் ஹைட்ரோபோனிக்ஸ் அமைப்பை விளக்கும் முகமது தாதுஜி மிகுந்த உற்சாகத்துடன் இருக்கிறார். “இன்றைய பாரம்பரிய விவசாயத்தில், மண்ணும் வானிலை நிலைமைகளும் மோசமடைந்துள்ளன, விவசாயத்திற்கு நிலமும் குறைவாக உள்ளது. நாங்கள் தயாரித்த இந்த மினி ஹைட்ரோபோனிக்ஸ் அமைப்பு மண் இல்லாமல், அதிக ஊட்டச்சத்து நிறைந்த நீரில் வேலை செய்கிறது, இது செடிகள் நன்றாக வளர உதவுகிறது.”

புதிய, பச்சை, மணம் மிக்க இலைகளுடன் தெளிவாக செழித்து வளரும் ஒரு புதினா செடி என்னைக் கவர்கிறது; இளைஞர்கள் எனக்குப் புதினாவும் துளசியும் பரிசாக தர விரும்புகிறார்கள். நான் புதினாவைத் தேர்ந்தெடுக்கிறேன்!

கடைசியாக, இந்த மாணவர்கள் ஏற்கனவே தங்கள் உயர்நிலைப் பள்ளியை முடித்து, இந்த 9 மாத பயிற்சியுடன் தயாராக இருக்கும் நிலையில், என்ன மாதிரியான சம்பளத்தை எதிர்பார்க்கலாம் என்று ஆசிரியர் தேசாயிடம் கேட்கிறேன். அவர் ரூ.25,000 முதல் 30,000 வரை என்று மதிப்பிடுகிறார்!

சங்கானி புன்னகைத்தபடி கூறுகிறார், “இது ஒரு மேம்பட்ட கற்றல் மையம். ஆனால் 3D பிரிண்டிங் கற்பிக் கப்படும் பால்கர் இன்னோவேஷன் லேபிலும் கூட, கடந்த ஆண்டு மாணவர்கள் மையத்தின் 3D பிரிண்டிங் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ரக்ஷா பந்தனுக்கான தனிப்பயனாக்கப்பட்ட ராக்கி நூல்கள் வடிவமைத்து உருவாக்கினர். அழகிய ராக்கிகளை அச்சிட்ட பின், வண்ண நூல்களையும் மின்னும் அலங்கார பொருட்களையும் சேர்த்து ஒவ்வொரு துண்டையும் வண்ணமயமாகவும் பளபளப்பாகவும் ஆக்கினர். இந்தச் செயல்பாடு, 3D பிரிண்டிங் எப்படி வேலை செய்கிறது என்பதை மாணவர்கள் புரிந்துகொள்ள உதவியதோடு, பாரம்பரிய பண்டிகை யைக் கொண்டாடும்போது தங்களது படைப்பாற்றலை வெளிப்படுத்தும் வாய்ப்பையும் அவர்களுக்கு அளித்தது.”

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

# சமூக நலனுக்காக ரோட்டரி – இந்திய அரசு இணைந்து செயல்பாடு

ரோட்டரி செய்திக்குழு

இந்திய துணைக் குடியரசுத்தலைவர் C P ராதாகிருஷ்ணன் மற்றும் RI துணைத்தலைவர் M முருகானந்தம் ஆகியோர் டெல்லியில் சந்தித்த பின்னர், தேசிய வளர்ச்சிக்கான சமூக அடிப்படையிலான திட்டங்களில் ஒத்துழைப்பை வலுப்படுத்த ரோட்டரி இன்டர்நேஷனலும் இந்திய அரசும் பேச்சுவார்த்தை தொடங்கியுள்ளன.

கல்வி, சுகாதாரம், இளைஞர் தலைமைத்துவ மேம்பாடு, குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் உள்ளிட்ட முக்கியத் துறைகளில், ரோட்டரியின் உலகளாவிய வலைப்பின்னல், அடிமட்டத் தொடர்பு மற்றும் பல தசாப்த கால சேவை அனுபவத்தைப் பயன்படுத்தி, நீடித்த தாக்கத்தை உருவாக்க கூட்டுறவை வலுப்படுத்த முடிவு செய்யப்பட்டது.

போலியோவுக்கு எதிரான உலகளாவிய போராட்டத்தில் ரோட்டரியின் தலைமைப் பங்களிப்பைப் பாராட்டிய துணைக் குடியரசுத் தலைவர், எதிர்காலத்தில் இந்தியாவில் ஒரு RI மாநாட்டை நடத்த வேண்டும் என்ற ரோட்டரி இந்தியாவின் விருப்பத்திற்கு ஆதரவு தெரிவித்தார். இது உலகெங்கிலும் இருந்து ஆயிரக்கணக்கான பிரதி நிதிகளைக் கொண்டுவரும் மாபெரும் நிகழ்வாக அமைந்து, மனிதநேய ஒத்துழைப்பு மற்றும் புத்தாக்கத்திற்கான உலக மையமாக இந்தியாவை நிலை நிறுத்தும்.




*இந்தியக் குடியரசு துணைத்தலைவர் C P ராதாகிருஷ்ணனுடன், RI துணைத்தலைவர் M முருகானந்தம்.*

இதையடுத்து முருகானந்தம், “துணை குடியரசுத்தலைவரைச் சந்தித்து, இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் ரோட்டரியின் பங்களிப்பை வலுப்படுத்த வாய்ப்புகள் குறித்து விவாதித்தது பெருமையாக இருந்தது. RI மாநாட்டை நடத்த வேண்டும் என்ற எங்கள் விருப்பத்திற்கு அவர் அளித்த ஊக்கம், நாடு முழுவதும் நீடித்த மாற்றத்தை உருவாக்கும் நமது அர்ப்பணிப்பிற்கான அங்கீகாரம்” எனத் தெரிவித்தார்.■

## சென்னையில் 50 பெண்களுக்கு CNG ஆட்டோக்கள்



*ஆப்டஸ் வேல்யூ ஹவுசிங் ஃபைனான்ஸ் தலைவர் M ஆனந்தன், பெண்களுக்கு ஆட்டோக்களை வழங்குகிறார். DG சுரேஷ் ஜெயின், C முத்துசாமி ஆகியோரும் உள்ளனர்.*

பெண்களுக்கு நிலையான வருமானம் உருவாக்கும் CSR திட்டத்தில், RC அண்ணா நகர் மெட்ராஸ், RID 3234, Aptus Value Housing Finance India மற்றும் வாழ்வாதார உதவி அமைப்பான ANEW-உடன் இணைந்து 50 பெண்களுக்கு இளஞ்சிவப்பு CNG ஆட்டோக்களை வழங்கியது. ₹2.7 லட்சம் மதிப்புள்ள ஒவ்வொரு வாகனத்துக்கும் Aptus நிறுவனம் ₹1 லட்சம் வழங்கியது; ANEW பயிற்சியளித்தது. Aptus நிறுவனர்-தலைவர் M ஆனந்தன் வாகனங்களை வழங்கினார். பெண்களின் வருமானம், நிதிச் சுதந்திரத்தை உயர்த்தும் முயற்சி இது என DG சுரேஷ் ஜெயின் கூறினார்.

# வெறும் அடையாளத்துக்காக மேசையில் அமர இளைஞர்கள் விரும்பவில்லை

ரஷீதா பகத்

இலங்கையைச் சேர்ந்த ரோட்டராக்டர் பாத்திமா ஹனீக்கா ரஹில், 2026 ஏப்ரல் 14–16 தேதிகளில் நியூயார்க் ஐ.நா. தலைமையகத்தில் நடைபெற்ற ECOSOC இளைஞர் மன்றத்தில் பங்கேற்கும் அரிய வாய்ப்பைப் பெற்றார்.

இந்த முக்கிய நிகழ்வில் பங்கேற்றது எப்படி என்று கேட்டபோது, அவர் தற்போது காமன்வெல்த் யூத் பீஸ் அம்பாசடர்ஸ் நெட்வொர்க் (CYPAN)-ன் உலக ஒருங்கிணைப்பாளராக உள்ளதாகக் கூறினார். பாகிஸ்தானைச் சேர்ந்த மற்றொரு இளைஞருடன் இந்த ஐ.நா. சந்திப்பில் பங்கேற்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

ஹனீக்கா ரோட்டராக்டரும் ரோட்டரியனும் ஆவார். இலங்கையின் 56 ஆண்டுகள் பழமையான, மதிப்புமிக்க RC கொலம்போ நார்த்-ன் தலைவராக கடந்த ஆண்டு பணியாற்றியுள்ளார். அவரது ரோட்டராக்ட் பயணம் முன்கூட்டியே திட்டமிட்டதல்ல. “ரோட்டராக்டராக இருந்த ஒரு நண்பர் என்னை அறிமுகப்படுத்தினார். நான் அமைப்பில் இணைந்தேன்; அங்கேயே என் வாழ்க்கைத் துணையையும் கண்டேன். அவர் அப்போது DRR-ஆக இருந்தார்,” என்று புன்னகைக்கிறார்.

ரோட்டராக்ட் தந்தது என்ன என்ற கேள்விக்கு, “உலகத்தையும் என்னையும் நான் பார்க்கும் விதத்தை ரோட்டராக்ட் மாற்றியுள்ளது. நம்பிக்கையுடன் சார்ந்திருக்கக்கூடிய, ஒரே எண்ணம் கொண்டவர்களைச் சந்திக்கவும் வலையமைப்பை உருவாக்கவும் உதவுகிறது. அது என் வாழ்க்கையில் மிக வலுவான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது,” என்கிறார்.

நியூயார்க் கூட்டம் மூன்று நாள் நிகழ்வாக நடைபெற்றது. பல இளைஞர்கள் பங்கேற்றதுடன், ஐ.நா. உதவிச் செயலாளர் நாயகத்தைச் சந்திக்கும் வாய்ப்பும் கிடைத்தது. அங்கு இளைஞர்கள் எழுப்பிய முக்கியக் கவலை என்னவென்றால், அவ்வப்போது ஆலோசனை கேட்பது மட்டும் போதாது; உலகம்



*இலங்கை ரோட்டராக்டர் ஃபாத்திமா ஹனீகா ரஹீல் (வலமிருந்து இரண்டாவது), நியூயார்க்கில் உள்ள UN தலைமையகத்தில் சக பிரதிநிதிகளுடன்.*

எதிர்கொள்ளும் கடுமையான பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் கண்டறிவதிலும் வடிவமைப்பதிலும் அவர்கள் அர்த்தமுள்ள வகையில் இணைக்கப்பட வேண்டும் என்பதே. ஆளுகை நிர்வாகத்திலும் இளைஞர்கள் செயலில் பங்கேற்க விரும்புகிறார்கள்.

வேலைவாய்ப்பு, கல்வி, டிஜிட்டல் மாற்றம், மனநலம், காலநிலைத் தாங்குதிறன் என வாழ்வின் பல அம்சங்கள் விவாதிக்கப்பட்டன. செயற்கை நுண்ணறிவு பற்றியும் விரிவாகப் பேசப்பட்டது. AI காரணமாக உலகில் நிகழும் பெரும் மாற்றம், வேலைகள், கற்றல், குடிமைப் பங்கேற்பு ஆகியவற்றை எதிர்காலத்தில் அது எவ்வாறு பாதிக்கும் என்பதில் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

கரீபியன், ஆப்பிரிக்கா, தெற்காசியா அல்லது பிற நாடுகள் என எந்தப் பகுதியிலிருந்து வந்திருந்தாலும், பிரதிநிதிகள் ஒரேபோன்ற கவலைகளைக் கூறியது தன்னை வியப்பில் ஆழ்த்தியதாக ஹனீக்கா கூறுகிறார். “வாய்ப்புகளை எப்படி அணுகுவது? தாங்குதிறன் மிக்க சமூகங்களை எப்படி உருவாக்குவது?” என்பதே இளைஞர்களின் பொதுவான கேள்விகள். அடிப்படையில் அவர்கள் எதிர்பார்ப்பது பங்கேற்பிலிருந்து கூட்டாண்மைக்கான மாற்றமாகும்.

சட்டத்தில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ள அவர், நவம்பர் 1–4 தேதிகளில் அன்டிகுவா மற்றும் பார்புடாவின் செயின்ட் ஜான்ஸில் நடைபெறவுள்ள 2026 காமன்வெல்த் தலைவர்கள் அரசுக் கூட்டத்துக்கான (CHOGM) பணிக்குழுவில் திட்டங்கள் மற்றும் கூட்டாண்மைகளின் இணைத் தலைவராகவும் இருக்கிறார். இந்தப் பொறுப்பில் இளைஞர் ஈடுபாடு, மூலோபாயக் கூட்டாண்மைகள், உச்சிமாநாட்டுடன் தொடர்புடைய நிகழ்ச்சித் திட்ட மேம்பாடு ஆகியவற்றில் பங்களிக்கிறார்.

CHOGM-ன் ஒரு பகுதியாக நடக்கும் காமன்வெல்த் இளைஞர் மன்ற நிகழ்ச்சிகளுக்கு அவர் இணைத்தலைமை வகிப்பார். இளைஞர் வேலைவாய்ப்பு, தொழில்முனைவு, டிஜிட்டல் புதுமை, காலநிலைத் தாங்குதிறன் ஆகியவை அதில் முக்கியக் கவனமாக இருக்கும். காமன்வெல்த் நாடுகளின் பன்முகத்தன்மை இளைஞர்களை ஈர்க்கிறது என்கிறார். சிறிய தீவு நாடாக இருந்தாலும், ஆப்பிரிக்க அல்லது தெற்காசிய நாடாக இருந்தாலும், இளைஞர்கள் வேலைவாய்ப்பு, தொழில்முனைவு போன்றவற்றில் பொருளுள்ள வாய்ப்புகளையும் கலந்தாலோசனை களையும் எதிர் பார்க்கிறார்கள்.



AI-ஐ இளைஞர்கள் சவாலாகப் பார்க் கிறார்களா, வாய்ப்பாகப் பார்க்கிறார்களா என்ற கேள்விக்கு, பார்வைக்கு ஏற்ப அது மாறுபடும் என்கிறார். “இளைஞர்களுக்கு AI ஒரு வாய்ப்பே; தடையல்ல. அது பல வழிகளில் உதவுகிறது. இன்று பல இளைஞர்கள் AI-யுடன் வளர்ச்சியடைவதைக் காணலாம். AI செய்ய முடியாத சில விஷயங்கள் உள்ளன. அது மனிதன் அல்ல; ஆனால் மனிதர்களுக்கு உதவ முடியும். இதை உணர்ந்தால் AI-ஐப் போட்டியாளராகக் கருதாமல் சரியாகப் பயன்படுத்த முடியும்.”

உலகக் கொள்கைகளை வடிவமைப்பதில் இளைஞர்கள் வெறும் பங்களிப்பாளர்களாக அல்லாமல் செயலில் பங்கேற்பவர்களாக இருக்க வேண்டும் என்ற தனது கருத்தை அவர் விளக்குகிறார்: பொதுவாக முடிவுகள் எடுக்கப்பட்ட பிறகே இளைஞர்கள் அழைக்கப்படுகிறார்கள்; அவர்கள் கருத்து அப்போதுதான் கேட்கப்படுகிறது. CYPAN சார்பில் பல நாடுகளுக்குப் பயணித்தபோது இதைத் தொடர்ந்து கண்டதாகக் கூறுகிறார்.

“முடிவுகள் எடுக்கப்படும் நேரத்திலேயே, ஆரம்பத்திலிருந்தே எங்களை அழைத்து இணைத்துக் கொள்ள வேண்டும்; பின்னர் அல்ல. அதுவே அர்த்தமுள்ள பங்கேற்பு. அப்போதுதான் இளைஞர்கள் பிரச்சினைகளை மேசைக்குக் கொண்டு வந்து, தங்கள் பார்வையில், வேறொரு கோணத்தில் அவற்றை ஆராய்ந்து தீர்வுகளை வடிவமைக்க உதவ முடியும்,” என்கிறார்.

இது இளைஞர்கள் எதிர் மூத்த தலைமுறை என்ற மோதல் அல்ல என்றும் அவர் தெளிவுபடுத்துகிறார். “தலைமுறைகளுக்கு இடையிலான கூட்டாண்மையே இலக்கு. அந்த இடைவெளியை நிரப்புவது முக்கியம்.”

தற்போது தனது குடும்பத்தின் இறக்குமதி-ஏற்றுமதி நிறுவனமான வேர்ல்ட் காமர்ஸ் லங்காவின் இயக்குநராகவும், ஊதியம் பெறும் பணியான CYPAN உலக ஒருங்கிணைப்பாளராகவும் ஹனீக்கா செயல்படுகிறார்.

இலங்கை, வங்கதேச அரசியல் மாற்றங்கள், இந்தியாவின் தமிழ்நாட்டில் இளைஞர் வாக்குகள் அரசியல் மாற்றத்துக்குக் காரணமானது ஆகியவற்றில் இளைஞர்களின் பங்கு பற்றி கேட்டபோது, ஒவ்வொரு நாட்டின் அரசியல் சூழலும் வேறுபட்டது; அவற்றை நேரடியாக ஒப்பிட முடியாது என்றார். ஆனால் தங்கள் எதிர்காலத்தைப் பாதுகாக்க முடிவெடுக்கும் செயல்பாட்டில் அதிக குரல் வேண்டும் என இளைஞர்கள் கோருவது முக்கியமான பரந்த போக்கு என்றார். கடந்த காலத்துடன்

ஒப்பிடுகையில், உலகம் முழுவதும் இளைஞர்கள் பொது வாழ்வில் அதிகம் ஈடுபடுவது மறுக்க முடியாத உண்மை எனவும் கூறினார்.

நியூயார்க் மேயர் ஜோஹ்ரான் மம்தானி தனது தேர்தலுக்காக நடத்திய சமூக ஊடகப் பிரசாரம் இளைஞர்களைக் கவர்ந்ததைக் குறிப்பிடுகிறார். சமூக ஊடகமும் தொழில்நுட்பமும் இருப்பதால் செய்தி நம் விரல் நுனியில் உள்ளது; உலகில் நடப்பதை இளைஞர்கள் நன்கு அறிகிறார்கள். தேர்தல்களுக்கு அப்பாலும் டிஜிட்டல் தளம், ஆதரவு இயக்கம், தொழில்முனைவு என பல்வேறு வழிகளில் செல்வாக்குச் செலுத்த அவர்கள் விரும்புகிறார்கள். உலகளாவிய தொழில்நுட்பப் போக்குகள் அவர்களைப் பாதிக்கின்றன; எதிர்காலம் தங்களுடையது என்பதால் தங்கள் கருத்துகளையும் முடிவுகளையும் வெளிப்படுத்த விரும்புகிறார்கள்.

இளைஞர்களால் இன்றைய உலகில் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்த முடியுமா? “இளைஞர்கள் வெறும் அடையாளத்துக்காக மேசையில் அமர விரும்பவில்லை. தீர்வுகளை வடிவமைப்பதில் அர்த்தமுள்ள பங்கு வேண்டும். அந்த வாய்ப்பு கிடைத்தால்தான் அவர்கள் சொல்வது உண்மையான மாற்றத்தை ஏற்படுத்தும். இல்லையெனில் அது வெறும் குரலாகவே இருக்கும்; கொள்கையாக மாறாது. பல காமன்வெல்த் நாடுகளில் நான் மாநாடுகளிலும் போட்டிகளிலும் பங்கேற்றுள்ளேன். ஆனால்



*ஹனீகா, தன் ரோட்டரி/ரோட்டராக்ட் சங்கங்கள் வென்ற விருதுகளுடன்.*
*வலது:* PRIP *ஸ்டெபனி அர்ச்சிக் உடன்.*



PDG *சுஷேனா ரணதுங்காவுடன் (மையத்தில்).*
*வலது:* ECOSOC Youth Forum-*ல்.*





*ஹனிகா, PRIP கார்டன் மெக்கினலியுடன்*






இளைஞர்களின் எதிர்காலத்தை மாற்றவும் வடிவமைக்கவும், முடிவெடுக்கும் செயல்முறையிலேயே பங்கேற்க வேண்டும் என்பதையே நாங்கள் நாடுகிறோம்," என்கிறார்.

ரோட்டராக்ட், ரோட்டரி உறுப்பினர் அனுபவம் தந்தவற்றைப் பற்றிக் கூறுகையில், பொதுப் பேச்சு, முன் முயற்சி, விமர்சனச் சிந்தனை, சூழல் சிக்கலானபோது உடனடி முடிவெடுத்தல் ஆகிய திறன்கள் அனைத்தும் ரோட்டராக்ட், ரோட்டரி வழியே கிடைத்தவை என்கிறார். காமன்வெல்த் மற்றும் பிற அமைப்புகளில் தனது ஈடுபாட்டிற்கும் அவை துணை புரிகின்றன.

2018-ல் ரோட்டராக்டிலும், 2020-ல் ரோட்டரியிலும் இணைந்தார். கடந்த ஆறு ஆண்டுகளில் முதலில் RC சினமன் கார்டன்ஸ்-ல் இளைஞர் சேவை இயக்குநராகவும், பின்னர் கணவர் உறுப்பினராக இருந்த RC கொலம்போ நார்த்-ல் தலைவராகவும் பணியாற்றினார். இளம் ரோட்டரியனான தன்னை இரு சங்கங்களின் உறுப்பினர்களும் அன்புடன் ஏற்றுக்கொண்டதாகவும், உதவி தேவைப்பட்டால் ஒரே அழைப்பில் கிடைத்ததாகவும் கூறுகிறார். இத்தகைய மாற்றம் அனைவருக்கும் எளிதாக இருக்காது; ஆனால் இரு சங்கங்களும் அதைத் தடையின்றி செய்தன.

"ரோட்டரியின் எதிர்காலமும் இப்படித்தான் இருக்க வேண்டும் - இளைஞர்களை வரவேற்று, தலைமுறைகளுக்கு இடையிலான இடைவெளியை நிரப்பி, அவர்களுக்கு அதிகப் பொறுப்புகளை வழங்க வேண்டும்." மூத்த ரோட்டரியன்கள் இளம் உறுப்பினர்களை ஆதரித்தால் அமைப்பு வளரும். "எப்போதும் எனக்கு உதவும் முன்னாள் தலைவர்களின் ஒரு படையே எனக்குக் கிடைத்துள்ளது," என்கிறார்.

ரோட்டரியின் உறுப்பினர் எண்ணிக்கை சரிவைத் தடுக்க, ரோட்டரியன்கள்-ரோட்டராக்டர்கள் இடையே சிறந்த இணைப்பு அவசியம். இந்த ஆண்டு, இலங்கை மற்றும் மாலத்தீவுகளை உள்ளடக்கிய RI மாவட்டம் 3220-ன் DRR-ஆக அவர் உள்ளார். மாவட்ட ஆளுநர், ரோட்டரியன்களுடன் இணைந்து, தனது பிராந்தியத்தில் உள்ள சுமார் 80 ரோட்டராக்ட் சங்கங்களின் உறுப்பினர்களில் குறைந்தது பாதியினரையாவது ரோட்டரி சங்கங்களில் உறுப்பினர்களாக்க தீவிர முயற்சி மேற்கொள்வார்.■

# TRF நன்கொடையில் முன்னிலையில் 10 இந்திய மாவட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

TRF-ன் மிகப் பெரிய பயனாளிகளில் ஒன்றாக இருந்த இந்தியா, இப்போது அதன் மிகப்பெரிய நன்கொடையாளராக மாறியுள்ளது. 2025–26 ரோட்டரி ஆண்டு முடிவில், உலகின் முதல் 30 TRF நன்கொடை மாவட்டங்களில் 10 இந்திய மாவட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

உலக அளவில் முதலிடத்தில் உள்ளது IPDG மனீஷ் மோட்வானி தலைமையிலான RI மாவட்டம் 3141, $1,04,69,481 என்ற அபார நன்கொடையுடன். RC பம்பாய் பியர் ($36,74,188) இதற்கு முக்கியப் பங்காற்றியது. 16 புதிய AKS உறுப்பினர்கள் சேர்ந்ததுடன், ஒன்பது பேர் உயர் AKS அங்கீகார நிலைக்கு உயர்ந்தனர். மாவட்டத்தின் 59 சதவீத ரோட்டேரியன்கள் நன்கொடை அளித்தனர்; தனிநபர் சராசரி நன்கொடை $1,658.50. தற்போது மாவட்டத்தில் 87 AKS உறுப்பினர்கள் உள்ளனர்.

கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், நீலகிரி ஆகியவற்றை உள்ளடக்கிய RI மாவட்டம் 3203, $35,14,256 நன்கொடையுடன் இரண்டாமிடத்தைப் பிடித்தது. IPDG B தனசேகர் தலைமையில், ஒரு புதிய AKS உறுப்பினர் சேர்ந்து மொத்தம் ஏழு ஆனது. RC திருப்பூர் சவுத் ($3,59,923) மாவட்டத்தின் முதன்மை நன்கொடையாளராக இருந்தது; 30 சதவீத பங்கேற்புடன் தனிநபர் சராசரி $665.71.

டெல்லி மற்றும் ஹரியானாவின் சில பகுதிகளை உள்ளடக்கிய RI மாவட்டம் 3011, $27,49,190 நன்கொடையுடன் உலகில் ஆறாமிடத்தையும், இந்தியாவில் மூன்றாமிடத்தையும் பெற்றது. IPDG ரவீந்தர் குக்னானி தலைமையில், ஆறு புதிய AKS உறுப்பினர்கள் சேர்ந்து மொத்தம் 29 ஆனது. RC டெல்லி சவுத் சென்ட்ரல் ($5,97,871) முன்னிலையில் இருந்தது; 24 சதவீத பங்கேற்புடன் தனிநபர் சராசரி $551.21.

மாவட்டங்கள் 3192, 3234, 3131, 3060, 3150, 3191, 3000, 3012 ஆகியவையும் முதல் 30இல் இடம்பெற்றன - இந்திய ரோட்டேரியன்களின் நன்கொடை உலகளாவிய ரோட்டரி திட்டங்களை மேலும் வலுப்படுத்துகிறது என்பதை இது காட்டுகிறது.■

## Top 30 TRF-giving districts in the world for the RY 2025–26

| Rank | District | Country | Total Contributions ($) |
|---|---|---|---|
| 1 | 3141 | India | 10,469,481 |
| 2 | 3203 | India | 3,514,256 |
| 3 | 3502 | Taiwan | 2,926,178 |
| 4 | 3501 | Taiwan | 2,901,341 |
| 5 | 3310 | Brunei | 2,858,489 |
| 6 | 3011 | India | 2,749,190 |
| 7 | 5020 | Canada | 2,703,853 |
| 8 | 3522 | Taiwan | 2,450,407 |
| 9 | 5340 | USA | 2,331,591 |
| 10 | 3192 | India | 2,212,825 |
| 11 | 9675 | Australia | 2,123,787 |
| 12 | 3234 | India | 2,122,462 |
| 13 | 3131 | India | 2,025,770 |
| 14 | 5170 | USA | 1,977,067 |
| 15 | 3060 | India | 1,932,713 |
| 16 | 3150 | India | 1,811,734 |
| 17 | 3191 | India | 1,802,283 |
| 18 | 5890 | USA | 1,781,181 |
| 19 | 3490 | Taiwan | 1,746,256 |
| 20 | 5420 | USA | 1,657,768 |
| 21 | 3461 | Taiwan | 1,504,483 |
| 22 | 3750 | Korea | 1,496,332 |
| 23 | 3510 | Taiwan | 1,494,923 |
| 24 | 3470 | Taiwan | 1,481,255 |
| 25 | 5110 | USA | 1,469,600 |
| 26 | 3481 | Taiwan | 1,466,357 |
| 27 | 3000 | India | 1,443,142 |
| 28 | 3590 | Korea | 1,412,956 |
| 29 | 3012 | India | 1,397,996 |
| 30 | 6970 | USA | 1,374,393 |

## Top 30 Largest Rotary Membership Districts in the World

| District | Country | # Clubs | # Members |
|---|---|---|---|
| 3000 | India | 194 | 7,731 |
| 3141 | India | 122 | 6,423 |
| 2981 | India | 155 | 6,297 |
| 3170 | India | 142 | 6,255 |
| 3030 | India | 122 | 6,086 |
| 3203 | India | 116 | 5,711 |
| 3011 | India | 145 | 5,493 |
| 3292 | Nepal | 164 | 5,342 |
| 3211 | India | 164 | 5,264 |
| 9213 | Uganda | 151 | 5,253 |
| 1910 | Austria | 112 | 5,211 |
| 3630 | Korea | 118 | 5,144 |
| 3060 | India | 104 | 5,062 |
| 3131 | India | 132 | 4,807 |
| 1900 | Germany | 92 | 4,803 |
| 1810 | Germany | 89 | 4,715 |
| 3820 | Philippines | 159 | 4,693 |
| 1860 | Germany | 90 | 4,680 |
| 9214 | Tanzania | 150 | 4,642 |
| 1870 | Germany | 84 | 4,561 |
| 3212 | India | 121 | 4,555 |
| 1990 | Switzerland | 78 | 4,554 |
| 2760 | Japan | 84 | 4,521 |
| 2000 | Switzerland | 77 | 4,511 |
| 2060 | Italy | 96 | 4,440 |
| 2750 | Japan | 98 | 4,432 |
| 1980 | Switzerland | 69 | 4,423 |
| 64 | Bangladesh | 221 | 4,392 |
| 9141 | Nigeria | 178 | 4,379 |
| 3490 | Taiwan | 107 | 4,330 |

## AKS Members recent trend in Zone 4, 5, 6 & 7

| Year | Z4 | Z5 | Z6 | Z7 | AKS |
|---|---|---|---|---|---|
| 2020–21 | 11 | 5 | 2 | 3 | 21 |
| 2021–22 | 10 | 7 | 2 | 6 | 25 |
| 2022–23 | 21 | 7 | 3 | 15 | 46 |
| 2023–24 | 13 | 4 | 6 | 7 | 30 |
| 2024–25 | 21 | 10 | 6 | 11 | 48 |
| 2025–26 | 26 | 5 | 1 | 9 | 41 |

## Top 30 Giving Countries in 2025–26

| Rank | Country | Total Contributions ($) |
|---|---|---|
| 1 | United States | 197,515,018 |
| 2 | India | 45,390,039 |
| 3 | Canada | 31,716,898 |
| 4 | Taiwan | 19,645,509 |
| 5 | Korea, Republic of | 18,469,862 |
| 6 | Japan | 16,462,230 |
| 7 | Germany | 7,314,378 |
| 8 | Italy | 6,848,763 |
| 9 | Philippines | 6,703,763 |
| 10 | Australia | 6,486,841 |
| 11 | Brazil | 6,400,544 |
| 12 | UK | 4,119,672 |
| 13 | France | 3,430,428 |
| 14 | Singapore | 2,518,409 |
| 15 | Uganda | 2,305,720 |

| Rank | Country | Total Contributions ($) |
|---|---|---|
| 16 | Nigeria | 2,266,923 |
| 17 | Mexico | 2,244,556 |
| 18 | Belgium | 2,229,562 |
| 19 | Switzerland | 1,670,174 |
| 20 | Thailand | 1,435,117 |
| 21 | Netherlands | 1,064,026 |
| 22 | Hong Kong | 972,023 |
| 23 | Austria | 909,269 |
| 24 | Spain | 621,977 |
| 25 | Denmark | 610,147 |
| 26 | Malaysia | 592,381 |
| 27 | Cayman Islands | 558,548 |
| 28 | Turkey | 535,192 |
| 29 | Côte d'Ivoire | 510,736 |
| 30 | Nepal | 502,637 |

### RID 3141 TRF நன்கொடையில் உலகில் முதலிடம்


TRF நன்கொடையில் மீண்டும் ஒருமுறை RID 3141 இந்தியாவைப் பெருமைப் படுத்தியுள்ளது; DG மனீஷ் மோட்வானி தலைமையிலான இந்த மாவட்டத்தில், மும்பையைச் சேர்ந்த மூன்று சங்கங்கள் பெருமைக்குரிய இடத்தைப் பிடித்துள்ளன.

நூப்பூர் தேசாய் தலைமையிலான RC பம்பாய் பியர் சங்கம் $3,674,188 நன்கொடை அளித்துள்ளது; பிமல் மேத்தா தலைமையிலான RC பம்பாய் சங்கம் ($1,627,795); மற்றும் அபூர்வா ஷா தலைமையிலான RC குயின்ஸ் நெக்லஸ் சங்கம் ($651,789) ஆகியவை அந்த சங்கங்களாகும்.





**K P Nagesh**
RI Director


**Dr Bharat Pandya**
TRF Trustee


**M Muruganandam**
RI V-P & Director

# டகோஜுவின் “தன்யவாத்”: செயல்படும் நன்றியுணர்வின் பசுமைப் பயணம்

ஜெய்ஸ்ரீ

பெங்களூருவில் RID மாவட்டம் 3192-ன் நான்காவது மாவட்ட ஆளுநராக ரவிசங்கர் டகோஜு பதவியேற்ற நிகழ்வு வழக்கமான ரோட்டரி நிகழ்வாக அமையவில்லை. அடர்ந்த பசுமையுடன் காடு போன்ற பின்னணியில் நடைபெற்றது. இந்தியக் காடுகள், வனவிலங்குகளைக் கொண்டாடும் தேசிய கீதக் காணொலி திரையிடப்பட்டது. விலங்குகள் மீது ஆளுநருக்கு உள்ள அன்பைப் பிரதிபலிக்கும் வகையில், அவரது இந்திய இன நாய் மேடைக்கு வந்து டகோஜுவையும் அவரது மனைவி பாவ்லாவையும் வரவேற்றது. இது அவரது ஆண்டுக் கருப்பொருளான “தன்யவாத்: செயல்படும் நன்றி யுணர்வு” (Dhanyavad: Gratitude in Action) என்பதற்கு ஏற்ற அறிமுகமாக இருந்தது.

நிகழ்வில் சிறப்பான கொடையளிப்பும் கொண்டாடப்பட்டது. இந்த ஆண்டு சர்வதேச மாநாட்டில் டகோஜுவும் பாவ்லாவும், 5–6 கோடி டாலர் மதிப்பிடப்பட்ட சொத்தில் 85 சதவீதத்தை TRF-க்கு வழங்க உறுதியளித்தனர். 2022-ல் TRF-க்கு ரூ.100 கோடி வழங்குவதாக டகோஜு அறிவித்திருந்தார். 3,000 கி.மீ.க்கும் குறைவாக ஓடிய, ஓராண்டு பழமையான தனது

*RI இயக்குநர் K P நாகேஷ் (இடதிலிருந்து இரண்டாவது), DG ரவிசங்கர் டகோஜுவிடம் காவல்கோலை (gavel) கையளிக்கிறார். (இடதிலிருந்து) IPDG எலிசபெத் செரியன், பவோலா டகோஜு மற்றும் முன்னாள் மத்திய அமைச்சரும் சுற்றுச்சூழல் ஆர்வலருமான மேனகா காந்தி ஆகியோரும் உள்ளனர்.*



மெர்சிடீஸ்-பென்ஸ் காரை ஏலமிட்டார். ரூ.42 லட்சத்துக்கு விற்கப்பட்ட போது, தனது பணத்திலிருந்து ரூ.8 லட்சம் சேர்த்து ரூ.50 லட்சத்தை TRF-க்கு நன்கொடையளித்தார்.

RI இயக்குநர் K P நாகேஷ், டகோஜுவை ஆளுநராகப் பதவியேற்றுவித்து, "நன்றியுணர்வின் உச்ச மனப்பான்மை கொண்டவர்" என்று பாராட்டினார். வாழ்நாள் முழுவதும் மக்களுக்கு சேவையாற்றிய அவர், இப்போது "அன்னை பூமிக்குத் திருப்பிக் கொடுக்க" விரும்புவதாகக் கூறினார்.

"எனது ஆழ்ந்த தன்யவாத் என் மறைந்த பெற்றோர் இந்திரா, டி. காமேஷ் ராவுக்கு உரியது. என் தந்தை குடும்பத்தின் முழுச் செல்வத்தையும் பூதான் இயக்கத்துக்கு வழங்கினார். அவர்களின் மதிப்பீடுகள், தியாகங்கள், ஆசிகள் தினமும் என்னை வழிநடத்துகின்றன," என்றார் டகோஜு.




மாவட்டக் கருப்பொருள் வெறும் நன்றி சொல்வதைத் தாண்டியது என அவர் விளக்கினார். "'தேங்க்ஸ்' என்பது ஒரு சொல் மட்டுமே. தன்யவாத் என்பது செயல்படும் நன்றியுணர்வு; மனிதனின் தூய்மையான உணர்வு. பிறப்பிலிருந்து இறப்பு வரை நாம் சமூகத்தைச் சார்ந்திருக்கிறோம்; நன்றி சொல்ல மறந்துவிட்டோம்." மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் பூமி, விலங்குகள், மனிதகுலத்தைத் தாங்கும் ஒவ்வொரு உயிர்வகைக்கும் நன்றியுணர்வை வாழ்வியலாக மீட்டெடுப்பதே அவரது நோக்கம்.

பாவ்லா டகோஜு அறக் கட்டளையின் ஆதரவுடன், இந்தியா, நேபாளம், பூடான், இலங்கை, மாலத்தீவுகளின் 44 ரோட்டரி மாவட்டங்களை இணைக்கும் தன்யவாத் இயக்கம், சுற்றுச்சூழல் மீட்பு மற்றும் சமூகப் பொறுப்புக்கான முயற்சிகளை மேற்கொள்கிறது. ரயன் இன்டர்நேஷனல் பள்ளிகள் உள்ளிட்ட நிறுவனங்களின் உதவியுடன் 10 லட்சம் மரக்கன்றுகள் நடுதல்; வாட்டர் ஃபார் வொய்ஸ்லெஸ் அமைப்புடன் இணைந்து பள்ளிகள், சமூகங்கள், வீடுகளில் பறவைகள் மற்றும் விலங்குகளுக்காக ஒரு லட்சம் நீர்க்கிண்ணங்கள் வழங்குதல் முக்கியத் திட்டங்களாகும்.

"காடுகளால் மட்டுமே பூமி பசுமையாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும்; காடுகள் அழிந்தால் பூமியும் அழியும்," என்ற டகோஜு, பழங்குடியினரை இந்தியக் காடுகளின் உண்மையான பாதுகாவலர்கள் என்றார். தொலைதூர வனப்பகுதிக் கல்வியை வலுப்படுத்த, ஃபிரெண்ட்ஸ் ஆஃப் டிரைபல் சொசைட்டியுடன் இணைந்து 5,000 பழங்குடியினர் பள்ளிகளுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்தார்.

கர்நாடகத்தின் வறண்ட பகுதிகளில் ஒன்றான சல்லகெரேயில் ரோட்டரி மேற்கொண்ட நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாடு, காடு வளர்ப்புப் பணிகள் அவரது நீண்டகாலக் கண்ணோட்டத்துக்கு ஊக்கமளித்தன. "இன்று ஏரிகள் நிரம்பியுள்ளன; விலங்குகள் திரும்பி வருகின்றன; சில ஆண்டுகளில் அங்கு அடர்ந்த

> தேங்க்ஸ்' என்பது ஒரு சொல் மட்டுமே. தன்யவாத் என்பது செயல்படும் நன்றியுணர்வு; மனிதனின் தூய்மையான உணர்வு. பிறப்பிலிருந்து இறப்பு வரை நாம் சமூகத்தைச் சார்ந்திருக்கிறோம்; நன்றி சொல்ல மறந்துவிட்டோம்.
>
> **DG** *ரவிசங்கர் டகோஜு*

காடு உருவாகும்," என்று TRF மானிய உதவிக்கு நன்றி தெரிவித்தார்.

மாவட்டம் திருநங்கையருக்கான திறன் மேம்பாட்டு மையத்தை நிறுவி தொழிற்பயிற்சி, கண்ணியமான வேலைவாய்ப்பு வழங்கும். பாராலிம்பிக்ஸ், சிறப்பு விளையாட்டுப் போட்டிகள், ரோட்டராக்டர்களுடன் போதை எதிர்ப்பு பிரசாரங்கள், நாரி சக்தி அறக்கட்டளையுடன் மகளிர் மேம்பாட்டுத் திட்டங்களும் நடைபெறும். ஒவ்வொரு கிராமக் குடும்பத்துக்கும் இரண்டு தென்னங் கன்றுகள் வழங்கும் லக்ஷ்ய கல்ப விருக்ஷா, வாழ்வாதாரத்துக்காக கிராமப் பெண்களுக்கு கறவை மாடுகள் வழங்கும் காமதேனு திட்டங்களும் கிராமங்களை வலுப்படுத்தும்.

இந்திய மக்களில் சுமார் 80 சதவீதம் கிராமங்களில் வசித்தாலும் ரோட்டரி பாரம்பரியமாக நகரங்களில் வளர்ந்துள்ளது எனக் குறிப்பிட்ட டகோஜு, "ரோட்டரியை கிராமிய இந்தியாவுக்கு எடுத்துச் சென்று வலுப்படுத்துவோம்," என்றார். சுற்றுச்சூழல் திட்டங்களுக்காக TRF-க்கு ரூ.1 கோடியை டைரக்டட் கிஃப்டாகவும் வழங்கினார்.

நாடாளுமன்ற உறுப்பினரும் சுற்றுச்சூழல், விலங்கு நலப் போராளியுமான மேனகா காந்தி, தன்யவாத் இயக்கத்தின் பிராண்ட் தூதராக நியமிக்கப்பட்டார். நுகர்வை விட பொறுப்புணர்வையும், சுரண்டலை விட மீட்பையும் தேர்ந் தெடுத்த ரோட்டரியன்களைப்




*தன்யவாத் பிராண்ட் தூதராக மேனகா அறிவிக்கப்படுகிறார். (இடதிலிருந்து): PDG சுரேஷ் ஹரி, IPDG எலிசபெத், RI இயக்குநர் நாகேஷ், பவோலா, DG டகோஜு மற்றும் மாவட்ட செயலாளர் மகாதேவ் தம்பல் ஆகியோரும் உள்ளனர்.*

பாராட்டி, சுற்றுச்சூழல் மீட்பு அன்னை பூமிக்கான “நன்றியுணர்வுச் செயல்” என்றார். மனிதர்கள் இயற்கையிலிருந்து வேறானவர்கள் அல்ல; அதன் ஒரு பகுதிதான் என்பதை உணர்வதிலேயே மனிதகுலத்தின் எதிர்காலம் உள்ளது என்றார். காடுகள், ஆறுகள், புல்வெளிகள், வனவிலங்குகள் பல்லுயிர் வளத்தையும் மனித வாழ்வையும் தாங்குகின்றன;

> காடுகள், ஆறுகள், புல்வெளிகள், வனவிலங்குகள் பல்லுயிர் வளத்தையும் மனித வாழ்வையும் தாங்குகின்றன; அவற்றைக் காப்பது ஆரோக்கியமான சமூகத்திற்கு அவசியம்.
>
> நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் விலங்குகள் நல ஆர்வலர்
> மேனகா காந்தி

அவற்றைக் காப்பது ஆரோக்கியமான சமூகத்திற்கு அவசியம் என்றார். அதிக உள்நாட்டு மரங்களை நடவும், பள்ளி மற்றும் சமூக முயற்சிகள் வழியே விலங்குகளிடம் கருணையை வளர்க்கவும், நிலையான வளர்ச்சியின் அடிப்படையாக இரக்கத்தை அமைக்கவும் கேட்டுக்கொண்டார். “இந்தப் பூமியை எந்த நிலையில் விட்டுச் செல்கிறோம் என்பதே நமது வெற்றியின் அளவுகோல்,” என்றார்.

மாவட்டத் தலைமை பொறுப்பை ஒப்படைத்த வெளியேறும் DG எலிசபெத் செரியன், “உலகம் உங்களைப் பெரிய நன்கொடையாளராக அறியும்; ஆனால் இயற்கையைக் காக்க எந்த எல்லைக்கும் செல்லத் தயாரான தீவிர சுற்றுச்சூழல் ஆர்வலராக நான் அறிகிறேன். மறுஉருவாக்கம், மீட்பு, புதுப்பித்தல், புதுமையாக்கம் மீதான உங்கள் ஆர்வம் இணையற்றது. வசதியற்றோருக்காகத் துடிக்கும் இதயத்துடன் அனைத்து உயிர்களுக்கும் கருணை நிறைந்த ஆண்டை வழங்கு வீர்கள். பாவ்லா, அவரது பயணத்தில் உங்கள் அமைதியான, அர்த்தமுள்ள பங்கு விலைமதிப்பற்றது,” என்றார்.

ஏற்பாட்டுக் குழுத்தலைவர் விஜய் தடிமல்லா, வெற்றி-தோல்விகளை வெளிப்படையாகப் பகிர்ந்து, சந்தித் தோரின் கதைகளை நீண்டகாலம் மனதில் சுமப்பவர் டகோஜு என்றார். “அவர் மனதில் இருப்பதை வெளிப் படையாகக் காட்டுபவர்,” என்றார்.

பதவியேற்பின் ஒரு பகுதியாக எட்டு மாநிலங்களிலும் ரயன் இன்டர்நேஷனல் பள்ளிகளின் 116 வளாகங்களிலும் ஒரே நேரத்தில் கன்றுகள் நடப்பட்டன; நிகழ்விடத்தில் நேரலை ஒளிபரப்பப்பட்டது. ஆண்டு முழுவதும் பள்ளிகளில் 10 லட்சம் கன்றுகள் நடுவதாக ரயன் குழும CEO ரயன் பிண்டோ உறுதியளித்தார்.

RI மாவட்டங்கள் 3191, 3192-ன் முன்னாள், வருங்கால மாவட்டத் தலைவர்கள்; டகோஜுவின் தாய்ச் சங்கமான RC Bangalore மற்றும் அவர் பயின்ற RC Bangalore Orchards உறுப்பினர்கள்பதவியேற்பில் பங்கேற்றனர்.

படங்கள்: ஜெய்ஸ்ரீ

Rotary
PEOPLE OF ACTION

# ரோட்டரி மற்றும் உஷா இணைந்து 70 பெண்களுக்கு வாழ்வாதாரம்

கிரண் ஜெஹ்ரா



தையல் இயந்திரங்களுடன் பயனாளிகள்.

“தையல் இயந்திரம் வெறும் வீட்டுப் பொருள் அல்ல. சரியான கைகளில் அது ஒரு வணிகத்தின் அடிப்படையாகவும் மாறும்” என்கிறார் RC இந்தூர் அப்டவுன் (RID 3040) உறுப்பினர் PDG சஞ்சீவ் குப்தா. “இதே கருத்தில்தான் எங்கள் சங்கமும் உஷா இன்டர்நேஷனல் நிறுவனமும் இணைந்து, 70 கிராமப்புற பெண்களுக்கு தையல் அடிப்படையிலான நிலையான சிறு தொழில்களை உருவாக்கிக் கொடுத்துள்ளோம்.”

உஷா சிலாய் ஸ்கூல்ஸ் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட இப்பெண்கள், மேம்பட்ட தையல், தொழில்முனைவு, சிறுதொழில் மேலாண்மை ஆகியவற்றில் இரண்டு நாள் தீவிர பயிற்சி பெற்றனர். பயிற்சியாளர்கள், தொழில்நுட்ப உதவி, மூலப்பொருட்கள் அனைத்தையும் உஷா நிறுவனம் வழங்கியது. பயிற்சி முடிந்ததும், ஒவ்வொரு பெண்ணுக்கும் தையல் இயந்திரம், கருவிப்பெட்டி, பயிற்சிப் பொருட்கள் ஆகியவற்றை சங்கம் வழங்கியது.

இந்தூரில் உள்ள பானோட் கிராமத்தில் வசிக்கும் சுனிதா பாய், இப்போது தன் வீட்டிலேயே பள்ளி சீருடைகள் தைக்கிறார். “ஆறு மாதங்களுக்கு முன் எனக்கென தனி வருமானம் இல்லை. இன்று தையல் மூலம் கிடைக்கும் பணம் என் மகளின் பள்ளிக் கட்டணத்திற்கும் வீட்டுச் செலவுகளுக்கும் உதவுகிறது” என்கிறார் அவர்.

இத்திட்டத்தின் மொத்த செலவு ரூ.4.48 லட்சம். நவம்பர் 2025-ல் Rotary Friendship Exchange திட்டத்தின் கீழ் மாவட்டத்திற்கு வருகை தந்த RID 5330 (அமெரிக்கா) அனுராதா சைனி, 25 தையல் இயந்திரங்களை நன்கொடையாக அளித்தார். பயிற்சிக்குப் பின்னரும் தொடர்ந்து கற்க உஷா நிறுவனத்தின் உஷா சிலாய் மொபைல் ஆப் பயன்பாட்டை பெண்களுக்கு வழங்கியுள்ளனர், மேலும் அவர்களின் தொழில் வளர்ச்சியை கண்காணித்து வழிகாட்டவும் உள்ளனர்.

“சந்தைக்கேற்ற திறமை, சரியான கருவிகள், தொடர் வழிகாட்டுதல் கிடைக்கும்போது, பெண்கள் தன்னம்பிக்கையுடன் சம்பாதித்து குடும்பத்தின் நிதி பாதுகாப்பிற்கு பங்களிக்கின்றனர்” என்கிறார் குப்தா.

பலர் ஏற்கனவே பள்ளி சீருடைகள், பெண்கள்/குழந்தைகள் ஆடைகள், பைகள் தைக்கத் தொடங்கிவிட்டனர்; சிலர் உள்ளூர் ஆர்டர்களும் பெறுகின்றனர். இது பலருக்கும் முதல் சுயவருமான வாய்ப்பாக அமைந்துள்ளது.

70 கிராமங்களிலும் இதுபோன்ற தையல் தொழில்களை உருவாக்குவதே இந்த இணைப்பின் இலக்கு. “வெற்றி பெற்றால், இந்த மாதிரியை மற்ற பகுதிகளிலும் பின்பற்றலாம்” என்கிறார் குப்தா.

IPDG சுஷில் மல்ஹோத்ரா நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். சங்க உறுப்பினர் தீப்தி துபேவின் ஒருங்கிணைப்பிலும், தலைவர் மன்மோகன் திவாரியின் தலைமையிலும் இத்திட்டம் நடைபெற்றது. ■

# எண்ட் போலியோ நவ் ஜோதி தைவான் திரும்பியது

ரஷீதா பகத்

RC மெட்ராஸ்-ன் எண்ட் போலியோ ஃபிளேம், 2014-15 ரோட்டரி ஆண்டில் S N ஸ்ரீகாந்த் தலைமையில் தொடங்கப்பட்டது. அப்போது RI தலைவராக இருந்த கேரி ஹுவாங் தைவான் தைபேயில் இதை அறிமுகப்படுத்தினார். இந்த ஜூனில் RI மாநாடு நடைபெற்ற அதே தைபே நகருக்கே ஜோதி மீண்டும் சென்றது.

இத்திட்டத்தின் பின்னணிச் சக்தியும், RC மெட்ராஸ் முன்னாள் தலைவரும், எண்ட் போலியோ ஃபிளேம் திட்டத் தலைவருமான ஸ்ரீகாந்த் கூறுகையில், ஜூன் மாதம் ஜோதி தைபே திரும்பியது ஏழு நாட்கள் நடைபெற்ற 540 கி.மீ. எண்ட் போலியோ நவ் தைவான் சைக்கிள் பயணத்தின் ஒரு பகுதியாகும். காஓஷியுங்கிலிருந்து தைபே வரை நடைபெற்ற இந்தப் பயணம் ஜூன் 13, 2026 அன்று நிறைவடைந்தது.

நிறைவு விழாவில் முதன்மை சைக்கிள் வீரர் PDG ஃபிராங்க் ஹ்சூவும், PDG J P ஹோர்ன்கும் இணைந்து, ஜோதியை PRIP கேரியிடம் ஒப்படைத்தனர். தைவானைச் சேர்ந்த கேரி, 2014-ல் சென்னையில் இந்த ஜோதியை அறிமுகப்படுத்தியவர். 12 ஆண்டுகளுக்குப் பிறகும் ஜோதியின் பயணத்தைத் தொடர்ந்து நடத்தி வரும் சென்னை ரோட்டரியன்களை அவர் பாராட்டினார்.

இதுவரை இந்த ஜோதி 35 நாடுகளுக்குப் பயணித்து, தி ரோட்டரி ஃபவுண்டேஷனுக்காக மதிப்பீட்டின்படி ஒரு கோடி டாலர் திரட்ட உதவியுள்ளது; “நாங்கள் கணக்கிடுவதை நிறுத்திவிட்டோம்,” என்கிறார் ஸ்ரீகாந்த். ஆரம்பத்தில் போலியோ நோக்கத்துக்கான நன்கொடைகளைத் தனியே செலுத்த TRF-ல் ஒரு பிரிவை உருவாக்க எண்ணியதாகவும், அதில் தடைகள் இருந்ததால், உலகம் முழுவதும் ஜோதியால் விழிப்புணர்வு பெற்றவர்கள் வழங்கிய நன்கொடைகள் நேரடியாக TRF-க்கே சென்றதாகவும் கூறினார்.

2015 மார்ச்சில் தைவானில் ஜோதிக்கு அளிக்கப்பட்ட வரவேற்பையும், சாவ் பாவ்லோ மாநாட்டின் தொடக்கப் பொதுக்கூட்டத்தில் அதன் விழாக்கோல நுழைவையும் அவர் நினைவுகூர்ந்தார். ஜோதி ஏற்கெனவே பாகிஸ்தானில் இருமுறை பயணித்துள்ளது-சிந்து மற்றும் பஞ்சாப் பகுதிகளில். ஆப்கானிஸ்தானுக்கு ஒருமுறையே, அதுவும் காபூல் வரை மட்டுமே சென்றுள்ளது. போலியோ இன்னும் முற்றிலுமாக ஒழிக்கப்படாத நாடுகள் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் மட்டுமே.

PRIP கேரி மற்றும் தைவான் ரோட்டரியன்களின் வேண்டுகோளின்படி, ஜோதி இனி தைவானின் யிலானில் உள்ள ‘லைட் அப் ரோட்டரி ஹவுஸ்’ அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படும். ரோட்டரியின் வரலாற்றைப் பாதுகாக்கும் அந்த அருங்காட்சியகத்தில், ஜோதி ஒரு முக்கிய மைல்கல்லாகக் கருதப்படுகிறது. “ஜோதியின் பயணத்தைத் தொடர மற்ற தீப்பந்தங்கள் எங்களிடம் உள்ளன,” என்கிறார் ஸ்ரீகாந்த். எவ்வளவு காலம் தொடரும் எனக் கேட்டதற்கு, “போலியோ முழுமையாக ஒழிக்கப்படும் வரை போலும்,” என்று புன்னகையுடன் பதிலளிக்கிறார்.

இந்த உற்சாகமிக்க ரோட்டரியன் தற்போது சுகாதாரத் துறையில் கவனம் செலுத்துகிறார். “முறையான சுகாதார வசதிகள் இல்லாதபோது, போலியோ உட்பட பல உடல்நலப்



*RC மெட்ராஸ் முன்னாள் தலைவர் S N ஸ்ரீகாந்த், தைவான் தைபேயில் நடைபெற்ற சைக்கிள் பயணத்திற்குப் பிறகு PRIP கேரி ஹுவாங்கிடம் (இடதிலிருந்து ஐந்தாவது) எண்ட் போலியோ ஃபிளேமை வழங்குகிறார். RID 3234 DGN S ரவி (இடது), PDG J P ஹோர்ன்க் (வலதிலிருந்து நான்காவது), கொரின்னா ஹுவாங், RC மெட்ராஸ் உறுப்பினர் சிவன் கண்ணன் மற்றும் சங்கத்தின் முன்னாள் தலைவர் N K கோபிநாத் (வலது) ஆகியோரும் காணப்படுகிறார்கள்.*



2015-ல் தைவான் தைபேயில் நடைபெற்ற எண்ட் போலியோ சைக்கிள் பயணத்தில் பங்கேற்பாளர்கள்.

பிரச்சினைகள் உருவாகின்றன," என்கிறார். சென்னை அருகிலுள்ள ஒரு கிராமத்தை திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத கிராமமாக மாற்ற முழு முயற்சியும் செலுத்தினார். அது அவருக்கு உலகளாவிய பாராட்டையும் கவனத்தையும் பெற்றுத் தந்தது; IIM அகமதாபாதும் அதை வழக்காய்வாக எடுத்துக்கொண்டது.

இப்போது அவர் RI-ன் WASH-RAG-ன் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார். "இந்தப் பொறுப்பு வழங்கப்பட்ட முதல் ஆசியர் நான்; இதற்குப் பெரும் திட்டங்கள் உள்ளன," எனக் கூறுகிறார். உலகம் முழுவதும் 150 தூதர்களை அடையாளம் கண்டுள்ள அவர், இத்துறையில் ரோட்டரி பெரும் முன்னேற்றம் காணும் என நம்புகிறார்.

"நீர் உயிர்; சுத்தமான நீர் ஆரோக்கியம். எந்த அறுவைச் சிகிச்சையையும் மருந்தையும் விட சுகாதார வசதிகளே மனித ஆயுளை அதிகரித்துள்ளன. ஆனால் 250 கோடிக்கும் மேற்பட்டோருக்கு பாதுகாப்பான நீர் கிடைப்பதில்லை; 300 கோடிக்கும் மேற்பட்டோருக்கு பாதுகாப்பான சுகாதார வசதி இல்லை. இதன் விளைவுகள் நோய், ஊனம், மரணம்; குழந்தைகளே மிக அதிகம் பாதிக்கப்படுகின்றனர்," என்கிறார் ஸ்ரீகாந்த்.

WASH-RAG, உலகளவில் 40,000-க்கும் மேற்பட்ட ரோட்டரி சங்கங்கள் மேற்கொள்ளும் நிலையான நீர், சுகாதாரம், சுத்தம் சார்ந்த முயற்சிகளுக்கு ஆதரவளித்து வழிகாட்டுகிறது; TRF-உடனும் நெருக்கமாகச் செயல்படுகிறது. அதன் வலையமைப்பில் தொழில்நுட்ப நிபுணர்கள், திட்ட ஆலோசகர்கள், மானிய மதிப்பாய்வாளர்கள், WASH-RAG தூதர்கள் உள்ளனர். அவர்கள் சங்கங்களுடன் இணைந்து ஆலோசனையும் வழிகாட்டுதலும் வழங்க முடியும்.

நீர், சுகாதாரத் திட்டங்களில் பெருமைகொள்ளும் ரோட்டரியன்களிடம் ஸ்ரீகாந்த் ஒரு கவலையூட்டும் எண்ணிக்கையைப் பகிர்கிறார்: தற்போது WASH திட்டங்களின் தோல்வி விகிதம் 50 சதவீதம் என அவர் மதிப்பிடுகிறார். பல சங்கங்கள் ஆர்வத்துடன் திட்டங்களைத் தொடங்கினாலும், இரண்டு முதல் ஐந்து ஆண்டுகளுக்குள் அவை செயலிழந்துவிடுகின்றன. நீடித்த திட்டங்களுக்குப் பதிலாக தனித்திட்டங்களை மேற்கொள்ளும் இந்தப் போக்கால், ரோட்டரிக்கு ஆண்டுதோறும் 2.5 கோடி டாலர் வரை இழப்பு ஏற்படுகிறது என்கிறார்.

"இந்தத் தனித்திட்ட அணுகுமுறையை ரோட்டரி நிறுத்த வேண்டும். ஓரிடத்தில் பள்ளி, மற்றோர் இடத்தில் நீர்த் தொட்டி அமைப்பது மட்டும் உண்மையான தாக்கத்தை ஏற்படுத்தாது. மாவட்ட அளவில் நீடித்த திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். திட்டங்களிலிருந்து தொடர்ச்சியான செயல்திட்டங்களுக்கு நாம் மாற வேண்டும்," என்கிறார்.

DG, DGE, DGN ஆகியோரின் ஆதரவும் உறுதிப்பாடும் உள்ள நீண்டகால, நிலையான செயல்திட்டங்களை மாவட்டங்கள் ஏற்க வேண்டும் என்பதே அவரது திட்டம். உலகின் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று ரோட்டரி மாவட்டங்கள், SDG 6-க்கு இணையான இலக்கை அடையும் உயிரோட்டமான ஆய்வகங்களாக மாற்றப்படும் ஒரு முக்கிய முயற்சியும் திட்டமிடப்பட்டுள்ளது.

இவை அனைத்தும் "உலகளவில் WASH-RAG துறையில் ரோட்டரியை முதன்மையான சக்தியாக மாற்றும்" என உற்சாகமாகச் சொல்கிறார் ஸ்ரீகாந்த். அதற்கு கடின உழைப்பும், சங்கங்கள் ஒன்றிணைந்து செயல்படத் தயாராக இருப்பதும் அவசியம் என்பதையும் அவர் சேர்த்துக் கூறுகிறார். ■

# மேனகா காந்தியுடன் உரையாடல்

ஜெய்ஸ்ரீ



MP-ம் விலங்கு நல ஆர்வலருமான மேனகா காந்தி.

நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக, முன்னாள் மத்திய அமைச்சர் மேனகா காந்தி, விலங்குகள் நலன் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான இந்தியாவின் முக்கியக் குரல்களில் ஒருவராக இருந்து வருகிறார். ரோட்டரி மாவட்டம் 3192-ன் ஆளுநராக ரவிசங்கர் டாகோஜு பதவியேற்ற நிகழ்வின் போது ரோட்டரி நியூஸுடன் பேசிய அவர், காடுகளைப் பாதுகாப்பது, இறைச்சி உணவைக் குறைப்பது, தெருநாய்களை நிர்வகிப்பது மற்றும் தனது பணியைத் தொடர்ந்து ஊக்குவிப்பவை குறித்த கருத்துகளைப் பகிர்ந்துகொண்டார்.

**விலங்குகள் நலனில் உங்களின் ஈடுபாட்டைத் தூண்டியது எது? இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னரும் உங்களை இயக்குவது என்ன?**

**மேனகா காந்தி:** எனக்கு எப்போதும் நீதி குறித்த ஆழமான உணர்வு உண்டு. எல்லா உயிரினங்களும் சமம் என்பதே என் நம்பிக்கை. மனிதர்களைப் போலவே விலங்குகளும் பயம், வலி, உணர்ச்சிகளை அனுபவிக்கின்றன. ஒரு எறும்பை மிதிக்க முயன்றால் அதுவும் ஓடும். மீன்களுக்கு மிக அதிக வலி உணர்வுக் கூறுகள் உள்ளன; அவையும் உணர்ச்சிகளை உணர்கின்றன. தங்கள் குட்டியை இழந்த யானைகள் துயரப்படுவதை நாம் பார்த்திருக்கிறோம். இதை உணர்ந்த பிறகு, அவற்றை வேறுபடையாக நடத்துவதை நியாயப்படுத்த முடியாது. நாடாளுமன்றத்தில் இருந்த காலமெல்லாம், பேச முடியாத உயிர்களுக்காக யாராவது பேச வேண்டும் என்று நம்பினேன். உலகத்தைச் சிறப்பாக்குவது நம் ஒவ்வொருவரின் பொறுப்பு.

**இந்தியாவின் சுற்றுச்சூழல் சவால்களில் உங்களை மிகவும் கவலைப்படுத்துவது எது?**

காடுகள் அழிவதே. நமது நீர்ப் பாதுகாப்பு, மழை மற்றும் உயிரினப் பன்மைக்கான அடித்தளம் காடுகளே. காடுகள் மறைந்தால் பிற அனைத்தும் பாதிக்கப்படும். காலநிலை மாற்றத்தை உண்மையாக எதிர்கொள்ள வேண்டுமெனில், காடுகளைப் பாதுகாப்பது தேசிய முன்னுரிமையாக வேண்டும்.

பெருமளவிலான இறைச்சி உற்பத்தி காடுகளுக்கு பெரும் அழுத்தம் தருகிறது. அது மீத்தேன் உமிழ்வுக்கும் சுற்றுச்சூழல் சீரழிவுக்கும் முக்கியக் காரணம். மேலும், இறைச்சிக்கூடக் கழிவுநீரும் தோல் தொழிலும் ஆபத்தான ரசாயனங்களால் நீர்நிலைகளை மாசுபடுத்துகின்றன.

**உலக மக்கள்தொகையில் 80–85 சதவீதம் பேர் அசைவ உணவாளர்கள் என ஆய்வுகள் கூறுகின்றன. அவர்களை இறைச்சி உண்பதை நிறுத்த எவ்வாறு சம்மதிக்க வைக்கலாம்?**



*இடதிலிருந்து:* RI *இயக்குநர்* K P *நாகேஷ்,* DG *ரவிசங்கர் டகோஜு, மேனகா, உமா நாகேஷ் மற்றும் பவோலா டகோஜு ஆகியோர் பெங்களூரில் நடைபெற்ற டகோஜுவின் பதவியேற்பு விழாவில்.*

இது சுற்றுச்சூழலுக்கும் பொதுச் சுகாதாரத்திற்கும் அவசியம். உணவுத் தேர்வுகள் நமது உடல்நலத்தையும் பூமியையும் எவ்வாறு பாதிக்கின்றன என்பது பற்றிய விழிப்புணர்வு அதிகரிக்க வேண்டும். இறைச்சி உற்பத்தியின் சுற்றுச்சூழல் செலவுகளை பலர் முழுமையாகப் புரிந்துகொள்வதில்லை. இறைச்சியை உயர்வான வாழ்க்கைமுறையின் அடையாளமாக்கிவிட்டோம்; ஆனால் இன்று பல வெற்றிகரமானவர்கள் சைவ உணவைத் தேர்வுசெய்கிறார்கள். பொது விழிப்புணர்வு இந்தத் தேர்வுகளை மெதுவாக மாற்றும்.

அமெரிக்காவில் இறைச்சியின் சுற்றுச்சூழல், உடல்நல பாதிப்புகள் எதிர்ப்பைச் சந்தித்தபோது, அதனை ‘புரதம்’ என்று அழைத்தார்கள். நாம் விஷயங்களை மறைத்துக்கொண்டே இருக்கிறோம்.

**மருத்துவக் கல்வியில் ஊட்டச்சத்துக்கு அதிக கவனம் வேண்டும் என்று நீங்கள் கூறுகிறீர்கள். ஏன்?**

மருத்துவர்கள் பெரும்பாலும் நோய்களுக்கு சிகிச்சையளிக்கப் பயிற்றுவிக்கப்படுகிறார்கள்; ஊட்டச்சத்துக்கு மிகக் குறைந்த முக்கியத்துவமே தரப்படுகிறது. ஊட்டச்சத்து பற்றிய நல்ல புரிதல், சிகிச்சை தேவைப்படும் முன்பே பல உடல்நலப் பிரச்சினைகளைத் தடுக்க உதவும். நல்ல ஆரோக்கியத்திற்கு பால் அவசியம் என்ற பரவலான நம்பிக்கை உட்பட, ஏற்றுக்கொள்ளப்பட்ட பல உணவுப் பழக்கங்கள் அறிவியல் ஆய்வுகளின் வெளிச்சத்தில் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும். உணவுக்கும் நீண்டகால உடல் நலத்துக்கும் உள்ள தொடர்பை மருத்துவர்களும் மக்களும் அறிய வேண்டும்.

**தெருநாய் தாக்குதல்கள் பல நகரங்களுக்கு கவலையாகத் தொடர்கின்றன. தீர்வு என்ன?**

அறிவியல் முறையிலான கருத்தடை, தடுப்பூசி வழங்கும் ABC (விலங்கு பிறப்புக் கட்டுப்பாடு) திட்டமே தீர்வு. இது பல நாடுகளில் வெற்றிகரமாக செயல்பட்டுள்ளது. இந்தியாவில் போதிய நிதியின்மையும் மோசமான செயலாக்கமும் இதைப் பாதித்துள்ளன. நாய்களுக்கு கருத்தடை செய்வதற்குப் பதிலாக அவற்றை இடமாற்றம் செய்கிறார்கள்; இதனால் அவை பயந்து கடிப்பதற்கான வாய்ப்பு அதிகரிக்கிறது. திட்டம் நேர்மையாகவும் போதிய நிதியுடனும் செயல்படுத்தப்பட்டால், தெருநாய் எண்ணிக்கையையும் ரேபிஸையும் திறம்படக் கட்டுப்படுத்தலாம்.

**உங்கள் பயணத்தைத் திரும்பிப் பார்க்கும்போது, உங்களை மாற்றிய ஒரு தீர்மானிக்கும் தருணம் இருந்ததா?**

ஒரே ஒரு தருணம் இல்லை. நான் ஒவ்வொரு நாளும் கற்றுக்கொள்கிறேன். தொடர்ந்து படித்து, புரிந்து, கற்றவற்றை நடைமுறைப்படுத்தும்போது என் சிந்தனைகளும் வளர்கின்றன. கவனம் தேவைப்படும் புதிய சவால்கள் எப்போதும் உள்ளன. இது உண்மையிலேயே வாழ்நாள் முழுவதும் தொடரும் கற்றல் பயணம்.■



Rotary PEOPLE OF ACTION

# கருடனுக்கு வாழிடம் அமைத்த பாகல்பூர் ரோட்டேரியன்கள்

ரஷீதா பகத்

இந்தியாவில் உள்ள ரோட்டரி சங்கங்கள் நமது சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன, ஆனால் இவற்றில் பெரும்பாலானவை மரங்களை நட்டு பூமியைப் பசுமையாக்குவதிலும், பல்லுயிர் வளத்தை வலுப்படுத்துவதிலும் கவனம் செலுத்துகின்றன. RID 3250-ன் 70 உறுப்பினர்களைக் கொண்ட RC பாகல்பூர் சங்கமும் 200-க்கும் மேற்பட்ட மரங்களை நடுவதாக முடிவு செய்துள்ளது, ஆனால் அவர்களது கண்ணோட்டத்தில் ஒரு சுவாரசியமான திருப்பம் உள்ளது. இது முக்கியமாக காதம்ப மரங்களை நடுவது தொடர்பானது, அதுவும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக.

சங்கத்தின் கடந்த ஆண்டு தலைவரான அனுபமா குமார், காதம்ப மரங்களில் கூடு கட்டி வாழும் கருடன் பறவைக்கு போதுமான, சிறந்த வாழிடத்தை வழங்குவதே இந்தத் திட்டத்தின் முதன்மை நோக்கம் என்று விளக்குகிறார். பாகல்பூரிலிருந்து சுமார் 27 கிமீ தொலைவில் உள்ள கைர்பூர் கத்வாவில் ஒரு அரசுப் பள்ளி இருப்பதாகவும், அங்கு சில காதம்ப மரங்களில் கருடன் பறவைகள் கூடு கட்டி வாழ்வதாகவும் அவர்கள் கண்டறிந்தனர்.

அழிவின் விளிம்பிலிருந்து கருடனை (விஷ்ணுவின் வாகனமான புராண பறவையின் பெயர்) அல்லது கிரேட்டர் அட்ஜுட்டன்ட் நாரையைக் காப்பாற்ற சாதகமான வாழிடத்தை உருவாக்கும் இத்திட்டத்தில் அனுபமாவின் ஆர்வம், பீகாரின் புகழ்பெற்ற பறவையியலாளர் அரவிந்த் மிஸ்ராவுடனான தொடர்பிலிருந்து உருவானது; இவர் பாகல்பூரில் அவரது வீட்டிற்கு அருகில் வசிக்கிறார். மிஸ்ரா 13 ஆண்டுகள் தொடர்ந்து உழைத்து கிரேட்டர் அட்ஜுட்டன்ட் நாரையை அழிவிலிருந்து காப்பாற்றியவர்; உள்ளூர் மக்களின் உதவியுடன் இந்த பறவை இனத்திற்கு பாதுகாப்பான

வாழிடத்தை உருவாக்கியுள்ளார்.

“எங்கள் அக்கம்பக்கத்தில் கழுகு போன்ற ஏதேனும் பறவை காயமடைந்தால், நாங்கள் அவரை அழைத்து உதவி கேட்போம். கருடனின் எண்ணிக்கை வெறும் 200-ஆகக் குறைந்திருந்ததாகவும், அவர் ஒன்றிணைத்த குழுவின் முயற்சியால் அது 700-ஆக உயர்ந்ததாகவும் அவர் என்னிடம் கூறினார்” என்கிறார் அனுபமா.

மிஸ்ரா மூலம் கருடன் பற்றியும், பாகல்பூர் வழியாகப் பாயும் கங்கையில் காணப்படும் அழிவின் விளிம்பில் உள்ள இனமான கங்கை நதி டால்பின்கள் பற்றியும் பல சுவாரசியமான உண்மைகளைத் தான் அறிந்துகொண்டதாக அனுபமா கூறுகிறார். “கருடன் மற்றும் டால்பின்களைக் காப்பாற்றுபவர்கள் என்று சிலர் உள்ளனர், இவர்கள் இந்த இனங்களைக் காப்பாற்ற கவுரவப் பணி செய்கிறார்கள். உதாரணமாக, ஒரு கருடன் மரத்திலிருந்து விழுந்தாலோ அல்லது காயமடைந்தாலோ, அருகிலுள்ள குறிப்பிட்ட அரசு சரணாலயத்திற்கு அதை எடுத்துச் சென்று, குணமடையும் வரை சிகிச்சை அறைகளில் வைத்து சிகிச்சையளிப்பார்கள்; பறக்கும் திறன் திரும்பியதும், அவற்றை மீண்டும் இயற்கை வாழிடத்திற்கே அனுப்புவார்கள்” என்று அவர் கூறினார்.

கருடனுக்கு உதவ ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் இருந்த ரோட்டேரியன்கள், அவை காதம்ப மரங்களில் வாழ்வதை அறிந்தபோது - இந்த மரங்கள் 14 கிலோ வரை எடையுள்ள இந்த பறவைகளுக்கு ஏற்றவை என்பதால் - இந்த மரங்களை நடத் தீர்மானித்தனர். கருடனுக்கு ஏற்ற வாழிடம் என்பது, வலிமையான, உறுதியான ஆனால் நெகிழ்வான கிளைகளைக் கொண்ட மரமாகும், இதனால் இந்த கனமான பறவைகளின் எடையை கிளை முறியாமல் தாங்க முடியும். ஆலமரத்திலும் கருடன் கூடு கட்ட முடியும், ஆனால் காதம்ப மரமே இவற்றுக்கு சிறந்ததாகக் கருதப்படுகிறது.

சுவாரசியமாக, கருடனைப் போலவே, சுற்றுச்சூழல் மற்றும் மருத்துவ பண்புகளுக்குப் பெயர் பெற்ற காதம்ப மரமும், இந்திய புராணங்களில் ஆழமான ஆன்மீக முக்கியத்துவம் பெற்றுள்ளது. காதம்பம் வேகமாக வளரும் வெப்பமண்டல மரமாகும், இது 45 மீட்டர் உயரம் வரை வளரக்கூடியது, மேலும் கருடனுக்கு ஏற்ற வாழிடத்தை வழங்குகிறது. 2026 மார்ச் மாதத்தில் தொடங்கி, இந்தத் திட்டத்தின் கீழ், இந்தப் பள்ளிக்கு அருகிலுள்ள சாலையின் இரு ஓரங்களிலும் சுமார் 200 காதம்ப மரங்கள் நடப்பட்டன, காதம்ப மரங்களுக்கு இடையே பலா மரங்களும் நடப்பட்டன. மரங்களைப் பாதுகாக்க கேபியன்கள் (கால்வனைஸ் செய்யப்பட்ட கம்பி வலை அடைப்புகள்) பெறப்பட்டு, மரங்களுக்குத் தண்ணீர் ஊற்ற இரண்டு பேர் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.



பீகார் மாநிலம் பாகல்பூர் பகுதியில் கருடன் என்று அழைக்கப்படும் பெருந்தலைக் கொக்கு (கிரேட்டர் அட்ஜுட்டன்ட் ஸ்டார்க்).

“அழிவை நெருங்கிக்கொண்டிருந்த அரிய இனமான கம்பீரமான கருடன் பறவைகளுக்கு விலைமதிப்பற்ற வாழிடத்தையும் அமைதியான தங்குமிடத்தையும் மேம்படுத்த நாங்கள் ஏதோ செய்துள்ளோம் என்ற உணர்வு எங்களுக்கு பெரும் திருப்தியை அளிக்கிறது” என்று இந்தப் பாதுகாப்புத் திட்டம் தங்களுக்கு அளித்த திருப்தி குறித்து அனுபமா கூறுகிறார். கத்வா, மற்றும் அசாமின் சில பகுதிகள் மட்டுமே இந்த அரிய பறவையைக் காணக்கூடிய ஒரே சில இடங்களாகும். “வெறும் மரம் நடும் செயல்பாட்டைத் தாண்டி, இந்த முயற்சி நமது பல்லுயிர் வளத்தைப் பாதுகாக்கவும், சூழலியல் சமநிலையை மீட்டெடுக்கவும், எதிர்கால சந்ததியினர் அழகிய கருடன் பறவைகளை அவற்றின் இயற்கை வாழிடத்தில் தொடர்ந்து பார்த்து மகிழ உறுதி செய்யவும் ஒரு அர்த்தமுள்ள படியாகும்” என்றார் அவர்.

பாதுகாப்புத் துறையில் பெண்கள் தலைமையிலான முயற்சிகள் தொடர்வது மகிழ்ச்சி அளிக்கிறது. அசாமில், உள்ளூரில் ஹர்கிலா என்று அழைக்கப்படும் கிரேட்டர் அட்ஜுட்டன்ட் நாரையை (பாகல்பூரின் கருடனைப் போன்றது) காப்பாற்ற பெண்கள் ஒன்றிணைந்துள்ளனர்; இந்தப் பறவை முன்பு கிராமவாசிகளால் “அழுக்கான, துர்நாற்றமுள்ள பறவை” என்று கருதப்பட்டு தாக்கப்பட்டு வந்தது. தங்களை ஹர்கிலா ஆர்மி என்று அழைத்துக்கொள்ளும் இந்தப் பெண்கள், இந்த இனத்தைப் பாதுகாக்கவும், அதன் மீது பாராட்டை ஏற்படுத்தவும், இந்தப் பறவைகளைத் தங்கள் பாடல்கள், பிரார்த்தனைகள், நெசவு வேலைப்பாடுகளில் இணைத்துக்கொள்கின்றனர். இது அவற்றின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் உதவியுள்ளது.■




# இருசக்கரப் பயணத்தில் ரோட்டரி நட்புறவை வலுப்படுத்தும் முயற்சி

ரஷீதா பகத்

உலகெங்கும் ஒரே விருப்பம் அல்லது பொழுதுபோக்கைக் கொண்ட ரோட்டரியன்களை இணைக்கும் ரோட்டரி நட்புறவுக் குழுக்களில், உற்சாகமிக்க ஒன்றாகத் திகழ்வது மோட்டார் சைக்கிள் ரோட்டரியன்களின் சர்வதேச நட்புறவு அமைப்பு (IFMR). இதன் இந்திய அத்தியாயம், மறைந்த PDG பிரித்வி ராவலால் 2003-ல் தொடங்கப் பட்டது; தலைமையகம் பெங்களூருவில் உள்ளது என்கிறார் RID 3191-ன் RC பெங்களூரு லேக்சைடு உறுப்பினரும், இந்நட்புறவின் இந்திய அத்தியாயத்தின் புதிய தலைவருமான வினோத் அகர்வால்.

IFMR 1993-ல் ஆஸ்திரேலியாவில் தோன்றியது. இன்று 55 அத்தியாயங்கள், 6,000-க்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட உலகளாவிய வலையமைப்பாக வளர்ந்துள்ளது. இந்திய அத்தியாயத்தில் 15 நகரங்களில் பரவியுள்ள 700-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர்.

“மோட்டார் சைக்கிள் பயணத்தின் மகிழ்ச்சியையும், சேவை மீதான ரோட்டரியின் உறுதிப்பாட்டையும் இணைப்பதே IFMR-ன் உண்மையான நோக்கம். சங்க எல்லைகளைத் தாண்டி ரோட்டரியன்களை இணைப்பதன் மூலம் நட்பை வலுப்படுத்தி, அர்த்தமுள்ள ரோட்டரி முயற்சிகளுக்கு ஆதரவளிக்கிறோம்,” என்கிறார் அகர்வால். ஆண்டுகள் பலமாக, எழுத்தறிவு, கொரோனா பெருந்தொற்று நிவாரணம், மனநல விழிப்புணர்வு, எண்ட் போலியோ




**IFMR இந்தியா அணி, தங்கள் சவாரிகளில் ஒன்றின்போது ஒரு பிட்-ஸ்டாப்பில்.**

பிரசாரம், அண்மையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சுகாதார விழிப்புணர்வு போன்றவற்றுக்காக IFMR இந்தியா பல தாக்கமிக்க பயணங்களை மேற்கொண்டுள்ளது.

அதன் முக்கிய முயற்சிகளில் ஒன்றாக, 28 ரோட்டரியன்கள் கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரை இருசக்கர வாகனத்தில் பயணித்து, நாட்டின் பல பகுதிகளுக்கும் ரோட்டரியின் சேவைச் செய்தியைக் கொண்டு சென்றனர்.

ரோட்டரியின் பிற முக்கியப் பொறுப்புகளைப் போல, IFMR இந்தியத் தலைமையும் ஒவ்வோர் ஆண்டும் ஜூலையில் மாறுகிறது. அகர்வால் பொறுப்பேற்றதை முன்னிட்டு, புதிய ரோட்டரி ஆண்டின் தொடக்கத்தைக் கொண்டாட 45 ரோட்டரியன்கள், பெங்களூருவிலிருந்து சுமார் 75 கி.மீ. தொலைவில் உள்ள இயற்கை அழகு மிகுந்த ராக்கி ரிட்ஜ் பைக்கர்ஸ் கஃபேக்கு காலை உணவுப் பயணத்தில் பங்கேற்றனர்.

ஜூலை 1 அன்று குளிர்ச்சியான தென்றல் வீசிய காலை 6.30 மணிக்கு, இரண்டு பெண்கள் உட்பட ரோட்டரியன்கள் புறப்படும் இடத்தில் கூடியிருந்தனர். அவர்களில் ஒன்பது முன்னாள் தலைவர்கள், மூன்று நிறுவன உறுப்பினர்கள் மற்றும் பல ஆர்வமிக்க உறுப்பினர்கள் இருந்தனர். “90 நிமிட மகிழ்ச்சியான பயணத்துக்குப் பின், ரைடர்கள் ராக்கி ரிட்ஜை அடைந்தனர். பயண உடைகள் வைப்பதற்கான இடங்கள், ஹெல்மெட் சேமிப்பகம், வசதியான ஓய்விடங்கள் என மோட்டார் சைக்கிள் பயணிகளுக்காகவே வடிவமைக்கப்பட்ட இடம் அது. அழகிய வளாகத்தைச் சுற்றிப் பார்த்து, சக பயணிகளுடன் உரையாடி, புகைப்படங்கள் எடுத்த பின் சிறப்பான காலை உணவைச் சுவைத்தோம்,” என்கிறார் அவர்.

அந்தக் காலையின் சிறப்பம்சமாக, ரோட்டரி ஆண்டு 2026-27-க்கான இந்திய அத்தியாயத்தின் 17-வது தலைவராக அகர்வால் பதவியேற்றார். IFMR உலகச் செயலர் பிரசாந்த் பாபு பதவியேற்பை நடத்தினார். மேலும் மூன்று புதிய ரோட்டரியன் இருசக்கர வாகனப் பயணிகள் நட்புறவு அமைப்பில் சேர்க்கப்பட்டனர். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் முறையாகப் பதவியேற்று பெயர்ப் பதக்கங்களைப் பெற்றனர்.

உற்சாகமான பயணிகளிடம் பேசிய அகர்வால், பொறுப்பான மோட்டார் சைக்கிள் பயணத்தின் வழியே நட்புறவை வலுப்படுத்தி ரோட்டரி சேவை முயற்சிகளை முன்னெடுப்பதற்கான தனது கண்ணோட்டத்தையும்

செயல்திட்டத்தையும் பகிர்ந்தார். இந்திய அத்தியாயத்தின் நீடித்த முழக்கமான “ஆர்வத்துடன், பொறுப்புடன் பயணிப் போம்” என்பதையும் வலியுறுத்தினார். காலை 10.45 மணிக்கு, ஒழுங்கான அணிவகுப்பில் பெங்களூரு திரும்பும் பயணத்தைத் தொடங்கினர்.

அகர்வால் தனது 20-வது வயதில் சென்னை கல்லூரி நாட்களில் இண்ட்-சுஸுகி மோட்டார் சைக்கிளில் பயணத்தைத் தொடங்கினார். தற்போது ராயல் என்ஃபீல்டின் சூப்பர் மீட்டியர் 650 சிசி வாகனத்தை ஓட்டுகிறார். அவரது கனவு வாகனம்? “நிச்சயமாக ஹார்லி டேவிட்சனின் அட்வென்ச்சர் பைக்,” என்கிறார்.

லடாக், ஸ்பிதி பள்ளத்தாக்கு, ஏழு சகோதரி வடகிழக்கு மாநிலங்கள் பயணம், கன்னியாகுமரி-காஷ்மீர் K2K பயணம், பூடானுக்கான சர்வதேசப் பயணம், கோவா உள்ளிட்ட பல தொலைதூரப் பயணங்கள் என இந்தியாவின் தனது கனவுப்பட்டி யலிலுள்ள அனைத்துச் சாகசப்பயணங் களையும் மேற்கொண்டுள்ளார். இந்திய ரோட்டரியின் மண்டலம் 7-ல் 4,000 கி.மீ. தூரம் கொண்ட மனநல விழிப்புணர்வுப் பயணத்திலும் பங்கேற்றுள்ளார்.



பொறுப்பான பயணம் என்றால் என்ன என்பதை அகர்வால் விளக்குகிறார்: “நாங்கள் கட்டுப்பாடுமிக்க பயணிகள். முந்திச் செல்லுதல் இல்லை; இரவுப் பயணம் இல்லை; பயணத்தில் மது அருந்துதல், பந்தயம் இல்லை. சாலையில் பிற பயணிகளுக்கு உரிய சைகைகளை வழங்க வேண்டும். வாகனம் பழுதாகி சிரமப்படும் ஒருவரைத் தனியே விட்டுச் செல்லக் கூடாது. பட்டியல் நீளமானது!”



*வினோத் அகர்வால், IFMR இந்தியா பிரிவின் தலைவர்.*

தலைவராக தனது ஆண்டில் உறுப்பினர்களுக்கான இருசக்கரப் பயண நாள்காட்டி நிரம்பியுள்ளது. கூர்க், கோவா, கொச்சி, காரைக்குடி, உடுப்பி உள்ளிட்ட இடங்களுக்கு இரவுத் தங்கல் பயணங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமை, 150 முதல் 400 கி.மீ. வரையிலான காலை உணவுப் பயணங்களும் நடைபெறும்.

21 பயணிகள் பங்கேற்கும் லடாக் நீண்ட சாகசப் பயணம் ஆரம்பத் தயாரிப்பில் உள்ளது. இது ஆகஸ்ட் 21-ல் தொடங்கி செப்டம்பர் 5-ல் நிறைவடையும். அடுத்த ஆண்டு ஜனவரி 13-24 தேதிகளில் வெளிநாட்டு பயணிகள் இந்தியா வரும் சர்வதேசப் பயணமும் திட்டமிடப்பட்டுள்ளது. “20-க்கும் மேற்பட்ட சர்வதேசப் பயணிகள் இணைவார்கள் என எதிர்பார்க்கிறோம். குஜராத்தின் வண்ணமயமான ரண் ஆஃப் கட்ச் திருவிழா, தோலவீரா, கிர் காடு போன்ற இடங்களுக்கு அவர்களை அழைத்துச் செல்லத் திட்டமிட்டுள்ளோம்,” என்கிறார் அகர்வால்.

இந்த நட்புறவு அமைப்பில் இணைய விரும்பும் ரோட்டரியன்கள்: +91 95913 82390.

# India leads the world in Rotaract, Interact membership during 2025-26

## Top 30 districts with largest Rotaract membership in the world

| Rank | District | Country | Clubs | Members |
|---|---|---|---|---|
| 1 | 3233 | India | 70 | 5844 |
| 2 | 3000 | India | 146 | 5657 |
| 3 | 3292 | Nepal | 189 | 4470 |
| 4 | 3220 | SriLanka | 95 | 4142 |
| 5 | 9213 | Uganda | 148 | 3155 |
| 6 | 9214 | Tanzania | 117 | 2545 |
| 7 | 3080 | India | 82 | 2338 |
| 8 | 3131 | India | 100 | 2236 |
| 9 | 3192 | India | 86 | 2055 |
| 10 | 3150 | India | 53 | 2005 |
| 11 | 9104 | Ghana | 68 | 1933 |
| 12 | 3234 | India | 73 | 1876 |
| 13 | 3191 | India | 83 | 1875 |
| 14 | 3141 | India | 124 | 1873 |
| 15 | 3206 | India | 103 | 1767 |

| Rank | District | Country | Clubs | Members |
|---|---|---|---|---|
| 16 | 9010 | Algeria | 129 | 1607 |
| 17 | 3060 | India | 51 | 1459 |
| 18 | 3203 | India | 71 | 1449 |
| 19 | 9216 | Eritrea | 78 | 1428 |
| 20 | 3300 | Malaysia | 35 | 1416 |
| 21 | 3011 | India | 70 | 1392 |
| 22 | 9142 | Nigeria | 97 | 1370 |
| 23 | 3170 | India | 108 | 1281 |
| 24 | 9101 | Burkina Faso | 85 | 1264 |
| 25 | 9215 | Kenya | 60 | 1226 |
| 26 | 3820 | Philippines | 90 | 1163 |
| 27 | 3860 | Philippines | 88 | 1154 |
| 28 | 3142 | India | 57 | 1095 |
| 29 | 3030 | India | 81 | 1069 |
| 30 | 3450 | Hongkong | 68 | 1047 |

## Top 30 districts with largest Interact clubs in the world

| Rank | District | Country | Clubs |
|---|---|---|---|
| 1 | 3262 | India | 685 |
| 2 | 3030 | India | 594 |
| 3 | 3000 | India | 478 |
| 4 | 3090 | India | 393 |
| 5 | 3131 | India | 361 |
| 6 | 3212 | India | 299 |
| 7 | 3170 | India | 294 |
| 8 | 3271 | Pakistan | 288 |
| 9 | 3132 | India | 279 |
| 10 | 3100 | India | 278 |
| 11 | 3011 | India | 262 |
| 12 | 3080 | India | 261 |
| 13 | 3191 | India | 256 |
| 14 | 3141 | India | 246 |
| 15 | 3192 | India | 237 |

| Rank | District | Country | Clubs |
|---|---|---|---|
| 16 | 3203 | India | 228 |
| 17 | 9141 | Nigeria | 201 |
| 18 | 3020 | India | 198 |
| 19 | 3150 | India | 193 |
| 20 | 3181 | India | 193 |
| 21 | 9213 | Uganda | 193 |
| 22 | 3182 | India | 186 |
| 23 | 3231 | India | 176 |
| 24 | 3234 | India | 163 |
| 25 | 3142 | India | 162 |
| 26 | 3220 | Sri Lanka | 158 |
| 27 | 9212 | Eritrea | 158 |
| 28 | 3292 | Nepal | 149 |
| 29 | 3300 | Malaysia | 139 |
| 30 | 3012 | India | 134 |



# ரோட்டரியை வலுப்படுத்தும் ரோட்டராக்ட்

**K P நாகேஷ்**

சேவை வழியாகத் தலைமை உருவாகும் என்பதில் ரோட்டரி எப்போதும் நம்பிக்கை கொண்டுள்ளது. இளைஞர்கள் நாளைய தலைவர்கள் மட்டுமல்ல, இன்றைய தலைவர்களும்கூட என்பதை ரோட்டராக்ட் உலகிற்கு நிரூபித்துள்ளது. ரோட்டரி, ரோட்டராக்ட், இன்ட்ராக்ட் ஆகிய மூன்றும் சமூகங்களில் நேர்மறையான, நீடித்த மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரே நோக்கத்தில் இணைந்த குடும்பம்.

மாவட்ட ஆளுநராகப் பணியாற்றி, RID 3190 உலக அங்கீகாரம் பெற்றதைக் கண்ட அனுபவத்தில், நிலையான வளர்ச்சி தனிநபர்களால் மட்டும் உருவாவதில்லை என்பதை அறிந்தேன். அனுபவமிக்க தலைவர்கள் இளைஞர்களை நம்பிப் பொறுப்பளித்து, பொறுமையுடன் வழிகாட்டி, அவர்களின் வெற்றியைத் தங்களுடையதாகக் கொண்டாடும்போதே அது சாத்தியமாகிறது.

ரோட்டராக்ட் இப்போது ரோட்டரியின் இளைய வடிவம் அல்ல; உலகின் மிகப் பெரிய இளைஞர் தலைமை இயக்கங்களில் ஒன்றாக வளர்ந்துள்ளது. RI தலைவர் ஒலயின்கா பாபலோலா, துணைத் தலைவர் M முருகானந்தம் இருவரும் முன்னாள் ரோட்டராக்டர்கள். இந்தியா முழுவதும் ஆயிரக்கணக்கான இளம் தொழில்முறையாளர்கள், மாணவர்கள்

*RI இயக்குநர் K P நாகேஷ், பிராந்திய ரோட்டராக்ட் இளைஞர் ஆலோசனைக் குழுவின் தலைவர் PDRR கார்த்திக் கிட்டு (இடதிலிருந்து ஐந்தாவது) மற்றும் மண்டலங்கள் 4,5,6,7,8-க்கான பதவிக் குழுவினருடன்.*



புதுமையான சேவைத் திட்டங்களை வடிவமைத்து, உள்ளூர் சவால்களுக்குத் தீர்வுகண்டு, தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, அளவிடக்கூடிய சமூகத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர்.

ரோட்டராக்டின் சிறப்பு, சுதந்திரத்தையும் வழிகாட்டுதலையும் இணைப்பதில் உள்ளது. ரோட்டராக்டர்கள் படைப்பாற்றல், ஆற்றல், டிஜிட்டல் சிந்தனை, புதுமையான பார்வையைத் தருகிறார்கள். ரோட்டரியன்கள் அனுபவம், தொடர்பு வலையமைப்பு, நிர்வாகம், தொழில்முறை நெறிமுறைகள், அமைப்புத் தொடர்ச்சியை வழங்குகின்றனர். இவை இணைந்தால் அசாதாரண செயல்கள் நிகழும்.

ரோட்டரியின் “Service Above Self” முழக்கமும், ரோட்டராக்டின் “Fellowship Through Service” முழக்கமும் ஒன்றுக்கொன்று அழகாகப் பொருந்துகின்றன. அர்த்தமுள்ள சேவை உறவுகள், ஒத்துழைப்பு, பகிரப்பட்ட நோக்கத்திலிருந்து தொடங்குகிறது என்பதை அவை உணர்த்துகின்றன. ரோட்டரி, ரோட்டராக்ட், இன்ட்ராக்ட் தனித்தனியாகச் செயல்படாமல், ஒருங்கிணைந்த அணிகளாக இயங்க வேண்டும். ஒவ்வொரு ரோட்டரி சங்கமும் தன் ரோட்டராக்ட், இன்ட்ராக்ட் சங்கங்களுக்கு வழிகாட்டி, இளம் உறுப்பினர்கள் எதிர்கால ரோட்டரி தலைவர்களாக இயல்பாக வளர வழி அமைக்க வேண்டும்.



### பொதுவான குறைந்தபட்ச செயல்திட்டம்

ஒவ்வொரு ரோட்டரி சங்கமும் தன் ரோட்டராக்ட், இன்ட்ராக்ட் சங்கங்களுடன் இணைந்து, ஆண்டு முழுவதும் கற்றல், நட்பு, சேவை வாய்ப்புகளை உருவாக்கும் பொதுவான செயல்திட்டத்தை மேற்கொள்ளலாம். ரோட்டராக்ட் அல்லது இன்ட்ராக்ட் சங்கம் இல்லையெனில் தொடங்குங்கள். இலக்கு 1:2:3-ஒரு ரோட்டரி சங்கம் இரண்டு ரோட்டராக்ட், மூன்று இன்ட்ராக்ட் சங்கங்களைத் தொடங்க வேண்டும்.

RYLA, தலைமைப் பயிற்சி, குளோபல் கிராண்ட் பங்கேற்பு, விளையாட்டுப் போட்டிகள், நட்புறவு நிகழ்வுகள், விவாதம் மற்றும் பொதுப் பேச்சுப் போட்டிகள், தொழிற்சாலைப் பயணங்கள், நிறுவன அனுபவம், பயிற்சிப் பணிவாய்ப்புகள், பாரம்பரிய மற்றும் வரலாற்றுச் சுற்றுப்பயணங்கள், தேர்வு அச்சம், மனஅழுத்தம், தொழில் திட்டமிடல் குறித்த பயிலரங்குகள் நடத்தலாம். இவை நாள்காட்டியை நிரப்புவதற்கானவை மட்டுமல்ல; நம்பிக்கையுள்ள, கருணைமிக்க, திறமையான இளம் தலைவர்களை உருவாக்குபவை.

### ஒவ்வொரு ரோட்டராக்டரும் வளர்த்துக்கொள்ள வேண்டிய ஏழு வாழ்க்கைத் திறன்கள்:

1. சமூகத் தொடர்பு – பல பண்பாடுகள், தொழில்களைக் கடந்த உறவுகளை உருவாக்குதல்.
2. விமர்சனச் சிந்தனை – கேள்வி எழுப்பி, ஆராய்ந்து தெளிவாகத் தீர்வுகாணுதல்.
3. சுயக்கட்டுப்பாடு – வெற்றி வசதியால் அல்ல, தொடர்ச்சியால் வருகிறது.
4. சவால்களை ஏற்றல் – கடினமான ஒவ்வொரு பொறுப்பும் வளர்ச்சிக்கான வாய்ப்பு.
5. உணர்வுகளைக் கையாளுதல் – உணர்வுசார் நுண்ணறிவு திறமையான தலைமையின் அடித்தளம்.
6. சுய வெளிப்பாடு – உண்மைத் தன்மையுடனும் நோக்கத்துடனும் நம்பிக்கையாகப் பேசுதல்.
7. மாறுபட்ட பார்வைகளுக்கு மதிப்பளித்தல் – சிறந்த தலைவர்கள் வழிநடத்துமுன் கேட்பார்கள்.

இந்தத் திறன்களை வளர்த்தால், சிறந்த ரோட்டராக்டர்கள் மட்டுமல்ல; சிறந்த தொழில்முறையாளர்கள், தொழில்முனைவோர், குடிமக்கள், மனிதர்களாகவும் மாறுவீர்கள். ரோட்டராக்ட், கட்டணமில்லாத உள்நாட்டு MBA பயிற்சித் திட்டம் போன்றது.

ரோட்டரியால் ரோட்டராக்டுக்கு வழங்கப்படும் மிகப் பெரிய பங்களிப்பு நிதியல்ல; வழிகாட்டுதலே. ஒவ்வொரு ரோட்டரியனும் ஐந்து வழிகளில் நிலையான மாற்றத்தை உருவாக்கலாம்: தலைமை, நிர்வாக, தொழில்முறை அனுபவங்களைப் பகிர்தல்; அரசு, CSR, கல்வி நிறுவனங்கள், தன்னார்வ அமைப்புகளுடன் கூட்டாண்மை வாயில்களைத் திறத்தல்; சங்கங்களின் தொடர்ச்சியை உறுதிசெய்தல்; நெறிமுறைகள், சட்ட இணக்கம், நிதி வெளிப்படைத் தன்மை, பாதுகாப்பு குறித்து பயிற்சி அளித்தல்; தாக்கமிக்க திட்டங்களை ஆவணப்படுத்தி பிற சங்கங்கள், மாவட்டங்களில் செயல்படுத்துதல்.

இந்தியா உலகின் இளம் மக்கள்தொகை அதிகம் உள்ள நாடுகளில் ஒன்று. இளமையின் ஆற்றலைக் குடிமைத் தலைமையாக மாற்றும் தளங்களை உருவாக்கினால், அது நமது மிகப் பெரிய வலிமையாகும். ரோட்டராக்ட் ரோட்டரியின் எதிர்காலம் மட்டுமல்ல; அதன் இன்றைய இயக்கசக்தி. உண்மையான அனுபவங்கள் வழியே திட்ட மேலாண்மை, குழுப்பணி, நிதிப் பொறுப்பு, பொதுப் பேச்சு, சமூக ஈடுபாடு ஆகியவற்றைக் கற்பிக்கிறது.

நாளைய ரோட்டரி தலைவர்கள், மாவட்ட ஆளுநர்கள், சமூகத் தொழில்முனைவோர், கொள்கை



*இயக்குநர் நாகேஷ், RSAMDIO தலைவராக பொறுப்பேற்ற PDRR அருண் தேஜாவை வாழ்த்துகிறார்.*

வகுப்பாளர்கள், வணிகத் தலைவர்கள் பலர் இன்று ரோட்டராக்டர்களாகச் சேவை செய்கிறார்கள். அவர்களை வழிகாட்டி, சவால் அளித்து, நம்புவது ரோட்டரியின் பொறுப்பு. உறுப்பினர் எண்ணிக்கையை உயர்த்துவதில் மட்டும் அல்ல; தலைமுறைகளுக்கு இடையிலான உறவுகளை வலுப் படுத்துவதில்தான் ரோட்டரியின் எதிர்காலம் உள்ளது.

ரோட்டராக்டர்கள் 1,25,000 டாலர் திரட்ட உறுதியளித்துள்ளனர்- ஒவ்வொரு மண்டலத்துக்கும் 25,000 டாலர், ஒவ்வொரு மாவட்டத்துக்கும் சுமார் 3,000 டாலர். இதை RID 3192 DG ரவிசங்கர் டகோஜு இணையாக வழங்குவார். உலகின் முதல் AKS உறுப்பினராக இந்திய ரோட்டராக்டை உருவாக்குவதே நோக்கம்.

மண்டலங்கள் 4,5,6,7,8-க்காக PDRR கார்த்திக் கிட்டு தலைமையில் பிராந்திய ரோட்டராக்ட் ஆலோசனைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. ரோட்டரியன்கள், ரோட்டராக்டர்கள், இன்ட்ராக்டர்கள் ஒரே குடும்பமாகச் செயல்பட்டால் சேவை மேலும் பொருத்தமுள்ளதாகும்; தலைமை மேலும் உள்ளடக்கமானதாகும்; சமூகங்கள் வலிமை பெறும்.

ஒரே குடும்பம். ஒரே நோக்கம். ஒரே எதிர்காலம்.

எழுத்தாளர் இந்தியாவைச் சேர்ந்த RI இயக்குநர்.

# ரான்ச்சியில் உயர்தொழில்நுட்ப மனநல சிகிச்சை மையம்

ரோட்டரி செய்திக்குழு

ரான்ச்சி நரம்பியல்-மனநல அறிவியல் நிறுவனத்தில் (RINPAS), RC ரான்ச்சி (RID 3250) மற்றும் அரசுத்துறை நிறுவனமான செண்ட்ரல் கோல்ஃபீல்ட்ஸ் லிமிடெட் இணைந்து, ரூ.2 கோடி CSR நிதியுதவியில் “Project Manas” எனும் நவீன மையத்தை அமைத்துள்ளனர். இதன்மூலம் மனஅழுத்தம், OCD, புகைப்பிடிக்கும் பழக்கம் உள்ளிட்ட நோயாளிகளுக்கு dTMS (Deep Transcranial Magnetic Stimulation) எனும் அறுவை சிகிச்சை இல்லாத புதிய சிகிச்சை முறை அறிமுகமானது.



IPDG *நம்ரதா (இடதிலிருந்து நான்காவது), ஜார்க்கண்ட் சுகாதார அமைச்சர் இர்பான் அன்சாரி (வலதிலிருந்து மூன்றாவது) உடன் மனநல சிகிச்சை உபகரணங்களின் தொடக்க விழாவில்.*

இது ஜார்க்கண்ட் மற்றும் அண்டை மாநில நோயாளிகளுக்கு புதிய நம்பிக்கையை அளித்துள்ளதாக முன்னாள் தலைவர் அமித் அகர்வால் தெரிவித்தார். மனநலக் கோளாறு குறித்த தவறான எண்ணங்களைக் குறைத்து, விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். ஜார்க்கண்ட் சுகாதார அமைச்சர் இர்ஃபான் அன்சாரி இந்த மையத்தைத் திறந்து வைத்தார்.■

ரோட்டரியின் சேவைத்திட்டங்கள்
ரோட்டரி செய்திக்குழு

## நடமாடும் மருத்துவமனை

RID 3170, 5230 ஆதரவிலான குளோபல் கிராண்ட் மூலம், ஹுப்ளி-தார்வாட் மற்றும் சுற்றுப்புற வசதியற்ற மக்களுக்காக இலவசச் சேவை வழங்கும் நடமாடும் நோயறிதல் ஆய்வகம் தொடங்கப்பட்டது. மத்திய அமைச்சர் பிரகலாத் ஜோஷி திறந்துவைத்த வேனில் ரத்த, நோயியல் பரிசோதனைகள், ECG, டிஜிட்டல் எக்ஸ்-ரே உள்ளிட்ட வசதிகள் உள்ளன. தன்னார்வ அமைப்புகளின் சுகாதார முகாம்களுக்கும் இது உதவும்.



*PDG கணேஷ் பட் உடன் நடமாடும் நோயறிதல் வேனைத் திறந்துவைக்கும் மத்திய அமைச்சர் பிரகலாத் ஜோஷி.*

## நடமாடும் பிறந்த குழந்தைகள் ICU

RID 3234-ன் RC மெட்ராஸ் ஈஸ்ட், அமெரிக்காவின் RC இர்வைனுடன் இணைந்து, சென்னை காஞ்சி காமகோடி சைல்டு டிரஸ்ட் மருத்துவமனைக்கு ரூ.72 லட்சம் மதிப்பிலான பிறந்த குழந்தைகளுக்கான ஆம்புலன்ஸை குளோபல் கிராண்ட் மூலம் வழங்கியது. இன்குபேட்டர், பிறந்த குழந்தைகளுக்கான வென்டிலேட்டர், உயிர்காக்கும் நவீன அமைப்புகளுடன் கூடிய இது, தீவிரநிலை மற்றும் குறைமாதக் குழந்தைகளைப் பாதுகாப்பாக மருத்துவமனைக்கு மாற்ற உதவும்.




*RI இயக்குநர் M முருகானந்தம் மற்றும் IPDG வினோத் சரோகி வாகனத்தின் சாவிகளை மருத்துவமனை நிர்வாகத்திடம் வழங்குகிறார்கள்.*

## மீண்டும் நடக்க உதவி

RID 3204-ன் RC பையனூர், RC கோயம்புத்தூர் மிட் டவுன், மலேசியாவின் RC பென்டோங் ஆகியவற்றுடன் இணைந்து, கேரளத்தில் 100 பயனாளிகளுக்கு செயற்கைக் கால்களை வழங்கி Walk Again திட்டத்தை நிறைவேற்றியது.



*செயற்கைக் கால் பொருத்தும் முகாமில் பயனாளர் ஒருவருடன் சங்க உறுப்பினர்கள்.*

## மானியக் கட்டண டயாலிசிஸ்

RID 3205-ன் RC கோதமங்கலம், இத்தாலி கூட்டாளர் சங்கங்கள், RID 2050-உடன் இணைந்து ரூ.52 லட்சம் குளோபல் கிராண்டில் MBMM மருத்துவமனையில் ஏழு இயந்திரங்கள் கொண்ட டயாலிசிஸ் மையத்தைத் தொடங்கியது. பொருளாதாரத்தில் பின்தங்கிய நோயாளிகளுக்கு இலவச அல்லது மானியக் கட்டண சிகிச்சை வழங்கி, காத்திருப்பு நேரத்தையும் குறைக்கும்.



*மருத்துவமனையில் டயாலிசிஸ் மையத்தை அமைத்த பின் சங்க உறுப்பினர்கள்.*

# சுந்தரவனத்திற்கு ஒரு பசுமை உயிர்நாடி

ஜெய்ஸ்ரீ

உலக சுற்றுச்சூழல் தினமான ஜூன் 5 அன்று, RID 3291-ன் RC சால்ட் லேக் மெட்ரோபாலிட்டன், சுந்தரவனத்தின் பசந்தி தீவுகளில் உள்ள மொகாம்பேரியா கிராமத்தில் ஒரு பெருமளவிலான சதுப்புநில (மேன்க்ரோவ்) மறுசீரமைப்புத் திட்டத்தைத் தொடங்கியது. மொகாம்பேரியா மற்றும் கட்காலி கிராமங்களை உள்ளடக்கிய 10,000 ஹெக்டேர் கடலோரப் பகுதியில், உப்புநீரைத் தாங்கும் பல்வேறு வகையான ஒரு லட்சம் சதுப்புநிலச் செடிகளை நடுவதே இந்தத் திட்டத்தின் இலக்கு.

உலகின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ரோட்டரி சங்கங்களுடன் இணைந்து, உலகளாவிய மானியம் (global grant) மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. RC வாஷிங்டன் DC, RC ஆரெள (சுவிட்சர்லாந்து), ஸ்டவாங்கர் இன்டர்நேஷனல் ரோட்டரி கிளப் (நார்வே), மற்றும் ஈ-கிளப் ஆகியவை சர்வதேச பங்குதாரர்கள்; RC சென்ட்ரல் கல்கத்தா மற்றும் RC ஹூக்ளி உள்ளூர் பங்குதாரர்களாக உள்ளன. யங் இந்தியா மற்றும் கிஷலய் அறக்கட்டளை ஆகிய தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் இத்திட்டத்திற்கு ஆதரவளிக்கின்றன.

“உலக சுற்றுச்சூழல் தினத்தன்று இத்திட்டத்தை நாங்கள் அடையாள



*சுந்தரவனத்தில் உள்ள மொகாம்பேரியா கிராமத்தில் ஒரு ஆற்றங்கரையில் சதுப்புநில கன்றுகளை நடவு செய்யத் தயாராக, சுயஉதவிக் குழுவைச் சேர்ந்த பெண்கள், யங் இந்தியா தலைவர் நுபூர் வைஷ் (வலதிலிருந்து நான்காவது) உடன்.*

ரீதியாகத் தொடங்கினோம், இருப்பினும் பருவமழை தொடங்கும் செப்டம்பர் மாதமே நடவுக்கு உகந்த காலம்" என்று திட்டத் தலைவரும் சங்கத்தின் முன்னாள் தலைவருமான டாக்டர் அருணா தந்தியா தெரிவித்தார்.

தொடக்க விழாவின் ஒரு பகுதியாக, 10 ரோட்டேரியன்கள், யங் இந்தியாவின் தன்னார்வலர்கள், மற்றும் உள்ளூர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் மொகாம்பேரியா கிராமத்திற்குச் சென்று, வறண்ட ஆற்றங்கரையில் 60 செடிகளை நட்டனர்.

ஏறத்தாழ ஐம்பது லட்சம் மக்களின் வசிப்பிடமான சுந்தரவனம், வங்காள விரிகுடாவில் அமைந்துள்ள 104 தீவுகளின் தீவுக்கூட்டமாகும்; இதில் 52 தீவுகளில் மக்கள் வசிக்கின்றனர், 52 தீவுகள் இன்னும் காடுகளாக உள்ளன. 10,000 சதுர கிலோமீட்டருக்கும் மேலான பரப்பளவில் விரிந்துள்ள இது, உலகின் மிகப் பெரிய சதுப்புநிலக் காடு என அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த தனித்துவமான சூழலமைப்பு சமீப தசாப்தங்களில் கடும் அழுத்தத்திற்கு உள்ளாகி யுள்ளது. "மீண்டும் மீண்டும் வரும் சூறாவளிகள், அதிகரிக்கும் மண் அரிப்பு, உப்புநீர் ஊடுருவல் ஆகியவற்றால் கடந்த இரு தசாப்தங்களில் 110 சதுர கிலோ மீட்டருக்கும் மேற்பட்ட சதுப்புநிலம் அழிந்துவிட்டது" என்று எகனாமிக் டைம்ஸ் அறிக்கையை மேற்கோள் காட்டி அருணா தெரிவித்தார்.

காலநிலை மாற்றம் அலைவேகங் களையும் சூறாவளிகளையும் தீவிரப்படுத்தி, அடிக்கடி வெள்ளம், சொத்து அழிவு, விவசாய நிலங்களில் உப்புநீர் ஊடுருவல் ஆகியவற்றை ஏற்படுத்தியுள்ளது. உள்ளூர் குடும்பங்களில் கிட்டத்தட்ட 90 சதவீதம் வேளாண்மையை நம்பியிருந்தாலும், அதிகரிக்கும் மண் உவர்த்தன்மையும் வெள்ளமும் விவசாயத்தை நடைமுறையில் சாத்தியமற்றதாக்கியுள்ளன.

வாழ்வாதாரங்கள் குறைந்துவரும் நிலையில், பலர் நண்டு-மீன் பிடிக்கவும் தேன் சேகரிக்கவும் காடுகளுக்குள் ஆழமாகச் செல்ல வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றனர்; இதனால் புலிகளுடன் உயிருக்கு ஆபத்தான மோதல்களை எதிர்கொள்கின்றனர். இத்தகைய மரணங்கள், "புலி விதவைகள்" எனப்படும் பெண்கள் உட்பட குடும்பங்களைப் பின்னால் விட்டுச் செல்கின்றன; இவர்கள் பெரும்பாலும் வேறு இடங்களில் வேலை தேட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். நிலையான வாழ்வாதார வாய்ப்புகள் இல்லாததால், பல சமூகங்கள் வறுமை மற்றும் கஷ்டங்களின் சுழற்சியில் சிக்கியுள்ளன என்று அவர் விளக்குகிறார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சங்கம் நடத்திய ஒரு சமூக மதிப்பீட்டில், மண் அரிப்பு மற்றும் வெள்ளத்திற்கு எதிரான வலுவான இயற்கை தடுப்புகளையும், மாற்று வாழ்வாதார வாய்ப்புகளையும் மக்கள் விரும்புவதாகத் தெரியவந்தது. இந்தத் தேவைகளுக்கு ஏற்ப, காலநிலை அபாயங்களைக் குறைத்து, சூழலமைப்பை மீட்டெடுத்து, 10,000-க்கும் மேற்பட்டோரின் வாழ்க்கையை மேம்படுத்தும் திட்டத்தை சங்கம் வடிவமைத்தது.

2023-ல் இதற்கான அடிப்படைப் பணிகள் தொடங்கின; கல்யாணி பல்கலைக்கழகத்தின் துணைப் பேராசிரியரும் தாவரவியல் ஆலோசகருமான நீரா சென் சர்க்கார், பகுதியின் நிலத்தோற்றம், நீரோட்டம், உவர்த்தன்மை, அலைவேகங்கள் குறித்து விரிவான ஆய்வு நடத்தினார். அவரது கண்டுபிடிப்புகளின் அடிப்படையில், 2024-ல் ராமகிருஷ்ணபூர் கிராமத்தில் ஒரு முன்னோடித் திட்டம் தொடங்கப்பட்டு, ஆற்றங்கரை நெடுகிலும் ஒரு லட்சம் சதுப்புநிலச் செடிகள் நடப்பட்டன. "இந்த முன்னோடித் திட்டத்தில் கிட்டத்தட்ட 70 சதவீத உயிர்வாழ்வு விகிதம் பதிவானது, இது திட்டத்தை விரிவுபடுத்த தேவையான நம்பிக்கையை அளித்தது" என்று அருணா தெரிவித்தார்.

புதிய நடவுத் திட்டம் உயிர்-புவித்துணி (bio-geotextile) பொருட்களால் வலுப்படுத்தப்பட்ட மணல் திட்டுகளைப் பயன்படுத்தும் என்று அவர் விளக்கினார். வலுப்படுத்தப்பட்ட கடலோரத்தில் மரக் குச்சிகள் நடப்பட்டு, வலுவான அலைகளால் அடித்துச் செல்லப் படாமல் இருக்க அவற்றுக்குள் செடிகள் பொருத்தப்படும்.

"இந்த வலுவூட்டல் இயற்கையான வேலி அமைப்பின் மூலம் கரைகளை பலப்படுத்தி, அலைகளை உடைக்க உதவும், இதனால் அடிக்கடி ஏற்படும் வெள்ளம் குறையும். சதுப்புநிலத்தின் வேர் அமைப்புகளைச் சுற்றி வாழ்விடங்களை உருவாக்குவதன் மூலம் நீர்வாழ் பல்லுயிர்



*ராமகிருஷ்ணபூர் கிராமத்தில் ஆற்றங்கரையில் சதுப்புநில (மாங்குரோவ்) கன்றுகள் நடப்படுகின்றன.*




*திட்டத் தொடக்க விழாவின் போது பள்ளி மாணவர்களுக்கு பழம் தரும் மரங்களின் நாற்றுகள் வழங்கப்படுகின்றன.*

தன்மையையும் இது மேம்படுத்தும்" என்றார் அவர். மொத்தத் திட்டச் செலவு $57,650.

இந்தத் திட்டம் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது மட்டுமின்றி, வாழ் வாதாரங்களை உருவாக்கும் நோக்கத்தையும் கொண்டுள்ளது. செப்டம்பரில் நடவு தொடங்கும் முன், உள்ளூர் சுய உதவிக் குழுக்களுக்கு நாற்றங்கால்களில் சதுப்புநிலச் செடிகளை வளர்க்கவும், உயிர்-புவித்துணி வலைகளை நெய்யவும் பயிற்சி அளிக்கப்படும். கிராமங்களைச் சேர்ந்த ஆண்களுக்கு மண் பணி மற்றும் கடலோர வேலி அமைப்பதில் பயிற்சி வழங்கப்படும். சதுப்புநிலச் செடிகளின் உலர்ந்த இலைகளிலிருந்து கூடை நெசவு செய்வதும், இயற்கை முறை நெல் சாகுபடியும் கிராம மக்களுக்குக் கற்பிக்கப்படும்.

இந்தத் திட்டத்தின் மூலம் வளரும் திறன்கள் வருமான வாய்ப்புகளை உருவாக்குவதுடன், அண்டை கிராமங்களுக்கு எதிர்காலத்தில் விரிவாக்கம் செய்யும்போது செடிகளையும் உயிர்-புவித்துணி பொருட்களையும் தொடர்ந்து வழங்க சமூகத்தை உறுதுணையாக்கும்.

"அடுத்த கட்டத்தில் இந்த மாதிரியை மேலும் குறைந்தது மூன்று கிராமங்களில் செயல்படுத்துவதே எங்கள் நீண்டகால திட்டம்" என்று அருணா தெரிவித்தார்.

காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மற்றும் இயற்கையான கடலோர கவசங்களாக சதுப்புநிலங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்து பள்ளி மாணவர்கள் மற்றும் பெரியவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை சங்க உறுப்பினர்கள் நடத்தி வருகின்றனர்.

அடுத்த கட்டமாக, மற்றொரு உலகளாவிய மானியத்தின் மூலம் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. விவசாயம் மற்றும் வீட்டு உபயோகத்திற்கு நன்னீர் வழங்குவதே இதன் நோக்கம்.

"இங்குள்ள மண் இயற்கையாகவே வளமானது, ஆனால் உவர்த்தன்மை அதன் உற்பத்தித் திறனைப் பறித்துவிட்டது" என்றார் அருணா. கிராமங்களில் சங்கம் நடத்திய வழக்கமான சுகாதார முகாம்களின்போது இந்தத் தேவை தெளிவானது. "பல பெண்கள் இரத்த சோகையால் பாதிக்கப்பட்டிருப்பதைக் கண்டோம்; தங்கள் வீட்டுத் தோட்டங்களில் பச்சை இலைக்கறிகள் வளர்க்குமாறு பரிந்துரைத்தோம். ஆனால் அங்கே செடிகளே வளராது என்று அவர்கள் கூறினர். இது பகுதியைப் பாதிக்கும் பரந்த சுற்றுச்சூழல் சவால்களை ஆய்வு செய்ய எங்களைத் தூண்டியது" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ராமகிருஷ்ணபூர் கிராமத்தில் ஏற்கெனவே அமைத்துள்ள சுகாதார மையத்தில் ஒரு தொலைமருத்துவ மையத்தை நிறுவுவதற்கான CSR ஆதரவையும் சங்கம் தேடி வருகிறது. இந்த வசதி, கிராமப்புற நோயாளிகளை நகர்ப்புற நிபுணர்களுடன் இணைத்து, ஆலோசனை, சிகிச்சை, தொடர் பராமரிப்பு ஆகியவற்றை உறுதி செய்யும்.

RC சால்ட் லேக் மெட்ரோபாலிட்டன், தீவுவாழ் சமூகங்களுக்கு நம்பகமான பங்காளியாக இருந்து வருகிறது; அம்பான் மற்றும் யாஸ் சூறாவளிகளின்போது நிவாரணப் பணிகளில் முக்கியப் பங்காற்றியுள்ளது.■

# ரோட்டரி நியூஸ் சந்தா விதிமுறைகள்

1. சந்தா ரோட்டரி ஆண்டுக்கானது (ஜூலை முதல் ஜூன் வரை).
2. ஒவ்வொரு ரோட்டரியனும் ஒரு ரோட்டரி இதழுக்குக் கண்டிப்பாகச் சந்தா செலுத்தவேண்டும்.
3. முழு ஆண்டுக்கான சந்தாவைப் பரிந்துரைக்கப் பட்ட படிவத்தில் ஜூலை மாதத்தில் அனுப்ப வேண்டும்
4. ஜூலைக்குப் பிறகு சேர்கிறவர்கள் மீதமுள்ள ரோட்டரி ஆண்டுக்கு அச்சு இதழ் ஓர் இதழுக்கு ரூ.40 மற்றும் மின் இதழ் ஓர் இதழுக்கு ரூ.27 என்ற விலையில் பணம் செலுத்தலாம்.
5. ரோட்டரி நியூஸ்-உடன் சங்கத்துக்கு உள்ள சந்தாக் கணக்கு தொடர்ந்து செயல்படும் கணக்காகும். அது ஒவ்வோர் ஆண்டும் ஜூன் மாத முடிவில் முடிவடைவதில்லை.
6. அனைத்து உறுப்பினர்களுடைய பெயர்கள், அவர்களுடைய முழு அஞ்சல் முகவரி, அஞ்சல் குறியீட்டு எண், மொபைல் எண், மின்னஞ்சல் ID ஆகியவற்றைப் படிவம் மற்றும் DD அல்லது காசோலையுடன் அனுப்பவேண்டும். GPAY அல்லது இணைய வங்கிச் சேவை வழியாகவும் செய்யலாம். நீங்கள் இணையத்தில் பணம் செலுத்தும்போது, UTR எண், உங்கள் சங்கத்தின் பெயர், செலுத்திய தொகையை உடனடியாக வாட்ஸாப் (9840078074) அல்லது மின்னஞ்சல் (*rotarynews@rosaonline.org*) மூலம் எங்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள். இதைச் செய்யாவிட்டால், உங்கள் பணம் செலுத்தல் எங்கள் கணக்குகளில் தோன்றாது; உங்கள் சங்கம் செலுத்தவேண்டிய தொகை நிலுவையில் உள்ளது என்று காண்பிக்கப்படும்.
7. உங்கள் உறுப்பினர்களுடைய அஞ்சல் முகவரி, தொடர்புத் தகவல்களை ஒவ்வோர் ஆண்டும் எங்களுக்கு நேரடியாகத் தெரிவியுங்கள். RI அலுவலகம் தகவல்களை எங்களுடன் பகிர்ந்து கொள்வதில்லை.
8. உறுப்பினர்கள் தங்கள் சங்கம் எங்களுக்கு அனுப்பும் சந்தாதாரர்கள் பட்டியலில் தங்கள் பெயர்கள் சேர்க்கப்பட்டிருப்பதை உறுதி செய்யவேண்டும். நீங்கள் பணம் செலுத்திவிட்டீர்கள், ஆனால், உங்கள் பெயரை உங்கள் சங்கம் எங்களுக்கு அனுப்பவில்லை என்றால், உங்களுக்கு இதழின் பிரதி கிடைக்காது அல்லது உங்கள் சங்கம் சந்தாவை மின் இதழுக்கு சேர்த்துள்ளதா என்று உறுதிபடுத்திக்கொள்ளுங்கள்.
9. உறுப்பினர் நிலையில் ஏற்படும் மாற்றங்களைப் பற்றிச் சங்கங்கள் உடனடியாக எங்களுக்குத் தெரிவிக்கவேண்டும்.
10. எங்களிடம் உள்ள பட்டியலின்படி நாங்கள் அனுப்பும் இதழ்களின் எண்ணிக்கைக்கு சங்கங்கள் பணம் செலுத்த வேண்டும்.
11. சங்கங்கள் செலுத்தாத தொகைகள் அந்த சங்கங் களுக்கு நிலுவைத் தொகையாகக் காண்பிக்கப்படும். அதன் பிறகு பெறப்படும் தொகையாவும் முந்தைய நிலுவைத் தொகைகளுக்கு சரி செய்யப்படும்.
12. சங்கங்கள் எங்களுடன் பகிர்ந்துகொள்ளும் பட்டியலை நாங்கள் அவ்வப்போது RIன் தரவுகளுடன் சரி பார்க்கிறோம். விடுபட்ட சந்தாதாரர்களைக் கண்டறிகிறோம்.
13. நடப்பு ரோட்டரி ஆண்டிற்கான சந்தாவை அச்சுப் பதிப்பிலிருந்து மின்னணுப்பதிப்பிற்கு மாற்றக்கோரும் விண்ணப்பத்தை, குறைந்தது ஒரு மாதத்திற்கு முன்னதாகவே எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும். ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்ட பிரதிகளுக்கு அச்சுப் பதிப்பிற்கான சந்தாக் கட்டணமே பொருந்தும்; அதே வேளையில், ஆண்டின் மீதமுள்ள காலத்திற்கு மின்னணுப் பதிப்பிற்கான கட்டணம் விகிதாச்சார அடிப்படையில் கணக்கிடப்பட்டுப் பொருந்தும்.
14. உறுப்பினர் ஒருவர் ஒரு மாதத்துக்கு இதழைப் பெறாவிட்டால் எங்களுக்கு அதை உடனடியாகத் தெரிவியுங்கள்.
15. சில பகுதிகளில் தபால் வழங்கல் பிரச்சனைகள் இருக்கலாம். அப்படிப்பட்ட சூழ்நிலையில், சங்கங்கள் பிரதிகளை மொத்தமாகப் பெறத் தேர்ந்தெடுக்கலாம். அதற்குக் கூடுதல் கட்டணங்கள் பொருந்தும்.

## சந்தா செலுத்தாத சங்கங்கள் RI-ஆல் நீக்கப்படும்

ஜூலை 1, 2022 முதல், ரோட்டரி பத்திரிக்கையை சந்தா செலுத்தி வாங்காத ரோட்டரி சங்கங்களை RI வாரியம் நீக்கம் செய்யும் என அதன் ரோட்டரி கொள்கை கோட்பாட்டில் சேர்த்துள்ளது. இணங்காத சங்கங்கள் குறித்த காலாண்டு அறிக்கை, அந்தந்த மாவட்ட ஆளுனர்களுக்கு தெரிவித்த பிறகு, எங்கள் அலுவலகம் மூலம் RIக்கு அனுப்பப்படுகிறது. இந்த சங்கங்களுக்கு **90 நாள் அவகாசம்** வழங்கப்படும், அதன் பிறகு சந்தா செலுத்தாத சங்கம் RI-ஆல் இடை நீக்கம் செய்யப்படும்.

180 நாட்களுக்கு இடைநிறுத்தப் பட்ட மற்றும் இணங்காத சங்கங் களை, ரோட்டரி நியூஸ், RIக்கு தெரிவித்த பிறகு, “போர்டு அதன் விருப்பப்படி இந்த சங்கங்களை நீக்கம் செய்யலாம்” என்று ஒரு நினைவூட்டல் கடிதத்தை அனுப்பும்.

சங்கத்தலைவர்களே, தயவு செய்து உங்கள் உறுப்பினர்களை ரோட்டரி நியூஸ்-ன் சந்தா செலுத்தி இந்தியாவில் ரோட்டரி செயல்பாடுகளின் முழு விவரத்தையும் பெற செய்யுங்கள். உங்கள் PELS/GELS பாடத்திட்டத்தில் கட்டாய சந்தா பற்றிய தகவலைச் சேர்க்க RI பரிந்துரை செய்துள்ளது.

# பெற்றோருக்கு ஆட்டிசத்தைப் புரியவைத்தல்

கிரண் ஜெஹ்ரா



ஆட்டிசம் விழிப்புணர்வு பட்டறையில் பெற்றோர் தங்கள் குழந்தைகளுடன்.

“என் குழந்தை என்னை வெறுக்கிறதா?” என்று ஒரு தாய் ஆட்டிசம் விழிப்புணர்வுப் பயிலரங்கில் கேட்டது மிகவும் மனவேதனையான கேள்வி என்கிறார் RID 3132-ன் RC தராஷிவ் செயலர் பிரதீப் காம்கர். பல ஆண்டுகளாக, குழந்தை ஏன் மணிக்கணக்கில் அழுகிறது, குடும்பக் கூட்டங்களில் கோபமடைகிறது, ஆறுதல்படுத்த முடியாமல் இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள அந்தத் தாய் முயன்றிருந்தார். கண்டிப்பும் தண்டனையும் பலனளிக்கவில்லை; குழந்தை வேண்டுமென்றே இப்படிச் செய்கிறது எனக் குடும்பம் எண்ணியது.

“குழந்தை பிடிவாதமாகவோ எதிர்ப்பாகவோ நடக்கவில்லை; அது ஆட்டிசம் வரம்புக்குள் உள்ளது,” என்கிறார் காம்கர். RC தராஷிவ் உறுப்பினரும் குழந்தைநல மருத்துவருமான டாக்டர் அபய் ஷாவுக்கு இத்தகைய உரையாடல்கள் புதிதல்ல. வயதுக்கேற்ற பிற குழந்தைகளிலிருந்து தங்கள் குழந்தை ஏன் வேறுபட்டு நடக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியாமல், குழப்பத்துடனும் சோர்வுடனும் பெற்றோர் மருத்துவமனைக்கு வருவார்கள். சிலர் தங்களையே குற்றம் சாட்டுவார்கள்; வேறு சிலர் குழந்தை வேண்டுமென்றே தவறாக நடக்கிறது என்பார்கள். இது அன்பின்மையால் அல்ல; விழிப்புணர்வு இல்லாததால் என்கிறார் அவர்.

குழந்தையின் நடத்தைக்குப் புகார் கூறி, அதை அமைதிப்படுத்த மருந்து கேட்டு பலர் வந்தபோது, ஏதாவது செய்ய வேண்டும் என டாக்டர் ஷா எண்ணினார். தனிப்பட்ட நிகழ்வுகளைத் தாண்டிச் சிந்திக்க அவர் தனது ரோட்டரி சங்கத்தை அணுகினார்.

அரசு மருத்துவமனைகள், மாவட்டக் கல்வித் துறையுடன் இணைந்து ஆய்வு செய்தபோது, தென்கிழக்கு மகாராஷ்டிரத்தின் முன்னாள் ஒஸ்மானாபாதான தராஷிவ் மாவட்டத்தில் சுமார் 6,000 குழந்தைகள் ஆட்டிசம் வரம்பில் இருப்பது தெரியவந்தது. எனினும் குறிப்பாக கிராமப்புறங்களில் இதுகுறித்த விழிப்புணர்வு மிகக் குறைவாக இருந்தது.

இதன் விளைவாக, தராஷிவின் முதல் ஆட்டிசம் ஸ்பெக்ட்ரம் கோளாறு (ASD) பெற்றோர் பயிலரங்கு நடைபெற்றது. 70 பெற்றோரும் டாடா சமூக அறிவியல் நிறுவனத்தின் (TISS) ஆட்டிச நிபுணர்களும் இதில் கலந்துகொண்டனர். உரைகளோடு நின்றுவிடாமல், பெற்றோர் தங்கள் குழந்தைகளையும் அழைத்து வருமாறு சங்கம் கேட்டுக்கொண்டது. சில குழந்தைகள் மேடைக்குச் சென்று ஒலிவாங்கியைப் பிடித்தனர்; சிலர் சமாதானப்படுத்த முடியாமல் அழுதனர்; சிலர் அரங்கில் சுற்றித் திரிந்தனர்.

அந்த நடத்தையைத் தடுக்க முயலாமல், நிபுணர்கள் ஒவ்வொரு குழந்தையிடமும் அமைதியாகப் பதிலளித்தனர். அந்தத் தருணங் களையே பயன்படுத்தி, குழந்தைகளை எவ்வாறு ஆறுதல்படுத்துவது, கவனத்தைத் திருப்புவது, அவர்களுடன் தொடர்புகொள்வது என்பதைக் பெற்றோருக்குச் செய்முறையாகக் காட்டினர். பல பெற்றோருக்கு, தங்கள் குழந்தையின் நடத்தைக்கு எரிச்சலோ தீர்ப்போ இன்றி ஒருவர் பதிலளிப்பதைப் பார்ப்பது இதுவே முதல் முறை.

வழக்காய்வுகள், செயல் விளக்கங்கள், உரையாடல்கள் மூலம், ஆட்டிசம் உள்ள குழந்தைகள் தங்களை வெவ்வேறு விதங்களில் வெளிப்படுத்துவதாகவும்,



வரம்பில் உள்ள எந்த இரு குழந்தைகளும் ஒரே மாதிரி இல்லை என்றும் விளக்கப்பட்டது. TISS குழுவினர் செயல்பாட்டு உபகரணங்களைக் கொண்டு வந்திருந்தனர். விளையாட்டின்போது குழந்தைகளின் எதிர்வினை, நடத்தையைப் பயன்படுத்தி, பெற்றோர் ஆதரவளிப்பதற்கும் தொடர்புகொள்வதற்கும் நடைமுறை வழிகளைக் காட்டினர்.

கவலையுடன் இருந்த பெற்றோர், குழந்தைகள் மெதுவாக அமைதியடைந்து நிபுணர்களுடன் பழகி, சிகிச்சை உபகரணங்களில் ஆர்வமாக ஈடுபடுவதைக் கண்ட தருணமே மிகப் பயனளித்தது என்கிறார் காம்கர். "குழந்தை சிரமம் தருவதற்காக நடக்கவில்லை; அதை வேறுவிதமாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதைப் பலர் அன்றுதான் உணர்ந்தனர். ஆட்டிசம் உள்ள ஒவ்வொரு குழந்தையும் கண்ணியத்துடனும் புரிதலுடனும் நடத்தப்பட வேண்டும்."

*கீழே: டாடா சமூக அறிவியல் நிறுவனத்தைச் சேர்ந்த ஆட்டிசம் நிபுணர் ஒருவர் பெற்றோரிடம் உரையாற்றுகிறார்.*



### ஆட்டிசத்தைத் தாண்டி

கடந்த இருபது ஆண்டுகளாக, J F அஜ்மேரா ரோட்டரி கண் மருத்துவமனை, ரோட்டரி விஷன் கேர் மையம் ஆகியவை தராஷிவ் மாவட்ட மக்களுக்குக் குறைந்த கட்டணத்தில் தரமான கண் சிகிச்சை வழங்கி வருகின்றன. 2006-ல் ரோட்டரியின் நூற்றாண்டுச் சேவைத் திட்டமாகத் தொடங்கப்பட்ட இம்மருத்துவமனை, RC தராஷிவ் நடத்தும் ரோட்டரி சேவா அறக்கட்டளையால் நிர்வகிக்கப்படுகிறது.

2023-24-ல் மட்டும் 1,010 கிராமக் கண் முகாம்கள் நடத்தப்பட்டன; வெளிச்சேவை திட்டங்கள் மூலம் சுமார் 1 லட்சம் பேர் பரிசோதிக்கப்பட்டனர்; மருத்துவமனையில் 1,18,300-க்கும் மேற்பட்ட வெளிநோயாளிகள் சிகிச்சை பெற்றனர். 12,000 இலவசக் கண்புரை அறுவைச் சிகிச்சைகள் உட்பட ஏறத்தாழ 28,000 கண் அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன. 28 பள்ளிகளில் 6,000-க்கும் மேற்பட்ட மாணவர்களுக்குக் கண் பரிசோதனையும் நடத்தப்பட்டது.

கிராமின் விமென் டிரஸ்டுடன் இணைந்து, சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண்களுக்கு பதிவேடு பராமரிப்பு, டிஜிட்டல் வங்கிச் சேவை, அரசுத் திட்டங்கள், தொழில்முனைவு ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. சுமார் 1,000 கிராமப்புறப் பெண்கள் இதில் இணைந்துள்ளனர்; அவர்களில் 700-க்கும் மேற்பட்டோர் அரசு நலன்கள், நிதிச் சேவைகளைப் பெறத் தேவையான இணைய ஆவணங்களை நிறைவு செய்துள்ளனர். சுயதொழில், வேளாண்மை சார்ந்த வாழ்வாதாரம், சிறுதொழில்களை ஆராயவும் இந்தத் திட்டம் ஊக்குவிக்கிறது.■




# கானாவில் 200 குழந்தைகளுக்கு கண் அறுவைச்சிகிச்சை

V முத்துக்குமரன்

சர்வதேச மருத்துவப் பணிகளில் ஈடுபடும் இந்திய ரோட்டரியன்களைப் பற்றிப் பேசும்போது டாக்டர் K V ரவிசங்கரின் பெயரைத் தவிர்க்க முடியாது. மைசூருவின் உஷா கிரண் கண் மருத்துவமனைத் தலைவர், RID 3191-ன் Rotary E-Club of Bangalore உறுப்பினரான இவர், கடந்த 25 ஆண்டுகளில் ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா, தெற்காசியாவின் ஒன்பது நாடுகளில் 31 கண் அறுவைச் சிகிச்சைப் பணிகளை வழிநடத்தியுள்ளார். சில நாடுகளுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட முறை சென்றுள்ளார். “உலகெங்கும் தேவைப்படுவோருக்கு என் அறுவைச் சிகிச்சைத் திறனை வழங்க, 2001 முதல் சர்வதேச தன்னார்வச் சேவையில் ஈடுபட்டுள்ளேன்,” என்கிறார்.

இதுவரை அவரது மருத்துவப் பணிகளில் 1,609 அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன; அவற்றில் 50 சதவீதம் குழந்தைகளுக்கானவை. நிறுவனங்கள், தனியார் ஆதரவாளர்கள், தனது சங்கத்தின் தாராள நிதியுதவியால், வெளிநாடுகளில் மேற்கொண்ட 20 மருத்துவப் பயணங்கள் தனிப்பட்ட பணிகளாக அமைந்தன. தற்போது, கானாவில் 200 குழந்தைகளுக்குக் கண் அறுவைச் சிகிச்சை செய்வதற்காக முதன்முறையாக 55,000 டாலர் குளோபல் கிராண்ட் பெற்றுள்ளார்.

“இந்தத் திட்டம் மூன்று கட்டங்களாக நடைபெறுகிறது. ஜூன் முதல் வாரத்தில் நடந்த முதல் பயணத்தில், மூன்று பேர் கொண்ட எங்கள் குழு தமாலே கண் மருத்துவமனையில் 43 அறுவைச் சிகிச்சைகளைச் செய்தது. உள்ளூர் அறுவைச் சிகிச்சை மருத்துவருக்கும் பல செவிலியர்களுக்கும் சிக்கலான கண் அறுவைச் சிகிச்சைகளைக் கையாளப் பயிற்சி அளித்தோம்,” என்கிறார் TRF-ன் பார்வையின்மைத் தடுப்புப் பிரிவுக்கான தொழில்நுட்ப ஆலோசகருமான டாக்டர் ரவிசங்கர்.

> ஒவ்வொரு வெற்றிகரமான அறுவைச் சிகிச்சையும் ஒரு குழந்தையை நம்பிக்கையுடன் பள்ளிக்குத் திரும்பச் செய்கிறது; பெற்றோருக்கு நம்பிக்கையையும் குடும்பத்துக்கு மேம்பட்ட வாழ்க்கைக்கான மறுவாய்ப்பையும் அளிக்கிறது.
>
> **Dr KV ரவிசங்கர்**
> தலைவர், உஷா கிரண் கண் மருத்துவமனை, மைசூர்

வார கால முகாமில் சிக்கலான பார்வைக் குறைபாடுகளுள்ள குழந்தைகளுக்கு வாழ்க்கையை மாற்றும் அறுவைச் சிகிச்சை அளிக்கப்பட்டது. இதன் மூலம் வடக்கு கானாவிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள 43 குடும்பங்களுக்கு புதிய நம்பிக்கை, மேம்பட்ட பார்வை, ஒளிமயமான எதிர்காலம் கிடைத்தது. முக்கிய அறுவைச் சிகிச்சைகளுடன் கண்புரைத் திருத்தம், மாறுகண் சிகிச்சை, கண்களைச் சுற்றிய பிளாஸ்டிக் மற்றும் மறுசீரமைப்பு அறுவைச் சிகிச்சைகளும் செய்யப்பட்டன. வரவேற்பு மருத்துவமனையின் கண் மருத்துவர்களுக்குப் பயிற்சி, திறன் பரிமாற்றமும் வழங்கப்பட்டது. ரோட்டரியன்களான டாக்டர் உமா ரவிசங்கரும், ஹைதராபாத்தைச் சேர்ந்த ரோட்டரியன் அல்லாத டாக்டர் மிலிந்த் பிடேயும் அவருக்கு உதவினர்.


### சஹாராவுக்குத் தெற்கே ஒரு துயரநிலை

நோயாளிகளில் சுமார் 40 சதவீதக் குழந்தைகளுக்கு பிறவியிலேயே அல்லது காயத்தால் ஏற்பட்ட கண்புரை இருந்தது; 40 சதவீதம் மாறுகண் பிரச்சினையால் பாதிக்கப்பட்டிருந்தனர்; மீதமுள்ள 20 சதவீதம் குழந்தைகளுக்கு கண்களைச் சுற்றிய மருத்துவ மற்றும் அழகியல் மறுசீரமைப்பு சிகிச்சை தேவைப்பட்டது.




*டாக்டர் K V ரவிசங்கர் (வலதிலிருந்து நான்காவது), அவரது மனைவி டாக்டர் உமா (பின்னால், இடதிலிருந்து நான்காவது) மற்றும் டாக்டர் மிலிந்த் பிடே (இடது) ஆகியோர் கானாவில் நடைபெற்ற கண் அறுவை சிகிச்சை முகாமில் குழந்தைகள் மற்றும் அவர்களது பெற்றோருடன்.*

“நாங்கள் கண்டது உண்மையான தேவையின் சிறு பகுதியே. சஹாராவுக்குத் தெற்கேயுள்ள ஆப்பிரிக்காவில் மட்டும், ஆண்டுதோறும் அறுவைச் சிகிச்சை தேவைப்படும் சுமார் 80,000 குழந்தை கண்புரை நோயாளிகள் உள்ளனர்,” என IAPB, WHO போன்ற உலக அமைப்புகளின் ஆய்வறிக்கைகளை மேற்கோள் காட்டுகிறார். அறுவைச் சிகிச்சைக்குப் பிந்தைய பராமரிப்பில் குழந்தைகளின் முகத்தில் மலர்ந்த புன்னகை பெற்றோருக்கு பெரும் நிம்மதியை அளித்தது. “ஒவ்வொரு வெற்றிகரமான அறுவைச் சிகிச்சையும் ஒரு குழந்தையை நம்பிக்கையுடன் பள்ளிக்குத் திரும்பச் செய்கிறது; பெற்றோருக்கு நம்பிக்கையையும் குடும்பத்துக்கு மேம்பட்ட வாழ்க்கைக்கான மறுவாய்ப்பையும் அளிக்கிறது,” என்றார்.



*டாக்டர் மிலிந்த் பிடே ஒரு குழந்தையுடன்.*

கானா பணியை TRF, கூட்டாளர் சங்கங்களான RCs அக்ரா-இண்டஸ்ட்ரியல், அக்ரா-பிரீமியர் இன்டர்நேஷனல்; அவரது தாய்ச் சங்கங்கள் RCs பெங்களூரு அபிலிட்டிஸ், ஐவரி சிட்டி மைசூரு; அமெரிக்காவின் சார்லட்டில் உள்ள எவன்ஸ் குடும்ப அறக்கட்டளை; பெங்களூருவின் அவாய்டபிள் பிளைண்ட்னஸ் அறக்கட்டளை; இங்கிலாந்தின் இரண்டு ரோட்டரி சங்கங்கள் மற்றும் அமெரிக்கா, கனடாவின் தலா ஒரு சங்கம் ஆதரித்தன.

தமாலே மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் டாக்டர் ஜூடித் சைமன் அறுவைச் சிகிச்சைகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்கினார். RID 9104-ன் PDG டேவ் அமாங்க்வா மற்றும் திட்டத் தொடர்பாளரான முன்னாள் AG இமானுவேல் குவார்ஷி இந்திய மருத்துவர்களுக்கு ஒத்துழைப்பு அளித்தனர்.

சென்னை சங்கர நேத்ராலயாவில் பணியைத் தொடங்கிய டாக்டர் ரவிசங்கர், 1997-98-ல் ரோட்டரியனானபோது உள்ளூர் மக்களுக்குத் தன்னார்வ மருத்துவச் சேவை செய்வதையே தனது உண்மையான அழைப்பாக உணர்ந்தார். இந்தியா, வெளிநாடுகளின் ரோட்டரி சங்கங்கள், ரோட்டரியன் குடும்பம், தனிநபர் நன்கொடையாளர்கள், அறக்கட்டளைகளின் ஆதரவால் தான் இதுவரை 30-க்கும் மேற்பட்ட கண் அறுவைச் சிகிச்சைப் பணிகளை நிறைவேற்ற முடிந்தது எனப் புன்னகையுடன் கூறுகிறார்.■

# மைசூரில் ரோட்டரியின் நம்பிக்கைப்பள்ளி

ஜெய்ஸ்ரீ

மைசூரில் உள்ள ரோட்டரி மானச குடீரா பள்ளிக்குள் நுழையும்போதே குழந்தைகள் மகிழ்ச்சியுடன் கைதட்டி வரவேற்கின்றனர். ADHD நோய் கொண்ட 17 வயது ராஜன் இனிமையான கன்னட பாடல் பாடினான்; நான் என் பிறந்த தேதியைச் சொன்ன சில வினாடிகளிலேயே, அந்நாள் எந்த கிழமை என்பதைச் சரியாகக் கூறி என்னை வியப்பில் ஆழ்த்தினான். அறிவுசார் மற்றும் வளர்ச்சிக் குறைபாடு உள்ள குழந்தைகள் பற்றிய பல எண்ணங்களைத் தகர்க்கும் அனுபவமாக இது இருந்தது.

RC மைசூர் மிட்டவுன் (RID 3181) நிறுவி நடத்தும் இப்பள்ளியில், அறிவுசார்–வளர்ச்சிக் குறைபாடு உள்ள சுமார் 100 குழந்தைகளுக்கு கல்வி, சிகிச்சை, தொழில் பயிற்சி மற்றும் தன்னம்பிக்கை வழங்கப்படுகிறது. 83 உறுப்பினர்களைக் கொண்ட, 45 ஆண்டு பழமையான இச்சங்கத்திற்கு, நீடித்த சமூகத் தாக்கம் கொண்ட திட்டங்களை உருவாக்குவதே இலக்கு. “ஒவ்வொரு தலைவரும் ஒரு முக்கிய திட்டத்தை பின்னால் விட்டுச் செல்ல விரும்புவார்கள். மானச குடீரா எங்களுக்கு வெறும் திட்டமல்ல, இதயத்திற்கு நெருக்கமானது” என்கிறார் தலைவர் ராகேஷ் பாபு K L.

சிறப்பு தேவையுள்ள 600–800 குழந்தைகளுக்கான ஆண்டு விளையாட்டு நிகழ்வான பந்தவியா’வை நடத்தும் போது, சங்க உறுப்பினர்கள் மைசூர் முழுவதும் உள்ள சிறப்புப் பள்ளிகளுக்குச் சென்றனர். வாடகை கட்டிடங்களில் நெரிசலாக இயங்கும் பள்ளிகளையும், வீட்டு உரிமையாளர்கள் இடம் தர மறுப்பதையும் கண்டு வருந்தினர். இதை மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில், சுமார் எட்டு ஆண்டு முயற்சிக்குப் பின் மைசூர் நகர்ப்புற வளர்ச்சி ஆணையத்திடமிருந்து ஒரு ஏக்கர் நிலம் பெற்றனர். நிலத்திற்கு ரூ.45 லட்சமும், கட்டிடத்திற்கு மேலும் ரூ.1.6 கோடியும் செலவானது. “ஒவ்வொரு ரூபாயும் எங்கள் ரோட்டேரியன்கள் மற்றும் நன்கொடையாளர்களிடமிருந்து வந்தது” என நிறுவனர்-தலைவர் S ராகவேந்திரா நினைவுகூர்கிறார்.

கடந்த மூன்று ஆண்டுகளாக



*ரோட்டரி மானச குடீரா மாணவர்கள் தங்கள் படைப்புகளுடன்.*

செயல்படும் இப்பரந்த வளாகத்தில் 12 வகுப்பறைகள், சமையலறை, சிகிச்சை அறைகள் உள்ளன. இரு பள்ளி பஸ்கள் 10–15 கிமீ சுற்றளவில் உள்ள குழந்தைகளை அழைத்து வந்து, சத்தான உணவளித்து, மாலையில் வீடு திரும்பச் செய்கின்றன. இதனால் பெற்றோர் பகல் நேரத்தில் வேலைக்குச் செல்ல முடிகிறது. “பொருளாதார ரீதியாக பின்தங்கிய பெற்றோரால் சிறப்புத் தேவையுள்ள குழந்தையை தனியாக விட முடியாது. காலை முதல் மாலை வரை நாங்கள் கவனித்துக்கொள்வதால், அவர்கள் வருமானம் ஈட்ட வாய்ப்பு கிடைக்கிறது” என்கிறார் ராகவேந்திரா.

டவுன் சிண்ட்ரோம், மூளை வாதம், ஆட்டிசம் உள்ளிட்ட குழந்தைகளுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது; இயலுமானவர்களிடம் சிறு கட்டணம் மட்டுமே வாங்கப்படுகிறது, இயலாதவர்கள் மறுக்கப்படுவதில்லை. அனுமதிக்குப் பின் ஆசிரியர்கள் ஒவ்வொரு குழந்தையையும் 10 நாட்கள் கவனித்து, தனிப்பட்ட கற்றல் திட்டம் தயாரிக்கின்றனர்; ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் முன்னேற்றம் மதிப்பாய்வு செய்யப்படுகிறது. “பெற்றோர் சொல்வதை மட்டும் நம்பாமல், ஒவ்வொரு குழந்தையையும் மதிப்பீடு செய்து, அவரவர் திறமைக்கேற்ப இலக்குகளை வகுக்கிறோம்” என விளக்குகிறார் சிறப்பு ஆசிரியை பவானி.

ஆங்கிலம், கன்னடம், கணிதம், பொது அறிவுடன், பணத்தை



*(வலமிருந்து) RC மைசூர் மிட்டவுன் தலைவர் ராகேஷ் பாபு K L, நிறுவனத்தின் நிறுவனர்-தலைவர் S ராகவேந்திரா, மாவட்ட நிர்வாக செயலாளர் பத்மஜா முரளிதர், வீரேஷ் H S மற்றும் பாஸ்கர் சைனிக் ஆகியோர் குழந்தைகள் கற்பதைப் பார்வையிடுகின்றனர்.*

அடையாளம் காணுதல், மீதி கணக்கிடுதல், நேரம் அறிதல், தனித்து வாழத் தேவையான தொடர்பாடல் திறன் போன்ற வாழ்க்கை திறன்களும் கற்பிக்கப்படுகின்றன. தொழில் பயிற்சியில் வாழ்த்து அட்டைகள், நகைகள், காகித பைகள், மெழுகுவர்த்திகள், சோப்புகள், துணி ஓவியங்கள், க்ரோஷே பொருட்கள் தயாரிக்கக் கற்றுக்கொடுக்கப் படுகிறது. வண்ணமயமான துணிப் பைகளை நான் வாங்காமல் இருக்க முடியவில்லை.

15 பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் பராமரிப்பாளர்களும் ஒவ்வொரு குழந்தைக்கும் தனி கவனம் அளிக்கின்றனர். யோகா, விளையாட்டு, இசை, நடனம் தினசரி வழக்கத்தில் அடங்கும். மைசூர் தசரா விழாவிலும் பள்ளிகளுக்கிடையேயான போட்டிகளிலும் இக்குழந்தைகள் தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றனர்.

பிறந்தநாள், திருமண நாள் விழாக்களில் உணவு வழங்குதல், சீருடை, உள்கட்டமைப்பு பராமரிப்பு, பெற்றோர் ஆலோசனை அமர்வுகள் என சங்க உறுப்பினர்கள் தொடர்ந்து ஆதரவளிக்கின்றனர். மூத்த மாணவர்களுக்கு காகித தட்டு தயாரிப்பு போன்ற வருமான-ஈட்டும் திறன்களைக் கற்பிக்க கூடுதல் தொழில் பயிற்சி கட்டிடம் அமைக்கவும், சிறப்பு ஆசிரியர்களுக்கான பயிற்சி நிறுவனம் தொடங்கவும் திட்டமிட்டுள்ளனர்.

இந்த ஆண்டு பந்தவியா நிகழ்வில் குழந்தைகளின் ஆர்வத்தால் ஈர்க்கப்பட்ட RID 3192 DG ரவிசங்கர் டாகோஜு, இதே நிகழ்வை பெங்களூருவில் மாநில அளவில் நடத்த திட்டமிட்டுள்ளார்; ரோட்டரி மைசூர் மிட்டவுன் அறிவு பங்காளியாகச் செயல்படும். மானச குடீரா தவிர, சங்கம் 700 குழந்தைகளுக்கான மலிவு விலைப் பள்ளி நடத்துவதோடு, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு டிஜிட்டல் கற்றல் கருவிகள் வழங்குதல், பிரின்சஸ் கிருஷ்ணாஜம்மண்ணி மருத்துவமனையில் நோயாளிகளின் குடும்பங்களுக்கான தங்கும் விடுதி அமைத்தல் ஆகிய பணிகளிலும் ஈடுபட்டுள்ளது.

*குழந்தைகளை காலை முதல் மாலை வரை நாங்கள் கவனித்துக்கொள்வதால், பெற்றோர்கள் வருமானம் ஈட்ட வாய்ப்பு கிடைக்கிறது.*

**S ராகவேந்திரா**
நிறுவனர்-தலைவர்
ரோட்டரி மானச குடீரா

படங்கள்: ஜெய்ஸ்ரீ

# ரோட்டரி ஆளுநர்களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்

## சுந்தர்பன்ஸ் பழங்குடியினருடன் இணைந்து செயல்படுதல்

கடந்த காலத்தை நினைவுகூரும் தபஸ் பட்டாச்சார்யா கூறுகிறார்: "தனியாகச் செயல்படுவதற்குப் பதிலாக, கூடுதல் வளங்களுடனும் அதிகமான கரங்களுடனும் சமூகங்களுக்குச் சிறப்பாகச் சேவையாற்ற வேண்டும் என்பதற்காக 1994-ல் ரோட்டரியில் சேர்ந்தேன். இந்தப் பயணத்தில் ரோட்டேரியன்களின் நட்புறவையும் மகிழ்ச்சியுடன் அனுபவிக்கிறேன்."

4,000-க்கும் மேற்பட்ட ரோட்டேரியன்களையும் சுமார் 150 ரோட்டரி சங்கங்களையும் கொண்ட தனது மாவட்டத்தில், 10 புதிய சங்கங்களுக்கு அங்கீகாரம் பெறச் செய்வதுடன், உறுப்பினர் எண்ணிக்கையில் நிகரமாக 800 பேரை உயர்த்துவதே அவரது இலக்கு. மிகப்பெரிய முயற்சியாக, சுந்தர்பன்ஸ் தீவு ஒன்றில் வாழும் பழங்குடியினரிடம் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தி, அவர்களது மென்மையான சுற்றுச் சூழலைப் பாதுகாப்பது குறித்த கல்வி வழங்கப்படும்.

இந்தத் தீவுத்திட்டத்தில் $40,000 மதிப்பிலான GG மூலம் 150 குழந்தைகளுக்கான இதய அறுவை சிகிச்சைகளும் இடம்பெறும். கொல்கத்தா மற்றும் மாவட்டத்தின் பிற பகுதிகளில் $60,000 GG ஆதரவுடன் சுமார் 100 ரோட்டரி குடிநீர் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.


மருத்துவச் சேவையில், தலசீமியா பரிசோதனை முகாம்கள் 5,000 பயனாளிகளைச் சென்றடையும். மூன்று அரசு மருத்துவமனைகளில் ரோட்டரி உதவி மையங்கள் அமைக்கப்படும். புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் பெற்றோருக்கும் மருத்துவர்களுக்கும் இடையே அவை பாலமாகச் செயல்படும்.



**தபஸ் பட்டாச்சார்யா**
நிலத்தடி போக்குவரத்துத் துறை
RC டம் டம், RID 3291

டாலிகஞ்சிலுள்ள தபன் சின்ஹா நினைவு மருத்துவமனையில் ₹2 கோடி GG மூலம் ரோட்டரி ரத்த மையம் மற்றும் தலசீமியா பகல்நேரப் பராமரிப்பு மையம் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது; TRF நன்கொடை இலக்காக அவர் $500,000 நிர்ணயித்துள்ளார்.

## ரோட்டேரியன்களுக்கான மெய்நிகர் அமர்வுகள்



**அனில் சிங்கால்**
உரத் தயாரிப்புத் துறை
RC அம்ரித்சர் மிட் டவுன்
RID 3070

"வெறுமனே உறுப்பினர்களை அதிகரிப்பதற்குப் பதிலாக, எங்கள் மாவட்ட ரோட்டேரியன்களின் தரத்தை மேம்படுத்துவதில்தான் என் கவனம் இருக்கும். அதே நேரம், உறுப்பினர் எண்ணிக் கையில் குறைந்தது 10 சதவீத நிகர வளர்ச்சியைப் பெறுவதே என் நோக்கம்," என்கிறார் அனில் சிங்கால்.

தற்போது 115 ரோட்டரி சங்கங்களும் 3,200 ரோட்டேரியன்களும் உள்ள மாவட்டத்தில், வெறும் 10 உறுப்பினர்களைக் கொண்ட சங்கங்கள் வலுவான சங்கங்களுடன் இணைக்கப்படும். சேவையின் தரத்தை உயர்த்துவதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. கடந்த நான்கு ஆண்டுகளாக நிர்வாகப் பொறுப்புணர்வு விதிமுறைகளைப் பின்பற்றாததால், மாவட்டம் RI இடைநீக்கத்தில் இருந்தது; அதனால் GG திட்டங்களைச் செயல்படுத்த முடியவில்லை. அந்த இடைநீக்கம் நீக்கப்பட்ட பிறகு, இந்த ஆண்டு ₹2-3 கோடி மதிப்பில் 5 அல்லது 6 GG திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என்று அவர் நம்புகிறார்.

சுமார் 100 ரோட்டரக்ட் சங்கங்களும் 200 இன்ட்ராக்ட் சங்கங்களும் தொடங்கப்படவுள்ளன. தற்போது ரோட்டரக்ட்டில் மாவட்டத்தின் பங்களிப்பு மிகக் குறைவு.

ஒவ்வொரு முகாமிலும் 150-க்கும் மேற்பட்ட நோயாளிகள் பங்கேற்கும் வகையில், குறைந்தது 200 மருத்துவ முகாம்கள் ரோட்டரி சங்கங்களால் நடத்தப்படும். குழுப்பணி மற்றும் உறுப்பினர் ஈடுபாடு மூலமாகச் சேவைத் திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்த, *rotary.org* தளத்தில் உள்ள இணையவழிப் பாடநெறிகளைப் படிக்குமாறு சங்கத் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்படும். அவரது TRF நன்கொடை இலக்கு $100,000.

எளிதில் அணுகக்கூடிய இயல்புக்காக PRIP ராஜேந்திர சாபூ தமக்கு ஊக்கமளிப்பவர் என்றும், PDG அவினாஷ் மொஹிந்த்ரு, அருண் கபூர் மற்றும் RIDE குர்ஜீத் சேகோன் ஆகியோர் தமது முன்மாதிரிகள் என்றும் சிங்கால் கூறுகிறார். அவர் 1988-ல் ரோட்டரியில் இணைந்தார்.

# மருத்துவமனைகளுக்கான உயிர்காக்கும் கருவிகள்

தெற்கு கேரளாவின் திருவனந்தபுரம், கொல்லம், பத்தனம்திட்டா, கோட்டயம் மற்றும் ஆலப்புழா ஆகிய ஐந்து வருவாய் மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதியில், ஒவ்வொரு ரோட்டரி சங்கத்திலும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதும், பிரதிநிதித்துவம் குறைவாக உள்ள இடங்களில் புதிய சங்கங்களைத் தொடங்குவதும் தனது முக்கியக் கவனம் என்கிறார் K G நாயர்.

166 ரோட்டரி சங்கங்கள், 5,450 ரோட்டேரியன்கள் மற்றும் 500 ரோட்டராக்டர்களைக் கொண்ட அவரது மாவட்டத்தில், அடுத்த ஆண்டு ஜூன் 30-க்குள் உறுப்பினர் எண்ணிக்கையில் 25 சதவீத நிகர வளர்ச்சியைப் பெற அவர் முயற்சிப்பார். மருத்துவ நிறுவனங்களில் வென்டிலேட்டர்கள், டிஃபிபிரிலேட்டர்கள், டயாலிசிஸ் இயந்திரங்கள், பரிசோதனைக் கருவிகள் உள்ளிட்ட அவசர உயிர்காக்கும் உபகரணங்களை நிறுவுவது அவரது GG திட்டங்களில் ஒன்றாகும்.

நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்க, குறைந்தது 100 பேருக்கு மின்சார மற்றும் CNG ஆட்டோக்கள் வழங்கப்படவுள்ளன. ஐந்து வருவாய் மாவட்டங்களிலும் நடைபெறும் செயற்கை உறுப்பு பொருத்தும் முகாம்களில், உடல் உறுப்புகளை இழந்தவர்களுக்கு செயற்கை உறுப்புகள் வழங்கப்படும். பின்தங்கிய மக்களின் சுயதொழில் மற்றும் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்த GG அல்லது பிற நிதி வழிகளில் கூடுதல் திட்டங்களை உருவாக்கும் பணியும் நடைபெறுகிறது.

சமூக நலனுக்கான தங்கள் செயல் சார்ந்த முயற்சிகளை முன்னிறுத்தும் வகையில், ரோட்டரி மற்றும் அதன் சங்கத் திட்டங்களை சமூக ஊடகங்களிலும் பொதுவெளியிலும் வெளிப்படுத்த நாயர் முயற்சி மேற்கொள்வார். முன்னாள் ரோட்டராக்டரான அவர், 1991-ல் ரோட்டேரியனானார். “சமூகத்திற்குத் திருப்பிக் கொடுப்பதிலும், உலகைச் சிறப்பான இடமாக்க சமூகங்களை அணுகுவதிலும் ரோட்டரி எனக்கு மிகுந்த அர்த்தம் கொண்டது. 1983-ல் ரோட்டராக்டராகத் தொடங்கிய என் பயணம், ரோட்டேரியனாக அற்புதமானதாக அமைந்துள்ளது,” என்கிறார் அவர். அவரது TRF நன்கொடை இலக்கு $1 மில்லியன்.



**K G நாயர்**
முந்திரித் தொழில்
RC குயிலோன்
RID 3211

# உருவாகும் ரோட்டரி பள்ளி



**அமித் குப்தா**
கல்வியாளர்
RC காசியாபாத் சென்ட்ரல்
RID 3012

டெல்லியைச் சுற்றியுள்ள தேசியத் தலைநகர் வலயமான NCR-ல், ரோட்டரியின் பிரதிநிதித்துவம் இல்லாத பகுதிகளில் புதிய ரோட்டரி சங்கங்கள் தொடங்கப்படும் என்கிறார் அமித் குப்தா. “சிம்பாவோலி, வேவ் சிட்டி போன்ற பல இடங்களில் ரோட்டரி இன்னும் தனது இருப்பை உணர்த்தவில்லை,” என்று அவர் கூறுகிறார். 145 ரோட்டரி சங்கங்கள் மற்றும் 4,100 உறுப்பினர்களுடன் பொறுப்பேற்கும் அவர், 8-10 புதிய சங்கங்களுக்கு அங்கீகாரம் பெற்றுத் தரவும், உறுப்பினர் எண்ணிக்கையில் 500 பேரின் நிகர வளர்ச்சியைப் பெறவும் விரும்புகிறார்.

பல GG திட்டங்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. 50 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் ₹2.5 கோடி GG மூலம் கணினி ஆய்வகங்கள் நிறுவப்படும். சோனிபட்டிலுள்ள ரோட்டரி ரத்த வங்கிக்கு ₹50 லட்சம் GG மூலம் தலசீமியா பரிசோதனைக் கருவி வழங்கப்படும். NCR பகுதியில் உள்ள ஒரு அறக்கட்டளை மருத்துவமனையிலும் ஒரு அரசு மருத்துவமனையிலும், தலா இரண்டு இயந்திரங்களைக் கொண்ட இரண்டு டயாலிசிஸ் மையங்கள் ₹50 லட்சம் GG மூலம் தொடங்கப்படும்.

காசியாபாத் அருகே ஒரு ஏக்கர் நிலத்தைப் பெற்று, 6 முதல் 12-ஆம் வகுப்பு வரை இயங்கும் ரோட்டரி பள்ளி அமைப்பது குறித்து உத்தரப் பிரதேச அரசுடன் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. ₹3 கோடி மதிப்பிலான இந்தப் பள்ளி CSR நிதி, GG மற்றும் உறுப்பினர் பங்களிப்புகள் மூலம் கட்டமைக்கப்படும். TRF-க்கு அவரது இலக்கு $1.5 மில்லியன்.


2008-ல் ரோட்டரியில் இணைந்த குப்தா, “முன்பிருந்தே நான் செய்துவரும் அறப்பணியை இன்னும் பெரிய அளவில் சிந்திக்க ரோட்டரி எனக்கு வாய்ப்பளித்தது,” என்கிறார். கோவிட் காலத்தில் தன் தாயின் சிகிச்சைக்காக ரெம்டெசிவிர் மருந்து டோஸ்களை அவர் பெற்றிருந்தார். அப்போது, காசியாபாத்தில் கோவிட் பாதிப்புக்குள்ளான தனது உறவினர்களுக்குத் தடுப்பூசி உதவி தேவை என மும்பையைச் சேர்ந்த ரோட்டேரியன் ஒருவர் அழைத்தார். “உடனடியாக அந்த டோஸ்களை அவர்களுக்குக் கொடுத்தேன்,” என்கிறார் அவர். “ரோட்டேரியனாக ஆனபின் வாழ்க்கையைப் பார்க்கும் என் பார்வை மாறிவிட்டது; சமூகத்திற்குத் திருப்பிக் கொடுப்பதும் அதிகரித்துள்ளது,” என்று அவர் புன்னகையுடன் கூறுகிறார். ■

# நீடித்த வாழ்வாதாரத்தை உருவாக்கும் காமதேனு

ஜெய்ஸ்ரீ

பெங்களூருவைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த 63 விதவைகள் மற்றும் திருமணம் ஆகாத பெண்களுக்கு ஒரு நிலையான வருமான ஆதாரத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட, உலகளாவிய மானியத் திட்டமான “காமதேனு” திட்டத்தின் கீழ் பால் தரும் கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த திட்டம், பெங்களூரு உல்லால் ரோட்டரி சங்கம் (RID 3191), எடின்பர்க் ரோட்டரி சங்கம் (RID 1320), டல்லாஸ், டெக்ஸாஸ் ரோட்டரி சங்கம் (RID 5810) மற்றும் செயல்கூட்டாளியான மகதி சென்ட்ரல் ரோட்டரி சங்கம், (RID 3191) ஆகியவற்றுடன் இணைந்து செயல்படுத்தப்பட்டது.

இந்திய பாரம்பரியத்தில் கோ தானம், அதாவது பசுவை தானமாக அளித்தல் என்பது புனிதமான, மங்களகரமான தர்மச் செயல்களில் ஒன்றாக கருதப்படுகிறது. ஏழைப் பெண்களுக்கு பால் தரும் பசுக்களை தானமாக அல்லது நன்கொடையாக வழங்குவதன் மூலம் இந்த திட்டம், பழமையான கலாசார மதிப்பை, ஒரு



கடந்த ஆண்டு RC பெங்களூரு உள்ளாலின் தலைவர் மாதவி ஸ்ரீகாந்த் ஒரு கன்றுடன்.

நடைமுறை வாழ்வாதாரத்துடன் இணைத்துள்ளது என்று விளக்குகிறார் சங்கத்தின் தலைவர் மாதவி ஸ்ரீகாந்த்.

மூன்று கால்நடை மருத்துவர்கள் உட்பட பத்துபேர் கொண்ட குழு ஒன்று, கிராமத் தலைவர்கள் மற்றும் சமூகத் தலைவர்களின் உதவியுடன் தகுதியான பயனாளிகளை அடையாளம் காண அயராது உழைத்தது. கால்நடைகளை வளர்க்கப் போதுமான இடவசதியும், தீவனம் பயிரிடக்கூடிய நிலமும் உள்ள, பொருளாதார ரீதியில் நலிவடைந்த பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

கர்ப்பத்தின் இறுதிக்கட்டத்தில் இருந்து, 15 முதல் 20 நாட்களுக்குள் கன்று ஈனும் என எதிர்பார்க்கப்பட்ட ஆரோக்கியமான பால் தரும் பசுக்களை அக்குழு தேர்வு செய்தது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் காலை 5 மணி முதல் 8 மணி வரை நடைபெறும் வாரந்திர கிராமச் சந்தையிலிருந்து இந்த பசுக்கள் வாங்கப்பட்டன.

கொள்முதல் செய்வதற்கான கால அவகாசம் குறைவாக இருந்ததால், எங்களால் ஒரு நேரத்தில் 12 முதல் 15 பசு மாடுகளை மட்டுமே வாங்க முடிந்தது என்கிறார் அவர். இதன் விளைவாக இந்த திட்டம் மூன்று மாதங்களில் ஆறு கட்டங்களாகச் செயல்படுத்தப்பட்டது. ராமநகரத்தில் நடைபெற்ற நிகழ்வில் அமெரிக்காவின் மைன் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த (RID 7780) நான்கு ரோட்டேரியன்கள் இந்த திட்டத்தில் இணைந்தனர். 9 பெண்களுக்கு பசுமாடுகள் வழங்கப்பட்டது கண்டு அவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

ஒவ்வொரு பசுமாட்டின் விலையும் ரூ.55,000 முதல் ரூ.70,000 வரையில் இருந்தது. வார சந்தையில் அவ்வப்போது மாடுகளின் விலை ஏற்ற - இறக்கமாக இருந்ததால் விலைகள் மாறுபட்டிருந்தன. எனினும் மாடுகளின் ஆரோக்கியம் மற்றும் தரத்தில் எந்த சமரசமும் செய்துகொள்ளக்கூடாது என்பதில் நாங்கள் உறுதியாக இருந்தோம்.

பெண்கள் உடனடியாக வருமானம் ஈட்டத் தொடங்கு வதை உறுதிசெய்ய சங்கம், உள்ளூர்



*சங்கத்தால் வழங்கப்பட்ட பசுவை ஒரு பெண் தன் வீட்டிற்கு கொண்டு செல்கிறார்.*

அரசாங்கத்தால் நடத்தப்படும் பால் கூட்டுறவு அமைப்புகளுடன் தொடர்பு ஏற்படுத்தியது. பயனாளிகள் இந்த கூட்டுறவு அமைப்புகளுக்கு நேரடியாகப் பால் வழங்குவதற்கான ஒப்பந்தங்களில் கையெழுத் திட்டனர். பதிலுக்கு இந்த கூட்டமைப்புகள் அவர்களின் வங்கிக் கணக்குகளில் பணத்தைச் செலுத்துகின்றன. பால் கூட்டுறவு அமைப்புகள், கால்நடைகளின் ஆரோக்கியத் தையும் உற்பத்தித் திறனையும் மேம்படுத்த உதவும் வகையில் அவற்றுக்கு ஊட்ட சத்துப் பொருட்களையும் வழங்குகின்றன.

ஒவ்வொரு பசுவும் ஒரு நாளைக்கு சராசரியாக 10 லிட்டர் பால் கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது பயனாளிகளுக்கு ஒரு நிலையான வருமானத்தை உறுதிசெய்கிறது என்று குறிப்பிட்டார் மாதவி. பெண்களை நேரடியாகப் பால் கூட்டமைப்புகளுடன் இணைப்பதன் மூலம் இந்தத் திட்டம் அவர்களின் உற்பத்திக்கு ஒரு நம்பகமான சந்தையை உருவாக்கியுள்ளதுடன், பணம் செலுத்துவதில் இருந்த நிச்சயமற்ற தன்மையையும் நீக்கியுள்ளது.

கால்நடைகள் பராமரிப்பு, விலங்குகளின் ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து ஆகியவற்றில் பெண்களுக்கு ரோட்டேரியன்களும் கால்நடை மருத்துவர்களும் பயிற்சி அளித்தனர். அதேநேரத்தில் ரோட்டேரியின் பட்டயக் கணக்காளர் அமர்வுகள் மூலம் நிதி மேலாண்மை குறித்து எடுத்துக் கூறினார்.



IPDG B R *ஸ்ரீதர் (வலது) மற்றும் திட்டத்தலைவர் ஸ்ரீகாந்த் ஆகியோர் கால்நடை வழங்கும் இடத்தில்.*

இந்தத் திட்டம் ஆரம்பத்தில் 56 பெண்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டது. எனினும் விவேகமான நிதிச் செயல்பாடுகள் காரணமாக உபரி நிதி கிடைத்தது. பின்னர் TRF-இன் மானியக் குழுவின் ஒப்புதலுடன் 9 பேர் கூடுதலாக சேர்க்கப்பட்டனர். இதன் மூலம் மொத்த பயனாளிகள் எண்ணிக்கை 63 ஆக உயர்ந்தது.

மாதவிக்கும் அவரது குழுவினருக்கும் பயனாளிகளுக்கு பசுக்களை ஒப்படைக்கும் நிகழ்வுதான் திருப்தியான தருணமாக அமைந்திருந்தது. ஒவ்வொரு பசுவும் அதன் உரிமையாளரிடம் மிகுந்த மரியாதையுடன், பாரம்பரியமான பூஜையுடன் ஒப்படைக்கப்பட்டது. பசுவுக்கு வெல்லமும் வாழைப்பழமும் படைக்கப்பட்டன. ஆரத்தியும் எடுக்கப்பட்டது. ஒவ்வொரு பசுவிற்கும் ஒரு பெயரும், அடையாள எண்ணும் வழங்கப்பட்டது. இந்த முழு செயல்முறையும் மிகுந்த மனநிறைவைத் தந்தது என்கிறார் அவர்.

திட்டத்தின் இறுதிக்கட்டமாக பசுக்கள் ஒப்படைப்பு விழா நடைபெற்ற அதே இடத்தில் ஒரு பசுவுக்கு பிரசவ வலி ஏற்பட்டு அது ஒரு ஆரோக்கியமான கன்றை ஈன்றது. இது மறக்கமுடியாத சம்பவமாகும். "நாங்கள் பெருமகிழ்ச்சி அடைந்தோம். அனைவரும் இதை ஒரு அற்புதமான ஆசீர்வாதமாகவும், பயனாளியின் நல்ல அதிர்ஷ்டத் திற்கான அறிகுறியாகவும் பார்த்தனர்" என்று நினைவுகூர்ந்தார் மாதவி.

2023-ம் ஆண்டில் 21 உறுப்பினர்களுடன் மட்டுமே தொடங்கப்பட்ட இந்த சங்கம், அதன் முதல் ஆண்டிலேயே 108 உறுப்பினர்களாக வேகமாக விரிவடைந்தது. இன்று 101 உறுப்பினர்களுடன் ஒரு துடிப்பான சங்கமாக செயல்பட்டு வருகிறது. இது ஒரு துணை சங்கத்தையும் நிறுவியுள்ளது.■



ஜூலை மாத பருவமழையின் கடும் தாக்கத்திற்குப் பிறகு அஞ்சனாவலே குளத்தின் நீர்த்தேக்க அளவு இரட்டிப்பிற்கும் அதிகமாக அதிகரித்துள்ளது.

# தண்ணீரும் வாழ்வாதாரமும் தந்த மாற்றம்

**V முத்துக்குமரன்**

புகை, கரி, வெப்பம், வியர்வை நிறைந்த சமையலால் பழங்குடியினப் பெண்களின் உடல்நலம் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. இந்தச் சுமையிலிருந்து அவர்களுக்கு நிவாரணம் அளிக்க, RID 3131-ன் RC புனே ஸ்போர்ட்ஸ் சிட்டி, அமெரிக்காவின் RID 5440-ஐச் சேர்ந்த RC ஃபோர்ட் காலின்ஸ் பிரேக்ஃபாஸ்ட், RC கல்வர் சிட்டி ஆகியவற்றுடன் இணைந்து, அம்பேகான் தாலுகாவிலுள்ள 20 சிறு குடியிருப்புகளில் 1,775 வீடுகளுக்கு புகையில்லா அடுப்புகளை வழங்கியது. ரூ.42 லட்சம் மதிப்பிலான குளோபல் கிராண்ட் மூலம், புனேவைச் சேர்ந்த எர்த் ஃபிட் சொல்யூஷன்ஸ் தயாரித்த நவீன அடுப்புகள் வாங்கப்பட்டன.

திட்டத்தின் முதன்மைத் தொடர்பாளரான சந்தேஷ் சாவந்த், கடந்த 15 ஆண்டுகளாக பல சேவை, சமூகத் திட்டங்களில் இணைந்து பணியாற்றிவரும் RC ஃபோர்ட் காலின்ஸைப் பாராட்டுகிறார். இந்த அடுப்பை வடிவமைத்த கொலராடோ ஸ்டேட் பல்கலைக்கழகம் அந்த நகரிலேயே இருப்பதால், இத்திட்டத்தில் அவர்கள் ஆர்வம் காட்டினர். இப்பகுதியிலுள்ள பல பழங்குடியினக் குடியிருப்புகளில் குடும்பங்கள் சமையலுக்கு முழுமையாக விறகையே சார்ந்துள்ளன. இந்திய நிறுவனமும் கடந்த சில ஆண்டுகளாக தன்னார்வ அமைப்புகள், நிறுவனங்களின் CSR நிதியுதவியுடன் தொலைதூரக் கிராமங்களில் இந்தச் சுற்றுச்சூழலுக்கு உகந்த அடுப்புகளை வழங்கி நற்பெயர் பெற்றுள்ளது.

புகையில்லா அடுப்புகளின் மூன்று முக்கிய நன்மைகளைச் சாவந்த் குறிப்பிடுகிறார். பாரம்பரிய முறையைவிட உலோகச் சட்டக அமைப்பு 50 சதவீதத்துக்கும் குறைவான விறகையே பயன்படுத்துவதால், பெண்கள் விறகு சேகரிக்க 2–3 கி.மீ. நடக்க வேண்டியதில்லை. இதனால் மரங்கள்


காப்பாற்றப்படும். பெரும்பாலானோர் ஓரறை அல்லது இரண்டறைக் குடிசைகளில் வசிப்பதால், பாரம்பரிய அடுப்பின் புகையைச் சுவாசித்து மூச்சுத் திணறல், கண் எரிச்சல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டனர். புதிய அடுப்புகள் ஏறத்தாழப் புகையில்லாதவை என்பதால் உடல்நலம் மேம்பட்டுள்ளது. விறகு சேகரித்தல், கடினமான சமையல் ஆகியவற்றில் மிச்சமாகும் தினசரி 3–4 மணி நேரத்தை மாற்று வேலைகளில் ஈடுபட்டு குடும்ப வருமானத்தை அதிகரிக்கப் பயன்படுத்த முடிகிறது.

### வாழ்வாதாரப் பயணம்

அதன் தலைவர் புதாஜி தாம்சே வழிநடத்தும் RCC சாஷ்வத் அறக்கட்டளையுடன் இணைந்து, மாலின், மஹாலுங்கே கிராமங்களில் 187 பெண் பயனாளிகளுக்கு பால் பண்ணைத் தொழில் பயிற்சி அளிக்கப்பட்டது. தொடர்ந்து எடுத்த முயற்சியால், இந்த இரு கிராமங்களிலும் தினசரி பால் சேகரிப்பு 1,800 லிட்டரை எட்டி, ரூ.80,000 வருமானத்தை உருவாக்குகிறது.

அதேபோல், அம்பேகான் தாலுகாவின் பஞ்சாலே, அசானே, ஷெண்டேவாடி ஆகிய மூன்று கிராமங்களைச் சேர்ந்த 50 பழங்குடியினக் குடும்பங்கள் மலர்சாகுபடிப் பயிற்சி பெற்று, சாமந்தி, கஃப்ரி மலர்களைப் பயிரிடுகின்றன. சந்தை இணைப்பு உதவியுடன் குறைந்த முதலீட்டில் அதிக வருவாய் தரும் வாழ்வாதார மாதிரியாக இது உருவாகியுள்ளது. சில மாதங்களில் மலர்களின் பருவ அறுவடை மூலம் ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ.30,000–40,000 வருவாய் கிடைக்கிறது.

அடுப்புகள் ஜூனில் வழங்கப்பட்ட காலத்தில், 2024–25-ன் முன்னாள் தலைவர் சாதனா ஜெயின் மூன்று கிராமப் பெண்களின் அனுபவங்களைப் பகிர்ந்தார். மய்பாவாடி கிராமத்தைச் சேர்ந்த 35 வயதான சுவாதி கேதாரி, மிச்சமான நேரத்தில் தொழில் சார்ந்த பணிகளைச் செய்து குடும்பத்துக்கு கூடுதல் வருவாய் ஈட்டுகிறார். படான் கிராமத்தின் 45 வயது வனிதா மாவலே, புகையில்லா சமையலால் குடும்ப மூத்தோர் உடல்நலம் மேம்பட்டுள்ளதாகவும், அவர்கள் இப்போது அப்பளம், பிற உலர் சிற்றுண்டிகளைத் தயாரித்து சில்லறைச் சந்தைக்கு அனுப்புவதாகவும் கூறினார்.



*புகையில்லா அடுப்பில் ஒரு பெண் சமையல் செய்வதில் மகிழ்ச்சியடைகிறார்.*

கொந்தாரே கிராமத்தைச் சேர்ந்த 42 வயது புஷ்பா ஷெல்கே, “இந்த நவீன சுற்றுச்சூழல் நட்பு அடுப்பு வந்தபின், முன்புபோல் விறகு சேகரிக்க நீண்ட தூரம் நடக்க வேண்டியதில்லை; குடும்பத்தினர் அனைவரும் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் உள்ளனர்,” என்றார்.

இதன் தெளிவான, அளவிடக்கூடிய தாக்கத்தைக் கருத்தில் கொண்டு, ஜுன்னர் தாலுகாவின் பழங்குடியினக் குடும்பங்களுக்கு மேலும் 2,000 அடுப்புகளை வழங்க ரூ.45 லட்சம் குளோபல் கிராண்ட் திட்டம் உருவாக்கப்படுகிறது. இதற்கான சர்வதேசக் கூட்டாளரைத் தேடி வருவதாகவும், நடப்பு ரோட்டரி ஆண்டிலேயே திட்டத்தை முடிப்போம் என நம்புவதாகவும் சாவந்த் கூறினார்.

### குளம் புனரமைப்பு

ஜுன்னர் தாலுகாவின் அஞ்சனவாலே குழு கிராமப் பஞ்சாயத்தின் வேண்டுகோளின்படி, ரோட்டரி குழு பயன்படுத்தப்படாமல் இருந்த தொலைதூரக் குளத்தைப் பார்வையிட்டது. அதன் நிலை குறித்த அறிக்கையை ஆய்வுக் குழு தயாரித்தது. தொழில்துறைத் தீர்வுகள் வழங்கும் நிறுவனமான மேக்டெர்மிட் என்தோன், ரூ.11.5 லட்சம் செலவில் நீர் நிலையைப் புனரமைக்க முன்வந்தது.

டிசம்பர் 2025-ல் திட்டம் தொடங்கினாலும், அருகிலுள்ள வயல்களில் பயிர்கள் நின்றதால் தண்ணீரை வெளியேற்ற முடியவில்லை; அவை வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் இருந்தது. மழைநீரும் குளத்துக்குள் வந்துகொண்டிருந்ததால் அப்போது அகழ்வுப் பணியைச் செய்ய இயலவில்லை. ஜனவரியில் தண்ணீர் வெளியேற்றப்பட்ட பிறகு, பிப்ரவரியில் மண் அள்ளும் இயந்திரங்களைக் கொண்டு குளத்தின் அடிப்பகுதி அகழப்பட்டது.

மார்ச் இறுதிக்குள் கிராம மக்கள், கொத்தனார்களுடன் இணைந்து குளத்தைச் சுற்றி நான்கு அடி உயரக்



*பூப்பயிர்ச் செய்கை விவசாயிகளுக்கு பருவகால வருமானத்தை தருகிறது.*



*பால் பண்ணைத் தொழில் அம்பேகான் பெண்களுக்கு லாபகரமான வாழ்வாதார ஆதாரமாக உள்ளது.*

கல்சுவரையும் நீர் வெளியேற்றும் அமைப்பையும் அமைத்தனர். கால்நடைகள் சுவரில் ஏறி குளத்துக்குள் நுழைவதைத் தடுக்க, சுவரின் மேல் மூன்று அடி உயர முள்கம்பி வலை வேலியும் அமைக்கப்பட்டது. குளத்திலிருந்து சில மீட்டர் தொலைவில் கால்நடைகளுக்கு நீர் வழங்க 200 லிட்டர் பெரிய டிரம் வைக்கப்பட்டு, கிரானைட் தகவல் பலகையும் நிறுவப்பட்டது.

புனரமைக்கப்பட்ட குளம் மே 31 அன்று குழு கிராமப் பஞ்சாயத்து சர்பஞ்ச் அருணா கட்கரிடம் ஒப்படைக்கப்பட்டது. இதன் மூலம் ஜுன்னர் தாலுகாவின் நான்கு கிராமங்களைச் சேர்ந்த சுமார் 750 பழங்குடியினக் குடும்பங் களும் 3,000 கால்நடைகளும் 15 லட்சம் லிட்டர் நீரைப் பெறும்.

"வீட்டுத் தேவைக்கான தண்ணீருக்காக தினமும் 2–3 கி.மீ. நடக்க வேண்டிய நிலை இனி இருக்காது," என மகிழ்ச்சியுடன் கூறினார் அருணா. பசர்வாடி கிராமத்தைச் சேர்ந்த 48 வயது திலீப் கோகனே, "எங்கள் மகிழ்ச்சியைச் சொல்ல வார்த்தைகள் இல்லை. குடிப்பதற்கும் கால்நடைகளை வளர்ப்பதற்கும் ஆண்டு முழுவதும் சுத்தமான தண்ணீர் கிடைக்கும்," என்றார்.

சமீபத்திய பருவமழையின் கடும் மழையில், அஞ்சனவாலே குளத்தின் கொள்ளளவு வெறும் இரு நாட்களில் 33 லட்சம் லிட்டராக உயர்ந்தது. தல்யாச்சேவாடி கிராமத்தைச் சேர்ந்த 26 வயது புனாஜி கோகனே, "பல தசாப்தங்களாக இருந்த நீர்ப் பற்றாக்குறை இறுதியாக முடிவுக்கு வந்துவிட்டது. ரோட்டரிக்கும் அதன் CSR கூட்டாளருக்கும் நன்றி," என்றார்.■

# இந்தூரில் உறுப்பு தான விழிப்புணர்வு நடைப்பயணம்

**V முத்துகுமரன்**

RID 3040-ன் RC இந்தூர் யுனைடெட், உள்ளூர் தொண்டு நிறுவனமான மிதாஷா அறக்கட்டளையுடன் இணைந்து, உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த டிசம்பரில் தனது வகையிலேயே முதன்முறையாக ஒரு பிரம்மாண்ட நடைப்பயணத்தை நடத்தியது. 11 ரோட்டரி சங்கங்களைச் சேர்ந்த 140 ரோட்டேரியன்கள் உட்பட, மாணவர்கள், இளைஞர்கள், பல்வேறு தொழில் வல்லுநர்கள் என 12,000 தன்னார்வலர்கள் இதில் பங்கேற்றனர்.

இந்தூர் மற்றும் சிதி மக்களவை உறுப்பினர்களான சங்கர் லால்வானி, ராஜேஷ் மிஸ்ரா ஆகியோர், துணைப் பிரிவு நடுவர் சுதாம் காடே, IPDG சுஷில் மல்ஹோத்ரா, மிதாஷா அறக்கட்டளையின் தலைவரும் சங்க உறுப்பினருமான ஆலோக் சிங்கி, RID 3040-ன் மூத்த ரோட்டேரியன்கள் ஆகியோர் முன்னிலையில், 5 கிமீ நடைப்பயணத்தைத் தொடங்கி வைத்தனர். "அரசு அதிகாரிகள், சுகாதாரப் பணியாளர்கள், முன்னணி ஊழியர்கள், கல்வி நிறுவனங்கள், சிவில் சமூகம், ஆயிரக்கணக்கான குடிமக்கள் என அனைவரையும் ஒன்றிணைத்து, உறுப்பு தானத்தின் மூலம் உயிர்களைக் காப்பாற்றுவது மற்றும் இரத்த சோகையைத் தடுப்பது என்ற ஒரே நோக்கத்தில் கவனம் செலுத்திய பெரும் ஒற்றுமையின் வெளிப்பாடு இது" என்று சங்கத்தின் கடந்த ஆண்டு தலைவர் ராஜீவ் துதேஜா தெரிவித்தார்.

விழிப்புணர்வு பேரணியின் போது 10,000-க்கும் மேற்பட்ட உறுப்பு தான உறுதிமொழி படிவங்கள் விநியோகிக்கப்பட்டன; "இதுவரை 4,500 நிரப்பப்பட்ட படிவங்களைப் பெற்றுள்ளோம்... வரும் மாதங்களில் இன்னும் அதிகமாக எதிர்பார்க்கிறோம்."

"இந்த நடைப்பயணம் ஒரு போட்டி அல்ல, உறுப்பு தானத்தின் செய்தியைப் பரப்ப அனைத்து வயதினரும் இணைந்த கூட்டு முயற்சி" என்று துதேஜா மேலும் கூறினார்.

நிகழ்வின் உணர்வுபூர்வமான தருணங்களில் ஒன்று, உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை பெற்றவர்களும் உயிருடன் தானம் செய்தவர்களும் பங்கேற்கும் ஒலிம்பிக் பாணி விளையாட்டு நிகழ்வான உலக மாற்று உறுப்பு விளையாட்டுகளில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்திய 20 வீரர்கள், ஆயிரக்கணக்கான பங்கேற்பாளர்களுடன் நடந்தது. "ஒவ்வொரு வீரரும் உறுப்பு தானத்தால் சாத்தியமான ஒரு அற்புதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினர்" என்றார் சிங்கி.

இரத்த சோகையை, குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளிடையே, தொடர் முகாம்கள், பரிசோதனைகள், தான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மூலம் சமாளிக்க வேண்டிய அவசர தேவையையும் இப்பிரச்சாரம் எடுத்துக்காட்டியது. மத்தியப் பிரதேசத்தின் நேரு ஸ்டேடியத்தில் 6,128 பங்கேற்பாளர்களுடன் நடத்தப்பட்ட ஒரு மணி நேர மிகப்பெரிய உறுப்பு தான விழிப்புணர்வு பாடமாக இந்த நடைப்பயணம் Word Book of Records-ல் இடம்பெற்றுள்ளது.

52 உறுப்பினர்களைக் கொண்ட ஆறு வருட பழமையான RC இந்தூர் யுனைடெட் சங்கத்தின் உறுப்பினர் களும் பல்வேறு சங்கங்களும் ரூ.5 லட்சம் திட்டச் செலவை நிதியுதவி செய்தன.■



*இடதிலிருந்து: சித்தி எம்.பி ராஜேஷ் மிஸ்ரா, மிதாஷா ஃபவுண்டேஷன் தலைவர் ஆலோக் சிங்கி, இந்தூர் எம்.பி சங்கர் லால்வானி, கோட்டப் பிரிவு ஆணையர் சுதாம் காடே மற்றும் PDG சுஷில் மல்ஹோத்ரா ஆகியோர் நடைப் பயணத்தைத் தொடங்கி வைக்கின்றனர்.*

# ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநர்கள் – 2026–27

*RI அரசியலமைப்பு மற்றும் விதிமுறைகளுக்கு ஏற்ப, RI இயக்குநர்கள் வாரியம் ரோட்டரி இன்டர்நேஷனலின் விவகாரங்களையும் நிதியையும் நிர்வகிக்கிறது. இயக்குநர்கள் தங்கள் மண்டலங்களால் பரிந்துரைக்கப்பட்டு, இரண்டு ஆண்டு பதவிக்காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஒன்பது புதிய இயக்குநர்களும் தலைவர்-தேர்ந்தெடுக்கப்பட்டவரும் ஜூலை 1 அன்று வாரியத்தில் இணைகிறார்கள்.*



**ஒலயின்கா H பாபலோலா**

RI *தலைவர்,* RC *டிரான்ஸ் அமடி, நைஜீரியா.*

நைஜீரியாவின் இபடானில் பிறந்த ஒலயின்கா பாபலோலா, எண்ணெய்-எரிவாயு உள்கட்டமைப்பு நிறுவனம் மற்றும் நிர்வாகப் பயிற்சி மற்றும் நிறுவன செயல்திறன் ஆலோசனை நிறுவனம் ஆகிய இரண்டு நிறுவனங்களை நிறுவியவர். தனது பல்கலைக்கழக ரோட்டராக்ட் கிளப்பின் முதல் (சாசன) தலைவராகவும் இருந்தார். 1994-ல் RC டிரான்ஸ் அமடியில் இணைந்த அவர், "எண்ட் போலியோ நௌ: கவுண்ட்டவுன் டு ஹிஸ்டரி" பிரச்சார குழு மற்றும் நைஜீரியா போலியோபிளஸ் குழு உள்பட பல குழுக்களில் பணியாற்றி, பின்னர் RI இயக்குநராகவும், துணைத் தலைவராகவும் பணியாற்றினார். நைஜீரியாவின் மோதல் பாதிக்கப்பட்ட வடகிழக்குப் பகுதியில் போலியோ ஒழிப்புப் பணிக்கு உள்ளூர் தலைமை தாங்கினார். RI தலைவராக, உறுப்பினர்களின் உணர்வுப்பூர்வ தொடர்பையும், ரோட்டரியை தங்கள் சொந்தமாக உணரும் மனநிலையையும் மீட்டெடுக்க விரும்புவதாக அவர் கூறுகிறார். "நாம் மற்றவர்களுக்காக செயல்படுகிறோம், ஆனால் ரோட்டரி நமக்குச் சொந்தமானதும் கூட" என்கிறார் அவர். ஆப்பிரிக்கா சென்டெனியல் ஹீரோஸ் விருது, போலியோ-இல்லா உலகிற்கான பிராந்திய சேவை விருது, RI Service Above Self விருது, மற்றும் TRFயின் சிறப்புச் சேவைக்கான பாராட்டுச் சான்று (Citation for Meritorious Service) ஆகியவற்றைப் பெற்றுள்ளார். மனைவி ப்ரெசி (இவரும் ரோட்டேரியன்) உடன் போர்ட் ஹார்கோர்ட்டில் வசிக்கிறார்; TRFக்கு பெயரிடப்பட்ட எண்டோமெண்ட் மூலமும் AKS உறுப்பினர்களாகவும் ஆதரவளிக்கின்றனர்.



**லாரி A லன்ஸ்ஃபோர்ட்**

President Elect

RC *கன்சாஸ் சிட்டி-பிளாசா, மிசூரி.*

சான்றளிக்கப்பட்ட கணக்காளரான (CPA) லன்ஸ்ஃபோர்ட், கன்சாஸ் சிட்டியில் உள்ள பெர்ன்ஸ்டீன்-ரெய்ன் விளம்பர நிறுவனத்தின் நிர்வாக துணைத் தலைவரும் நிதி இயக்குநரும் ஆவார். 1981-82-ல் ரோட்டரி அறக்கட்டளை தூதுவர் உதவித்தொகையாளராக ஆஸ்திரேலியா சென்றது தன் ரோட்டரி ஆர்வத்தைத் தூண்டியதாகக் கூறுகிறார் – அதை "ஒன்பது மாத தினசரி ரோட்டரி அனுபவம்" என்று அழைக்கிறார். 1991-ல் ரோட்டரியில் இணைந்த அவர், RI இயக்குநர், RI தலைவர் மார்க் டேனியல் மலோனிக்கு உதவியாளர், மற்றும் TRF அறங்காவலரும் துணைத் தலைவருமாக பணியாற்றியுள்ளார். RI உறுப்பினர் வளர்ச்சிக் குழு மற்றும் ரோட்டரி அமைதி மைய குழுவிற்குத் தலைமை தாங்கியுள்ளார். 2023 ஆகஸ்டில், எவன்ஸ்டனில் காலை நடைப்பயிற்சியின்போது, TRF-யின் "2025க்குள் $2.025 பில்லியன்" எண்டோமெண்ட் பிரச்சாரத்தைப் போலவே, 2030-ல் ரோட்டரியின் 125-வது ஆண்டு விழாவிற்குள் 12,50,000 ரோட்டேரியன்கள் என்ற உறுப்பினர் இலக்கை உருவாக்கினார். இதை RI வாரியம் அக்டோபர் 2023-ல் ஏற்றது. TRF-ன் சிறப்புச் சேவைக்கான பாராட்டுச் சான்று, சிறப்பு சேவை விருது (Distinguished Service Award), மற்றும் Service above Self விருது ஆகியவை இவரது கௌரவங்கள். மனைவி ஜில்லுடன் TRF-க்கு பெரும் நன்கொடையாளர்களாகவும், Benefactors ஆகவும், Paul Harris Society, PolioPlus Society, Bequest Society ஆகியவற்றின் உறுப்பினர்களாகவும் உள்ளனர்.



**எம். முருகானந்தம்**

(MMM) - *துணைத் தலைவர்*

RC *பெல் சிட்டி திருச்சிராப்பள்ளி இந்தியா.*


30 ஆண்டுகளுக்கும் மேலான விநியோகச் சங்கிலி மேலாண்மை அனுபவம் கொண்ட தொழில்முனைவோரும் தொண்டர் நல ஆர்வலருமான முருகானந்தம், எக்செல் மாரிடைமின் நிறுவனரும் தலைவருமாவார்; 18 இந்திய நகரங்களிலும் இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளிலும் இதன் செயல்பாடுகளை விரிவுபடுத்தியுள்ளார்.

16 வயதில் ரோட்டராக்ட் மூலம் ரோட்டரி பயணத்தைத் தொடங்கினார். ரோட்டராக்டராக இருந்தபோதே TRF-க்கு பெரும் நன்கொடையாளராக ஆனார். 2016-17-ல், RID 3000-ன் இளம் ஆளுநர்களில் ஒருவராக, அறக்கட்டளையின் நூற்றாண்டு விழாவை நினைவுகூரும் வகையில் கல்வியறிவு, சாலைப் பாதுகாப்பு, இரத்த-உறுப்பு தானம், பெண்களுக்கான தற்காப்புப் பயிற்சி ஆகிய துறைகளில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டார். 99 ரோட்டராக்ட் கிளப்புகள், 250 இன்டராக்ட் கிளப்புகள், 100 RCC-க்கள் ஆகியவற்றை உருவாக்குவதில் முக்கியப் பங்காற்றியவர்.


ரோட்டரிக்கு வெளியே, எக்செல் அறக்கட்டளையின் மூலம் கல்வி, சுகாதாரம், விளையாட்டு, திறன் மேம்பாடு ஆகிய துறைகளில் ஓரங்கட்டப்பட்ட சமூகங்களுக்கு உதவுகிறார்; இதன் முக்கியத் திட்டம் கிராமப்புற மக்களுக்கான 75 படுக்கை புற்றுநோய் மருத்துவமனை. மண்டலம் 5-ன் RPIC ஆகவும், RIPR ஆகவும் பணியாற்றியுள்ளார். Service above Self விருது, RI தொழில் சேவை தலைமைத்துவ விருது, TRF-யின் சிறப்புச் சேவைக்கான பாராட்டுச் சான்று ஆகியவற்றைப் பெற்றுள்ளார். ரோட்டரி நிறுவனர் பால் ஹாரிஸின் மரபையும் இல்லத்தையும் பாதுகாக்கும் பால் மற்றும் ஜீன் ஹாரிஸ் இல்ல அறக்கட்டளைக்கு ஆரம்பகால நன்கொடையாளராகவும் இருந்தார். மனைவி சுமதி (அதே கிளப் உறுப்பினர்) உடன் AKS உறுப்பினர்கள்.




**சீசர் லூயிஸ் ஷெரர்**
*பொருளாளர், RC மரெசால் காண்டிடோ ரோண்டன்-பெய்ரா லாகோ, பிரேசில்.*
நிதி மேலாண்மை, மூலோபாய திட்டமிடல், நிர்வாகம் ஆகியவற்றில் அனுபவம் கொண்ட தொழில்முனைவோரும் கணக்காளருமான ஷெரர், 2003 முதல் ரோட்டேரியன். RI Service above Self விருது மற்றும் TRF-யின் சிறப்புச் சேவைக்கான பாராட்டுச் சான்று பெற்றுள்ளார். மனைவி சோனியா அதே கிளப் உறுப்பினர்; இருவரும் TRF-க்கு பெரும் நன்கொடையாளர்களாக உள்ளனர்.




**மாசிமோ பல்லோட்டா**
*இயக்குநர்* 2026-28
RC *ஃபெல்ட்ரே, இத்தாலி.*
W1222-ல் நிறுவப்பட்ட படுவா பல்கலைக்கழகத்தில் மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சையில் பட்டம் பெற்ற பல்லோட்டா, விளையாட்டு மருத்துவம் மற்றும் மறுவாழ்வு மருத்துவத்தில் நிபுணத்துவம் பெற்றவர். பணி ஓய்வு பெற்றிருந்தாலும், ஆலோசகர் மருத்துவராகத் தொடர்ந்து பணியாற்றுகிறார்; மேலும் மாற்றுத்திறனாளிகள் மற்றும் பின்தங்கியவர்களுக்கான அமைப்புகளுடன் தன்னார்வத் தொண்டு செய்கிறார். டொலமைட்டு மலைத்தொடரின் அடிவாரத்தில் உள்ள ஃபெல்ட்ரே நகருக்கு குடிபெயர்ந்த 2009-ல் ரோட்டரியில் இணைந்தார். மனைவி ரோசெல்லாவுடன் TRF-யின் பெரும் நன்கொடையாளர்களாகவும் Benefactors ஆகவும் உள்ளனர்.



**கிறிஸ்டீன் புயரிங்**
*இயக்குநர்* 2025-27
RC *ஆல்டன்பர்க், ஜெர்மனி.*
தென் ஜெர்மனியில் பிறந்த புயரிங், 1995-ல் கணவருடனும் மற்றவர்களுடனும் சேர்ந்து தன் கிளப்பைத் தொடங்கியபோது ரோட்டரியில் இணைந்தார். பாலின சமத்துவத்தில் ஆழ்ந்த ஆர்வம் கொண்ட இவர், 2017-ல் சில்வியா விட்லாக் தலைமைத்துவ விருதைத் தொடங்கிய குழுவின் ஒரு பகுதியானார் - இந்த விருது ரோட்டரியில் பெண்களை முன்னேற்றுவதற்காக பாடுபட்ட ஒரு உறுப்பினரை ஆண்டுதோறும் கௌரவிக்கிறது, மேலும் 2021-ல் RI இதனை அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொண்டது. கோவிட் காலத்தில், மாதவிடாய் சுகாதாரம் தொடர்பான ரோட்டரி செயல்குழுவைத் தொடங்க உதவினார். கற்பித்தல் வழிகாட்டி, CoL பிரதிநிதி, RIPR உள்பட பல பொறுப்புகளை வகித்துள்ளார். ஒரு பெரும் நன்கொடையாளர்.




**மார்ஷல் பட்லர்**
*இயக்குநர்* 2026-28, RC *வெஸ்ட் ஜாக்சன்வில்லே, புளோரிடா.*
மென்பொருள் பயிற்சி வழங்கும் ப்ராக்மேடிக் வொர்க்ஸின் சந்தைப்படுத்தல் இயக்குநரான பட்லர், 2002-ல் தன் கிளப்பில் இணைந்தார்; 2016–17-ல் மாவட்டம் 6970-ன் ஆளுநராகப் பணியாற்றினார். TRF-ன் சிறப்புச் சேவைக்கான பாராட்டுச் சான்றைப் பெற்றுள்ளார். மனைவி காரனுடன் TRF-க்கு பெரும் நன்கொடையாளர்களாகவும், Bequest Society, Paul Harris Society, PolioPlus Society ஆகியவற்றின் உறுப்பினர்களாகவும் உள்ளனர். இருவருக்கும் எமிலி, மேகி என இரு வளர்ந்த மகள்கள் உள்ளனர்; எமிலி சமீபத்தில் தந்தையின் கிளப்பில் இணைந்து சேவை மரபைத் தொடர்கிறார்.



**சொஃபியா கிஸ்லாடோட்டிர்**
*இயக்குநர்* 2026-28, RC *ஹூசாவிக் நோர்டுர்திங், ஐஸ்லாந்து.*
“கிஸ்லாவின் மகள் சொஃபியா” எனப் பொருள்படும் பெயர் கொண்ட இவர், ஐஸ்லாந்தின் தொழிலாளர் இயக்குநரகத்தில் தொழில் சந்தை நிபுணராகப் பணியாற்றுகிறார், தொழில்முனைவோரையும் ஐரோப்பா முழுவதும் உள்ள சாத்தியமான வேலை வாய்ப்புகளையும் இணைக்கிறார். இதற்கு முன் நாடாளுமன்றத்தின் துணை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். ஆரம்பகால வைக்கிங் குடியேற்றத்தின் தளமான வடகிழக்குக் கடலோர நகரமான ஹூசாவிக்கைச் சேர்ந்தவர்.


2012-ல் ரோட்டரியில் இணைந்து, ஆளுநர், ARC, RIPR, கற்பித்தல் வழிகாட்டி உள்பட பல பொறுப்புகளை வகித்துள்ளார். ஓட்டப்பந்தய வீராங்கனையான இவர், ஐஸ்லாந்தின் பனிப்பாறைகள் மற்றும் எரிமலைகள் நிறைந்த கடினமான நிலப்பரப்பில் 160 கிலோமீட்டர் அல்ட்ராமராத்தானை நிறைவு செய்துள்ளார். கணவர் குட்முண்டர் பால்ட்வின் குட்முண்ட்சனுடன் TRF பெரும் நன்கொடையாளர்.



**தாமஸ் கம்ப்**
*இயக்குநர்* 2026-28
RC *எடினா/மார்னிங்சைட் மினசோட்டா.*
ரோட்டரியின் சிறந்த பகுதி நண்பர்களை உருவாக்குவதே எனக் கூறும் கம்ப், பல கிளப்புகளில் கௌரவ உறுப்பினராக ரோட்டரி உலகம் முழுவதும் பயணித்துள்ளார். பல புதிய உறுப்பினர்களைக் கொண்டு வந்ததோடு, முன்னாள் ராணுவ வீரர்களுக்கு சேவை செய்யும் மற்றும் மனித கடத்தலை முடிவுக்குக் கொண்டுவரும் கிளப்புகள் உள்பட பல புதிய கிளப்புகளை உருவாக்க உதவியுள்ளார். ஐந்து கிளப்புகளை ஒன்றிணைத்து நூற்றுக்கணக்கான அகதிகளுக்கு சேவை செய்யும் RCC-ஐ உருவாக்கினார்; தன் மாவட்டத்தில் ஒரு கிளப்பை 100 சதவீத பால் ஹாரிஸ் ஃபெலோ கிளப் அந்தஸ்துக்கு அழைத்துச் சென்றார்.

RI தலைவரின் உதவியாளராகவும், சர்வதேச சட்டசபை கற்பித்தல் வழிகாட்டியாகவும், RIPR ஆகவும் பணியாற்றியுள்ளார். RI உறுப்பினர் வளர்ச்சிக் குழு மற்றும் பல மாவட்ட தலைவர்-தேர்ந்தெடுக்கப்பட்டோர் கற்றல் நிகழ்வுகளின் கூட்டமைப்பான MDP கூட்டணிக்குத் தலைமை தாங்கியுள்ளார். மனைவியுடன் இணைந்து, தாமஸ் மற்றும் கேத்தரின் கம்ப் குடும்ப அமைதி நிதியை நிறுவும் வகையில் எஸ்டேட் மூலம் எண்டோமெண்ட் அன்பளிப்பை ஏற்பாடு செய்துள்ளனர். TRF-க்கு பெரும் நன்கொடையாளர்கள், Bequest Society உறுப்பினர்கள், பல பால் ஹாரிஸ் ஃபெலோக்கள், Benefactors, Sustaining Members, PolioPlus Society உறுப்பினர்கள். RI-யின் Servive above Self விருது பெற்றுள்ள கம்ப், புதிய உறுப்பினர் அனுசரணையாளர்களுக்கான உறுப்பினர் சங்கத்தின் தங்கப் பதக்க உறுப்பினராகவும் உள்ளார். TRF இவருக்கு சிறப்புச் சேவைக்கான பாராட்டுச்

சான்று மற்றும் போலியோ-இல்லா உலகிற்கான பிராந்திய சேவை விருது வழங்கியுள்ளது.



**பிரையன் ஹால்**

*இயக்குநர்* 2025-27, RC *கவிங்டன், லூசியானா.*

வணிக அமைப்புகளை ஒருங்கிணைப்பதில் நிபுணத்துவம் பெற்ற அட்டிவோ ERP-யின் மேம்பாட்டு இயக்குநரான ஹால், நீர்-சுகாதாரம் தொடர்பான ரோட்டரி செயல்குழுவில் கிட்டத்தட்ட ஒரு தசாப்தமாக செயல்திறன் மிக்க தலைவராக இருந்துள்ளார். RI மற்றும் TRF-யின் கூட்டு தொழில்நுட்பக் குழுவில் பணியாற்றி, ரோட்டரியின் தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பையும் டிஜிட்டல் மூலோபாயத்தையும் வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தினார். RI Service above Self விருது பெற்றுள்ள இவர், TRF-யின் சிறப்புச் சேவைக்கான பாராட்டுச் சான்றையும் பெற்றுள்ளார்; மனைவி லின்னுடன் TRF பெரும் நன்கொடையாளர்கள்.



**மார்த்தா பீக் ஹெல்மன்**

*இயக்குநர்* 2026-28

RC *பூத்பே ஹார்பர், மைன்.*

வளரும் நாடுகளில் பள்ளிகள் கட்டுவதற்கும், இளைஞர்களுக்கு உதவித்தொகை வழங்குவதற்கும், ஹோலோகாஸ்ட் தப்பியவர்களுக்கு மனிதாபிமான உதவி வழங்குவதற்கும் உதவிய தொண்டு நிறுவனமான ஒட்டோ மற்றும் ஃப்ரான் வால்டர் அறக்கட்டளையின் தலைவராகப் பணியாற்றியவர். இந்த அறக்கட்டளை TRF-உடன் இணைந்து 2025-ல் இஸ்தான்புலின் பஹ்செஷெஹிர் பல்கலைக்கழகத்தில் திறக்கப்பட்ட ரோட்டரி அமைதி மையத்திற்கு நிதியுதவி செய்தது. மார்ட்டியும் மறைந்த கணவர் ஃபிராங்கும் 2003-ல் RC பூத்பே ஹார்பரில் இணைந்தனர்.

TRF அறங்காவலராகவும், நிதி மேம்பாடு மற்றும் அமைதி பெரும் நன்கொடை முன்முயற்சிக் குழுக்களின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். பஹ்செஷெஹிர் பல்கலைக்கழகம் மற்றும் புனேவில் உள்ள சிம்பயாசிஸ் சர்வதேச பல்கலைக்கழகத்தில் ரோட்டரி அமைதி மையங்களுக்கான இடங்களைத் தேர்ந்தெடுத்த குழுக்களில் இருந்தார். ரோட்டரி அமைதி மையங்களுக்காக $10 லட்சம் திரட்டிய சகுஜி தனகா ரோட்டரி அமைதி கல்வி உதவித்தொகைக்கான முயற்சியைத் தொடங்கியவர். AKS, பால் ஹாரிஸ், PolioPlus சங்கங்களின் உறுப்பினர். TRF-ன் சிறப்பு சேவை விருது பெற்றுள்ள இவரும் ஃபிராங்கும் அறக்கட்டளையின் லெகசி சங்கத்தின் சாசன உறுப்பினர்களாக இருந்தனர்.




**ஜங்-ஹியூன் லீ**

*இயக்குநர்* 2025–27

RC *ஹ்வாசுங் தேயான், கொரியா.*

2003 முதல் ரோட்டேரியனான லீ, டிஜிட்டல் கல்வியறிவின் ஆதரவாளர். கொரிய ரோட்டரியின் தகவல் தொழில்நுட்பக் குழுவின் தலைவராக, My Rotary-யில் உறுப்பினர் பதிவை 15 சதவீதத்திலிருந்து 70 சதவீதமாக கணிசமாக உயர்த்திய டிஜிட்டல்மயமாக்கல் முயற்சிகளுக்குத் தலைமை தாங்கினார். மனைவி யங்-ரான் வோன், கருப்பை புற்றுநோயிலிருந்து தப்பியவர்; இருவரும் புற்றுநோய் நோயாளிகளுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் வழிகாட்டுதலையும் நம்பிக்கையையும் வழங்க ஆதரவுக் குழு ஒன்றை நடத்துகின்றனர். லீ ஒரு AKS உறுப்பினர்.




**இம்மானுவேல் கடொங்கோலே**

*இயக்குநர்* 2026–28

RC *மியென்கா, உகாண்டா.*

தொழில்முனைவோரான கடொங்கோலே 1996-ல் ரோட்டரியில் இணைந்தாலும், 14 வயதிலேயே அதன் நேரடிப் பயனாளியாக முதன்முதலில் தொடர்பு கொண்டார். படிக்காத பெற்றோருக்குப் பிறந்த இவர், இடி அமீன் ஆட்சியில் 4 வயதிலேயே தந்தையை இழந்தார். பின்னர் HIV/AIDS-ல் இரு உடன்பிறப்புகளையும், 15 வயதில் பிரசவத்தின்போது இரத்தப்போக்கால் இறந்த மற்றொரு சகோதரியையும் இழந்தார். வீட்டு வேலைக்காரியான தாய்க்கு உதவும் வகையில் சாலையில் சோளம் விற்றுக் கொண்டிருந்தபோது, ஒரு ரோட்டேரியனுடன் உரையாடலைத் தொடங்கினார்; அவரது கதையைக் கேட்ட அந்த மனிதர் அவரைத் தத்தெடுத்து, தன் குடும்பத்தின் பராமரிப்பில் அவரது இளமைப் பருவத்தைக் கழிக்க வைத்தார். பிரசவத்தில் இறந்த சகோதரியின் நினைவாக, காம்பாலாவின் மெங்கோ மருத்துவமனையில் ஒரு இரத்த வங்கியை நிறுவும் ரோட்டரி திட்டத்திற்குத் தலைமை தாங்கினார் - $13 லட்சம் மதிப்பிலான இந்தத் திட்டம் இரத்தமாற்றத்திற்கான பற்றாக்குறையைக் குறைத்து, இறப்புகளைக் குறைக்க உதவுகிறது.

மகேரெரே பல்கலைக்கழகத்தில் உள்ள ரோட்டரி அமைதி மையத்தின் ஆலோசனைக் குழுவில் பணியாற்றுகிறார். அமைதி-பெரும் நன்கொடை முன்முயற்சிக் குழுவிற்குத் தலைமை தாங்கினார். 2013–14-ல் மாவட்டம் 9211-ன் ஆளுநராகப் பணியாற்றியதைத் தொடர்ந்து, எண்டோமெண்ட்/பெரும் நன்கொடை ஆலோசகராகவும், ARFC-ஆகவும் பணியாற்றியுள்ளார். ஆப்பிரிக்கா சென்டெனியல் ரோட்டரி ஹீரோஸ் விருது பெற்றவர். மனைவி ரெஸ்டியுடன் TRF-க்கு Benefactors-ஆகவும், AKS மற்றும் Bequest Society உறுப்பினர்களாகவும் உள்ளனர்.



**K P நாகேஷ்**

*இயக்குநர்* 2025–27

RC *பெங்களூரு ஹைகிரவுண்ட்ஸ், இந்தியா.*

10,000-க்கும் மேற்பட்டோருக்கு வேலை வழங்கி, தென் இந்தியா முழுவதும் 500-க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்யும் யுனிக் செக்யூரிட்டி சொல்யூஷன்ஸின் நிறுவனரான நாகேஷ், ராமநகர மாவட்டத்தில் கிராமப்புற இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்கும் யுனிக் திறன் மேம்பாட்டு அகாடமியையும் நிறுவியுள்ளார். மாண்டியாவின் PES பொறியியல் கல்லூரியில் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் பட்டம் பெற்ற பின், இந்திய விமானப்படையில் குறுகிய கால ஆணையர் அதிகாரியாகப் பணியாற்றினார்.

1995-ல் ரோட்டரியில் இணைந்தார். 2015–16-ல் மாவட்டம் 3190-ன் ஆளுநராகப் பணியாற்றியபோது, பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் அதேவேளையில் சுமார் 2,000 உறுப்பினர்களையும் 52 புதிய கிளப்புகளையும் சேர்க்கும் முயற்சிகளுக்குத் தலைமை தாங்கினார். இவரது தலைமையில், அந்த மாவட்டம் TRF-க்கு உலகளவில் அதிக நன்கொடை வழங்கிய மாவட்டமாக ஆனது. ARRFC, எண்டோமெண்ட்/பெரும் நன்கொடை ஆலோசகர், இந்திய

நீர் இயக்கத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர் உள்பட பல பொறுப்புகளை வகித்துள்ளார். TRFக்கு நிதி திரட்டுவதில் ஆர்வம் மிக்க நாகேஷ், ஒவ்வொரு மாவட்டமும் குறைந்தது $10 லட்சம் நன்கொடையுடன், இந்தியா $10 கோடி நன்கொடை வழங்கும் நாடாக மாற வேண்டும் என்பதே இவரது இலக்கு. RI Service above Self விருது பெற்றவர். மனைவி உமா (கணினி இயக்குநர் பொறியாளர்) உடன் AKS Chair's Circle உறுப்பினர்கள்.




**கெனிச்சி நகாயா**

*இயக்குநர்* 2026–28

RC *அஷிகாகா கிழக்கு, ஜப்பான்.*


ஜப்பானின் அஷிகாகாவில் அக மருத்துவம் மற்றும் இதயநோய் சிகிச்சையில் கவனம் செலுத்தும் மருத்துவரான நகாயா, இரண்டாம் தலைமுறை ரோட்டேரியன். 1988-ல் RC அஷிகாகா ஈஸ்ட்-ல் இணைந்தார் – முன்னாள் கிளப் தலைவரான தந்தையாலும், வழிகாட்டியான PRID தோஷியோ இதாபாஷியாலும் ஊக்குவிக்கப்பட்டு. ARRFC ஆகவும், எண்டோமெண்ட்/பெரும் நன்கொடை ஆலோசகராகவும், 2023 மற்றும் 2024-ல் சர்வதேச சட்டசபையின் கற்பித்தல் வழிகாட்டியாகவும் பணியாற்றியுள்ளார். 2015–16-ல் மாவட்டம் 2550-ன் ஆளுநர். RI Service above Self விருது மற்றும் TRF-ன் சிறப்புச் சேவைக்கான பாராட்டுச் சான்று பெற்றுள்ளார். மனைவி மசாகோவுடன் AKS உறுப்பினர்கள்; அறக்கட்டளையின் பணிக்கு ஆதரவளிக்க பெயரிடப்பட்ட எண்டோமெண்ட்களை நிறுவியுள்ளனர்.



**ஜெனிஃபர் A ஸ்காட்**

இயக்குநர் 2025–27, RC கிரேட்டர் ப்ளூ மவுண்டன்ஸ், ஆஸ்திரேலியா

சுற்றுச்சூழல் சட்டத்தில் அனுபவம் கொண்ட வழக்கறிஞர், மத்தியஸ்தர், மோதல் தீர்வு நிபுணரான ஸ்காட், 1996-ல் ரோட்டேரியனானார்; 2007–08-ல் மாவட்டம் 9690-ன் ஆளுநராகப் பணியாற்றினார். கணவர் இயான் (இவரும் ரோட்டேரியன் மற்றும் முன்னாள் மாவட்ட ஆளுநர், 2014–15) உடன் TRF-க்கு பெரும் நன்கொடையாளர்களாகவும், Bequest Society உறுப்பினர்களாகவும் உள்ளனர். TRF-யின் சிறப்புச் சேவைக்கான பாராட்டுச் சான்றைப் பெற்றுள்ளார்.




**தகாவோ ஷினோமியா**

*இயக்குநர்* 2026–28

RC *ஒசாகா-தென்மேற்கு, ஜப்பான்.*

1921-ல் தன் தாத்தாவால் நிறுவப்பட்ட ஒசாகா-மையப் பகுதி ரியல் எஸ்டேட் நிறுவனமான தட்சுமி இண்டஸ்ட்ரி கோ. லிமிடெட்டின் CEO ஆகிய ஷினோமியா, மூன்றாம் தலைமுறை ரோட்டேரியன். தந்தை மற்றும் தாத்தாவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, 1993-ல் 38 வயதில் தன் கிளப்பில் இணைந்தார். 2011–12-ல் கிளப் தலைவராக இருந்தபோது, ஜப்பானின் தோஹோகு பகுதியில் ஏற்பட்ட பேரழிவுகரமான 2011 சுனாமிக்குப் பின் நிவாரண உதவிக்காக 13 ஒசாகா கிளப்புகளை ஒருங்கிணைத்தார்.

TRF-க்கு பெரும் நன்கொடையாளராகவும், AKS உறுப்பினராகவும், Benefactor-ஆகவும், Paul Harris Society உறுப்பினராகவும் ஆதரவளிக்கிறார். மனைவி யோகோவுடன் SHARE மற்றும் ரோட்டரி அமைதி மையங்களுக்கான பெயரிடப்பட்ட எண்டோமெண்ட்களை நிறுவியுள்ளனர்.



**வின் ஸ்பில்லர்**

*இயக்குநர்* 2025–27, RC *கிராஸ் வேலி, கலிபோர்னியா*

ஒரு ரோட்டேரியனின் மகளும் லூசியானா பூர்வீகருமான ஸ்பில்லர், லூசியானா மாநில பல்கலைக்கழகத்தில் உளவியல் பட்டம் பெற்று, ஆசிரியராகத் தொழிலைத் தொடங்கினார். 1994 முதல் ரோட்டேரியனான இவர், எண்டோமெண்ட்/பெரும் நன்கொடை ஆலோசகர், RRFC, RIPR, சர்வதேச சட்டசபை வழிகாட்டி, மற்றும் 2022 RI CoL கற்றல் தலைவர் என பல பொறுப்புகளை வகித்துள்ளார். TRF-யின் சிறப்புச் சேவைக்கான பாராட்டுச் சான்றைப் பெற்றுள்ள இவரும் கணவர் ஸ்டீவும் TRF-க்கு பெரும் நன்கொடையாளர்களாகவும், Bequest Society, Paul Harris Society, PolioPlus Society ஆகியவற்றின் உறுப்பினர்களாகவும் உள்ளனர்.



**ஹரியட் ஃப்ளோரன்ஸ் வெர்வே**

*இயக்குநர்* 2025–27

RC *லெய்டன்*-AM, *நெதர்லாந்து.*

சுரினாமில் ஒரு டச்சு குடிமகளாகப் பிறந்த வெர்வே, மருத்துவராக வேண்டும் என்ற கனவை நிறைவேற்ற 18 வயதில் நெதர்லாந்திற்குக் குடிபெயர்ந்தார். 2002-ல் ரோட்டரியில் இணைந்தார். நெதர்லாந்தின் முதல் கறுப்பினப் பெண் மாவட்ட ஆளுநர் என்ற பெருமையையும், தன் மண்டலத்தின் முதல் பெண் இயக்குநர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார். 2019 முதல் 2022 வரை RRFC-ஆகவும் பணியாற்றியுள்ள இவர், ரோட்டரி-IHE டெல்ஃப்ட் நீர் கல்வி நிறுவனத்தின் சர்வதேச மாணவர் உதவித்தொகைத் திட்டத்திற்கும் தன்னார்வத் தொண்டு செய்துள்ளார். TRFக்கு PolioPlus Society உறுப்பினராகவும், பெரும் நன்கொடையாளராகவும், Bequest Society உறுப்பினராகவும் ஆதரவளிக்கிறார்.



**ஜான் ஹியூகோ**

*பொதுச் செயலாளர்,* RC *கீவ், உக்ரைன்.*

RI மற்றும் TRF-யின் பொதுச் செயலாளரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான ஹியூகோ, கீவின் முதல் ரோட்டரி கிளப்பின் சாசன உறுப்பினராக இருந்தார். வூட்ரோ வில்சன் சர்வதேச அறிஞர் மையத்தில் பொது கொள்கை அறிஞராகவும், ஜார்ஜ்டவுன் பல்கலைக்கழகத்தில் துணை சட்டப் பேராசிரியராகவும், சர்வதேச அமைதிக்கான கார்னகி நிதியத்தில் விருந்தினர் அறிஞராகவும் பணியாற்றியுள்ளார். பொதுச் செயலாளராக, இலினாய் மாநிலம் எவன்ஸ்டனில் உள்ள RI உலகத் தலைமையகத்திலும் ஆறு சர்வதேச அலுவலகங்களிலும் 800 பணியாளர்களைக் கொண்ட பணிக்குழுவை வழிநடத்துகிறார். துணைவர் மார்காவுடன் TRF-க்கு பெரும் நன்கொடையாளர்களாக உள்ளனர். இருவரும் எவன்ஸ்டனில் வசிக்கின்றனர்.

TRF Trustees in the next issue

©Rotary



RID 2982

**RC சேலம் மெட்ரோபோலிஸ்**

TRF பொதுநன்கொடைகளுக்காக ரூ.1 ரோட்டரி அறக்கட்டளை ஸ்டாம்ப் வடிவமைக்கப்பட்டது. சில்லறைக்குப் பதிலாக இனிப்புகளுக்குப் பதில் வாடிக்கையாளர்களுக்கு வழங்க சில்லறை விற்பனையாளர்களிடம் ரோட்டரி ஸ்டாம்ப்கள் வைக்கப்படுகின்றன. விழிப்புணர்வு போஸ்டர்கள் கடை களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

Rotary PEOPLE OF ACTION

# சங்கச் செய்திகள்






RID 3030

**RC நாக்பூர் ஹொரைசன்**

நாக்பூர் மண்ட்லே உயர்நிலைப் பள்ளியின் பார்வையற்றோர் நிவாரண சங்கத்திற்கு நாற்காலிகள் வழங்கப்பட்டன. இதனால் நவ் த்ரிஷ்டி அரங்கின் அமர்வுவசதி மேம்படும்.

RID 3053

**RC ஜோத்பூர் ஆர்யா**

மதுரா தாஸ் மருத்துவமனையில் குடும்பக் கட்டுப்பாட்டு வார்டு திறக்கப்பட்டது. ஜோத்பூர் வடக்கு மேயர் குந்தி தியோரா, PDG சஞ்சய் மால்வியா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.





## RID 3060

**RC உம்பர்காவ்**

குஜராத் உம்பர்காவ் தாலுகா சோல்சும்பா கிராமத்தில் நவீன வசதிகளுடன் கூடிய ரோட்டரி உடற்பயிற்சி மற்றும் மறுவாழ்வு மையம் திறக்கப்பட்டது. கிராம மக்களுக்கு குறைந்த கட்டண சேவை வழங்கும்.

## RID 3011

**RC டெல்லி சஃப்தர்ஜங்**

உலக புகையிலை ஒழிப்பு தினத்தையொட்டி கருத்தரங்கமும், டெல்லி பப்ளிக் பள்ளி, வசந்த் குஞ்சில் வாய்ப் பரிசோதனை முகாமும் நடத்தப்பட்டது. MP பன்சுரி ஸ்வராஜ் இளைஞர்களிடம் உரையாற்றினார்.



## RID 3100

**RC மொராதாபாத் நவ்யம்**

ஆரோக்கிய வாழ்வியலை ஊக்குவிக்கும் சைக்கிள் பேரணியை கூடுதல் மாவட்ட ஆட்சியர் அங்கூர் ஸ்ரீவாஸ்தவ் தொடங்கிவைத்தார். DGE காவ்யா ஜெமினி பங்கேற்பாளர்களை கௌரவித்தார்.





## RID 3090

**RC சூரத்கர்**

150 சிட்டுக்குருவிக் கூடுகள் மக்களுக்கு வழங்கப்பட்டு, பூங்காக்கள் மற்றும் பொது இட மரங்களில் கூடுகள் பொருத்தப்பட்டன. சங்கத் தலைவர் J K அரோரா, இயக்குநர் PDG ராஜேந்திர தனேஜா பிரசாரத்தை முன்னெடுக்கின்றனர்.

# Membership & TRF contribution summary






Membership figures as on July 1, 2026 (Interim).
TRF contribution figures as on June 30, 2026 (Unaudited).

## Rotary worldwide

| | | | |
|---|---|---|---|
| Rotary clubs | : 36,509 | Rotary members | : 1,134,288 |
| Rotaract clubs | : 9,660 | Rotaract members | : 145,395 |
| Interact clubs | : 20,125 | Interact members | : 463,036 |
| RCCs | : 14,482 | | As on July 16, 2026 |

# ரோட்டரியின் பல்வேறு திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

## திருச்சியில் பள்ளிக்கட்டடம்

RID 3000-ன் RC திருச்சிராப்பள்ளி ஃபோர்ட், திருச்சியில் உள்ள அரசு உதவிபெறும் நடுநிலைப் பள்ளியில் ரூ.20 லட்சம் செலவில் 1,200 சதுர அடி கட்டடத்தை அமைத்தது. RI துணைத்தலைவரும் இயக்குநருமான M முருகானந்தம் திறந்துவைத்த இக்கட்டடத்தில் கூடுதல் வகுப்பறைகள், மாணவ-மாணவியருக்குத் தனித்தனி கழிப்பறைகள் உள்ளன.■



*பள்ளியில் RI துணைத்தலைவர், இயக்குநர் M முருகானந்தத்துடன் (இடது) DG R சுப்ரமணி, (வலமிருந்து இரண்டாவது) IPDG J கார்த்திக்.*



*நடவுப் பணியைத் தொடங்கிவைக்கும் RC புனே ராயல் முன்னாள் தலைவர் மேதா குல்கர்னி (இடது), பள்ளி முதல்வர் ஆஷா தோரே.*

## புனே பள்ளியில் பட்டாம்பூச்சித்தோட்டம்

RID 3131-ன் RC புனே ராயல், வார்ஜேயில் உள்ள RMD சின்ஹகட் ஸ்பிரிங்டேல் பள்ளியில் பட்டாம்பூச்சித் தோட்டம் அமைக்க 40-க்கும் மேற்பட்ட கன்றுகளை நட்டது. கோத்ருட் வனதேவ்ராய் அறக்கட்டளையுடன் இணைந்து நடைபெற்ற இம்முயற்சியை அப்போதைய சங்கத் தலைவர் மேதா குல்கர்னி, பள்ளி முதல்வர் ஆஷா தோரே தொடங்கிவைத்தனர். தேர்ந்தெடுக்கப்பட்ட தாவரங்கள் வழியே பட்டாம்பூச்சிகள் முட்டையிட்டு வாழ்க்கைச் சுழற்சியைத் தொடங்க ஏதுவான இயற்கை வாழிடத்தை இத்திட்டம் உருவாக்கும். பட்டாம்பூச்சிகளுக்கு உகந்த தாவரங்களுடன் மருத்துவ, ஆயுர்வேத மூலிகைகளும் நடப்பட்டன.■

## பெங்களூரு மருத்துவமனையில் நவீன கருவி, ICU

RID 3192-ன் RC பெங்களூரு ஜங்ஷன் உறுப்பினர் ராதேஷ்யாம் ரந்தேரின் CSR நிதியுதவியுடன், ஸ்ரீ சங்கரா புற்றுநோய் மருத்துவமனைக்கு அறுவைச் சிகிச்சையின்போது துல்லியமான பரிசோதனைக்கு உதவும் கிரையோஸ்டாட் கருவியை மார்ச்சில் வழங்கியது. அப்போதைய DG எலிசபெத் செரியன், நன்கொடையாளர் ஊர்மிளா ரந்தேர் கருவியைத் திறந்துவைத்தனர்.

புஜிட்சு ரிசர்ச் இந்தியாவின் ரூ.41 லட்சம் CSR நிதியில் ஸ்டெப்-டவுன் ICU வசதியும் அமைக்கப்பட்டது. அஜய் பாவாலா திட்டத் தலைவராக இருந்தார்.■



*கிரையோஸ்டாட் கருவி திறப்பில் IPDG எலிசபெத் செரியன், CSR நன்கொடையாளர் ஊர்மிளா ரந்தேர்.*



*ICU-வைத் திறந்துவைக்கும் IPDG ஹர்ஷ் மகோல்; RC டோம்பிவிலி ஈஸ்ட் உறுப்பினர்கள், நன்கொடையாளர்கள் உடன் உள்ளனர்.*

## மும்பை மருத்துவமனையில் ICU

RID 3142-ன் RC டோம்பிவிலி ஈஸ்ட், டாக்டர் ஆச்சார்யா லேபரட்டரீஸின் CSR நிதியில் ஆஷ்ரய் அறக்கட்டளை மருத்துவமனையில் 10 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவை அமைத்தது. IPDG ஹர்ஷ் மகோல் திறந்துவைத்த இதில், மூன்று வென்டிலேட்டர்கள் உட்பட நவீன வசதிகள் உள்ளன.

ரூ.70 லட்சம் மதிப்பிலான இத்திட்டத்தை, தலைவர் பிரமோத் ஷெனாய் தலைமையிலான CSR குழு, திட்ட இயக்குநர் ஆனந்த் ஆச்சார்யா மற்றும் அவரது குழு செயல்படுத்தினர். லதா சாஸ்திரியும் ஓரளவு நிதியளித்தார்.■

# மின்வாகனமே எதிர்காலம்

பிரீத்தி மெஹ்ரா

*மின்வாகனப் பயன்பாட்டை அரசு ஊக்குவித்து வருவதால், உங்கள் அடுத்த வாகனம் புதைபடிவ எரிபொருளைப் பயன்படுத்தாத ஒன்றாக இருக்க வாய்ப்புள்ளது.*

அருகிலுள்ள எதிர்காலத்தில் மின்வாகனங்களே போக்குவரத்தின் முக்கிய வடிவமாக அமையும் என்பது தெளிவாகத் தெரிகிறது. கடந்த மாதம் அமலுக்கு வந்த டெல்லி மின்வாகனக் கொள்கை 2026 இதை உறுதிப்படுத்துகிறது. கடுமையான காற்று மாசுபாட்டால் பாதிக்கப்படும் பிற நகரங்களும் மாநிலங்களும் விரைவில் இதைப் பின்பற்றி, புகை வெளியேற்றமற்ற வாகனங்கள் குறித்த கொள்கைகளை மாற்றலாம்.


பயணிகளாகவும் வாகன நுகர்வோராகவும், புதிய விதிமுறைகளுக்கு ஏற்ப எவ்வாறு தேர்வுசெய்வது என்பதை நாம் விரைவில் தீர்மானிக்க வேண்டியிருக்கும். அதாவது, நகரம் அல்லது ஊரில் எப்படிப் பயணிப்பது என்பதே கேள்வி.

மின்சாரப் பேருந்துகள், கார்கள், இருசக்கர மற்றும் முச்சக்கர வாகனங்கள் எனப்படும் EV-கள், தற்போது சாலைகளை ஆக்கிரமித்துள்ள புதைபடிவ எரிபொருளில் இயங்கும் உள்ளரிப்பு இயந்திர-ICE-வாகனங்களை விடக் குறைவாக மாசுபடுத்துகின்றன. அவை காற்றின் தரத்தை மேம்படுத்த உதவும். ஆனால் அவற்றுக்கு மாறுவது எளிதான பணியல்ல; டெல்லி போன்ற கொள்கைகள் அந்த மாற்றத்தை முன்னெடுக்கின்றன.

மார்ச் 2030 வரை செல்லுபடியாகும் புதுப்பிக்கப்பட்ட டெல்லி கொள்கையின்படி, 2027 முதல் தேசியத் தலைநகரில் ICE இயந்திரம் கொண்ட புதிய முச்சக்கர வாகனங்களைப் பதிவு செய்ய முடியாது. மெட்ரோ நிலையங்களிலிருந்து வீடுகளுக்குச் செல்லும் கடைசி மைல் போக்குவரத்தில் இவை பெரிதும் பயன்படுகின்றன. புதிய இருசக்கர வாகனங்களுக்கான பதிவுக் காலக்கெடு 2028 வரை தளர்த்தப்பட்டுள்ளது. EV முச்சக்கர, இருசக்கர மற்றும் இலகுரக வணிகச் சரக்கு வாகனங்கள் அல்லது N-1 லாரிகளுக்கு முன்கூட்டிய கொள்முதல் மானியங்களும் வழங்கப்படுகின்றன.

₹30 லட்சம் வரை விலையுள்ள தனியார் மற்றும் வணிகப் பயன்பாட்டு மின்சாரக் கார்களுக்கு சாலை வரி, பதிவுக் கட்டணம் ஆகியவற்றில் 100 சதவீத விலக்கு உண்டு. பழைய ICE வாகனத்தை ஸ்கிராப் செய்ய நீங்கள் முடிவு செய்தால், நான்கு சக்கரவாகனத்துக்கு அதிகபட்சம் ரூ.1 லட்சமும் இருசக்கர வாகனத்துக்கு ரூ.10,000-மும் ஊக்கத் தொகை கிடைக்கும். மார்ச் 2030-க்குள் போக்குவரத்தில் 30 சதவீத மின்மயமாக்கலை அடைவதே இக்கொள்கையின் இலக்கு.

இந்தக் கட்டாய விதிமுறை ஒட்டுமொத்தக் காற்றுத் தரத்தை எவ்வளவு மேம்படுத்தும் என்பதை இப்போது கூற முடியாது. இருப்பினும் இது முன்னோக்கிய படியாகும். சாலைகளில் EV-களின் எண்ணிக்கை பெருகும்; குறுகிய காலத்தில் உற்பத்திப் பாதைகளை மாற்ற





வேண்டியிருப்பதால் வாகனத் துறைக்கும் இது சவாலாக அமையும். பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தினாலும் தனி வாகனத்தில் சென்றாலும், கார்பன் தடயத்தைக் குறைத்து நிலைத்த உலகிற்கு பங்களிக்க இது உதவும்.

EV என்பது புதிதாக வந்த தொழில்நுட்பமல்ல. சுமார் 180 ஆண்டுகளுக்கு முன்பு ஸ்காட்லாந்தைச் சேர்ந்த ராபர்ட் டேவிட்சன் பேட்டரியில் இயங்கும் ஒரு ரயில் என்ஜினை உருவாக்கினார். அது மெதுவாகச் சென்றதால் நடைமுறைக்கு ஏற்றதல்ல எனக் கருதப்பட்டது. இருப்பினும் 1890-களிலிருந்து 20-ம் நூற்றாண்டின் தொடக்கம் வரை, பேட்டரி கார்கள் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் குறுகிய காலம் பெரும் வரவேற்பைப் பெற்றன. பின்னர் உள்எரிப்பு இயந்திர வாகனங்கள் அவற்றை பின்னுக்குத் தள்ளின.

சமீபத்தில் வெளியான The EV Evolution: Then, Now and Next of Electric Vehicles என்ற நூலில் இந்த வரலாற்றுத் தகவல்களைப் படித்தேன். முன்னாள் சக ஊழியரான அனில் சசி எழுதியுள்ள இந்த நூல், மின்வாகனங்களின் வரலாற்றையும் இன்றைய நிலையும் பதிவு செய்கிறது.

இந்தியாவில் EV-களுக்கான ஈர்ப்பு அண்மைக்காலத்தில்தான் உருவானது. 1990-களின் தொடக்கத்தில், கேரளத்தின் சாலக்குடியைச் சேர்ந்த எடி கரன்ட் கண்ட்ரோல்ஸ் நிறுவனம், ஜப்பானின் யஸ்காவா எலக்ட்ரிக் மேனுஃபாக்சரிங் நிறுவனத்துடன் இணைந்து சிறிய இருவர் அமரும் மின்சாரக் காரை உருவாக்கியது. ‘லவ்பேர்டு’ என்ற அந்தக் கார், 1993 டெல்லி ஆட்டோ எக்ஸ்போவில் இந்தியாவின் முதல் EV எனக் காட்சிப்படுத்தப்பட்டது. ஆனால், அரசின் ஆதரவு இருந்தபோதும் 30-க்கும் அதிகமான கார்கள் விற்கப்படவில்லை.

மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, ஸ்கூட்டர்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் ‘விக்ரம் சஃபா’ என்ற முச்சக்கர மின்வாகனத்தை உருவாக்கியது; சுமார் 400 மட்டுமே விற்பனையானது. மஹிந்திரா & மஹிந்திராவின் ஒன்பது பேர் பயணிக்கக்கூடிய ‘M & M பிஜ்லீ’ 1999-ல் சாலைக்கு வந்தது. BHEL உள்ளிட்ட பல நிறுவனங்களின் முயற்சிகளும் விற்பனையில் வெற்றிபெறவில்லை. அவை கையாளச் சிரமமாகவும், இயக்கச் செலவு அதிகமாகவும் இருந்தன.

இந்தியாவில் பெருமளவில் உற்பத்திசெய்யப்பட்ட முதல் மின்சாரக் கார் ரேவா. அதன் நகர்ப்புறச் சிறிய மின்கார் 2001-ல் அறிமுகமானது– டெஸ்லா தனது ரோட்ஸ்டரை வெளியிடுவதற்கு ஏழு ஆண்டுகளுக்கு முன். என்றாலும், பல சிக்கல்களால் ரேவா தனது முன்னிலையைப் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. பின்னர் பெரும்பான்மை பங்குகள் மஹிந்திரா & மஹிந்திராவுக்கு விற்கப்பட்டன. அதற்கு முன் ரேவாவின் NXG மாடல் சுமார் 3,000 விற்பனையைப் பெற்றதுடன், 24 நாடுகளில் கிடைத்தது.

ரேவா முயற்சி மின்சார இருசக்கர வாகனங்களுக்கு வழியமைத்தது. கடந்த சில ஆண்டுகளில் பல பிராண்டுகள் சந்தைக்கு வந்துள்ளன. முக்கிய நகரங்களில் சார்ஜிங் நிலையங்கள் அதிகரித்திருப்பதால் அவை பிரபலமாகின்றன. நான்கு சக்கர EV பிரிவும் மெதுவாக வளர்கிறது; பெருநகர நெரிசலில் புகையின்றி அமைதியாகச் செல்லும் EV கார்களை இப்போது காண முடிகிறது.

வரும் ஆண்டுகளில் ICE வாகனங்களைப் படிப்படியாகக் குறைக்கும் அரசுக் கொள்கைகள் அமையலாம். எனவே அடுத்த வாகனத்தை வாங்கும்போது EV-யைத் தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டும். எந்த மாடல் பொருத்தமானது என்று பரிந்துரைக்க நான் வாகன நிபுணர் அல்ல. ஆனால் நகரங்களின் காற்று, ஒலி மாசுபாட்டை அதிகரிக்காததால், EV சரியான தேர்வாக இருக்கும். அதைவிடச் சுற்றுச்சூழலுக்கு உகந்தது பொதுப் போக்குவரத்து அல்லது மிதிவண்டிப் பயணமே.

*எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதி வருகிறார்.*



## RID 3131

### RC பிரதிகரண் புனே

புனே, ராய்காட் பகுதிகளின் 21 பின்தங்கிய இடங்களைச் சேர்ந்த 800-க்கும் மேற்பட்ட குழந்தைகள், பிற சங்கங்கள் மற்றும் ஞான பிரபோதினியுடன் நடத்தப்பட்ட இருநாள் RYLA-வில் பங்கேற்றனர். ரூ.5 லட்சம் செலவை எலெக்ட்ரிக்கா இன்ஜினியர்ஸ் இந்தியா ஏற்றது.

Rotary PEOPLE OF ACTION

# சங்கச் செய்திகள்






## RID 3170

### RC ஹாவேரி

பேருந்து நிலையம் அருகே டிஜிட்டல் கடிகாரம், சாலைப் பாதுகாப்பு LED செய்திகளுடன் காவல் சாவடி சங்கம் அமைத்துள்ளது.

## RID 3181

### RC பெல்தங்கடி

நடக்க உதவி தேவைப்பட்ட பள்ளி மாணவி ஷமாவுக்கு ரூ. 25,000 மதிப்புள்ள இடுப்பு-முழங்கால்-கணுக்கால்-பாத ஆதரவு கருவி வழங்கப்பட்டது.





RID **3203**

**RC திருப்பூர் பயனியர்ஸ்**

கவிலிபாளையம் புதூர் அரசு தொடக்கப்பள்ளியில் ரூ.2 லட்சத்தில் குழந்தைகள் விளையாட்டுப் பகுதி அமைக்கப்பட்டு, வெயிலிலிருந்து பாதுகாக்க மரங்கள் நடப்பட்டன.

RID **3132**

**ரோட்டரி இ-கிளப் எம்பவரிங் யூத்**

அஹில்யாநகரின் மவுண்ட் சினாய் கான்வென்ட் பள்ளியில் பாலினத்துக்கேற்ற கழிப்பறைகள், சிறுநீர் கழிப்பிடங்கள், கைகழுவும் நிலையங்கள், நீர்த் தொட்டி, சுகாதாரப் பலகைகள் திறக்கப்பட்டன. ரூ.15 லட்சம் திட்டத்தை ஃபோர்காஸ் இம்பெக்ஸ் நிதியளித்தது.



RID **3231**

**RC திருவண்ணாமலை கேலக்ஸி**

பிறந்த குழந்தைகளின் சிகிச்சையை மேம்படுத்த அரசு மருத்துவக்கல்லூரி குழந்தைகள் வார்டுக்கு மொபைல் சக்ஷன் கருவி வழங்கப்பட்டது.




RID **3261**

**RC சம்பல்பூர்**

நகரை சுத்தமாகவும் பயணிகளுக்கு உகந்ததாகவும் வைத்திருக்க, பேருந்து நிறுத்தத்தின் பராமரிப்பை சங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# கழுத்து வலி: காரணங்களும் பராமரிப்பும்

கீதா மதாய்

வயது வந்த மனிதரின் தலை சுமார் 5 கிலோ எடை கொண்டது. இந்தக் கணிசமான எடை, முதுகுத்தண்டின் மிகச் சிறியதும் அதிக இயக்கத்தன்மையுடையதுமான கழுத்துப் பகுதியில் உள்ள ஏழு கழுத்து முதுகெலும்புகளின் மீது சமநிலையில் தாங்கப்பட்டுள்ளது. ஐந்து வயதுக்குள் குழந்தையின் தலை, வயது வந்தவரின் தலை அளவையும் எடையையும் ஏறத்தாழ அடைந்துவிடும். அதன்பின், மெல்லிய நெகிழ்வான தாங்கியின் மீது சமநிலையில் வைக்கப்பட்ட கனமான பந்துபோல் தலை அமைகிறது.

வாழ்நாள் முழுவதும் தலை அரிதாகவே அசைவின்றி இருக்கும். அது மேலும் கீழும், இடமிருந்து வலமும் திரும்புவதுடன் வட்டமாகவும் சுழல்கிறது. கழுத்து முதுகெலும்புகள் ஒன்றின் மீது ஒன்று சீராகச் சறுக்குவதால் இத்தகைய அசைவுகள் சாத்தியமாகின்றன. ஒவ்வொரு எலும்புக்கும் இடையே உள்ள இடைமுதுகெலும்புத் தட்டு அதிர்வுகளைத் தணிக்கும் மெத்தையாகச் செயல்படுகிறது. மூட்டுகளில் உள்ள சினோவியல் திரவம் உராய்வைக் குறைத்து அசைவுக்கு உதவுகிறது. வலுவான தசைகள், தசைநார்கள் கழுத்து எலும்புகளைத் தாங்கி, அதன் வழியே செல்லும் நுண்ணிய முதுகுநாண் மற்றும் நரம்புகளைப் பாதுகாக்கின்றன.

துரதிர்ஷ்டவசமாக, நவீன வாழ்க்கை இந்த நுட்பமான அமைப்பின் மீது பெரும் அழுத்தத்தை ஏற்படுத்துகிறது.

இந்தப் பாதிப்பு பெரும்பாலும் குழந்தைப் பருவத்திலேயே தொடங்குகிறது. பள்ளிக் குழந்தைகள் பரிந்துரைக்கப்பட்ட எடையைவிட அதிகமான பைகளைச் சுமக்கிறார்கள். அரசின் வழிகாட்டுதல்படி, முதல் வகுப்பில் சுமார் 1 கிலோவாகத் தொடங்கி பத்தாம் வகுப்பில் 5 கிலோ வரை மட்டுமே பையின் எடை படிப்படியாக உயர வேண்டும். ஆனால் இந்தப் பரிந்துரைகள் பெரும்பாலும் பின்பற்றப்படுவதில்லை. முதுகுப்பை பயன்படுத்தினாலும், இரு பட்டை களையும் அணியாமல் பல குழந்தைகள் அதை ஒரு தோளில் மட்டும் தொங்கவிடுகின்றனர். இதனால் ஒரு பக்கக் கழுத்து, தோள்பட்டைத் தசைகளுக்கு அதிகப் பளு ஏற்பட்டு தசை இழுவை, தவறான உடல்நிலை உருவாகிறது. இந்தப் பழக்கம் கல்லூரி, பெரியவர் வயது வரை தொடர்கிறது; பின்னர் ஒரு கையில் தூக்கும் கனமான கைப்பை, மடிக்கணினிப் பை அல்லது பிரீஃப்கேஸ் அதற்கு இடமளிக்கிறது.

தவறான உடல்நிலையும் முக்கியக் காரணம். படிக்கும்போதோ, வீட்டிலிருந்து வேலைசெய்யும்போதோ, அலுவலகத்தில் அமரும்போதோ பலர் நீண்ட நேரம் மேசை மீது குனிந்திருக்கிறார்கள். கணினித் திரை கண் மட்டத்தில் இருக்க வேண்டும்; நாற்காலி, மேசையின் உயரமும் சரியாக இருக்க வேண்டும். தலை முன்னோக்கிச் சாயும்போது கழுத்து முதுகுத்தண்டின் மீது ஏற்படும் பளு மிக அதிகரிக்கிறது. 5 கிலோ எடையுள்ள தலை முன்னோக்கிக் குனிந்தால், கழுத்தில் 20–25 கிலோ அழுத்தத்துக்கு இணையான விசையை ஏற்படுத்தலாம்.



ஸ்மார்ட்போன், டேப்லெட், மடிக்கணினிகளின் பரவலான பயன்பாடு “டெக் நெக்” எனப்படும் கழுத்துப் பிரச்சினையைப் பெருக்கி விட்டது. குறுஞ்செய்தி அனுப்புதல், வாசித்தல், காணொலி பார்ப்பது, இணையக் கூட்டங்களில் பங்கேற்பது, சமூக ஊடகங்களைப் பார்ப்பது போன்ற செயல்களில் பல மணி நேரம் தலையைக் குனிந்து இருப்பதால் இது ஏற்படுகிறது. செயலில் மனம் முழுமையாக ஈடுபட்டிருப்பதால், ஆரம்ப அசௌகரிய அறிகுறிகள் புறக்கணிக்கப்படுகின்றன; லேசான இறுக்கம் தொடர்ச்சியான வலியாக மாறுகிறது.

பயணமும் கழுத்துப் பிரச்சினையை அதிகரிக்கலாம். பெரும்பாலான கார்களில் சரிசெய்யக்கூடிய தலைத் தாங்கி இருக்கும்; ஆனால் அதை முறையாக அமைப்போர் குறைவு. நீண்ட பயணத்தில் தவறாக அமைக்கப்பட்ட தலைத் தாங்கி, தலையை முன்னோக்கிச் சாயவோ பக்கவாட்டில் ஆடவோ அனுமதிக்கிறது. இதனால் தசைச் சோர்வு, இறுக்கம் அதிகரிக்கும். சரியாக அமைக்கப்பட்ட தலைத் தாங்கி, கழுத்தை மட்டும் அல்லாமல் தலையின் பின்பகுதி நடுப்பகுதியைத் தாங்க வேண்டும்.

தோள்கள், கைகள், உள்ளங் கைகளுக்குச் செல்லும் நரம்புகள் கழுத்து முதுகெலும்புகளுக்கு இடையேயுள்ள துளைகளிலிருந்து வெளியேறுகின்றன. வயதாகும்போது தட்டுகள், மூட்டுகளில் ஏற்படும் தேய்மானத்தால் இந்தத் துளைகள் குறுகலாம். வீங்கிய தட்டுகள் அல்லது எலும்பு வளர்ச்சிகள் நரம்புகளை அழுத்தி, தோள், கை, உள்ளங்கைகளில் வலி, உணர்வின்மை, கூச்ச உணர்வு அல்லது பலவீனத்தை ஏற்படுத்தலாம். சிலருக்கு வலி கழுத்தில் இல்லாமல் தோள்பட்டை, மேல் முதுகு அல்லது மார்பில் தோன்றும்; சிலவேளை மாரடைப்பு வலியைப் போலவும் இருக்கும். தொடரும் கழுத்துவலி தூக்கத்தைக் கெடுத்து, பணித்திறன், வாழ்க்கைத் தரத்தைப் பாதிக்கலாம்.

நல்ல செய்தி என்னவென்றால், பெரும்பாலான கழுத்துவலி நிகழ்வுகள் எளிய நடவடிக்கைகளால் மேம்படுகின்றன. முதலில் உடல் நிலையைச் சரிசெய்ய வேண்டும். தோள்களைத் தளர்வாக வைத்து நிமிர்ந்து அமருங்கள்; கால்கள் தரையில் சமமாக இருக்க வேண்டும்; கணினித்திரை கண் மட்டத்தில் இருக்க வேண்டும். தொலைபேசியைக் காது, தோளுக்கு இடையில் அழுத்திப் பிடிக்காதீர்கள். மேசைப் பணி செய்பவர்கள் ஒவ்வொரு 30–60 நிமிடங்களுக்கும் எழுந்து, உடலை நீட்டி, சில நிமிடங்கள் நடக்க வேண்டும்.

கழுத்தில் சுமார் ஐந்து நிமிடங்கள் சூடான, குளிர்ந்த ஒத்தடங்களை மாற்றி மாற்றி வைப்பது-நாளொன்றுக்கு மூன்று முறை-நிவாரணம் தரலாம். மருத்துவர் அல்லது மருந்தாளரின் ஆலோசனையுடன், பாராசிட்டமால் அல்லது பொருத்தமானவர்களுக்கு ஐபுபுரோஃபென் போன்ற ஸ்டீராய்டு அல்லாத அழற்சி எதிர்ப்பு மருந்து களைச் சுருக்கமான காலத்துக்கு எடுத்துக்கொள்வது வலி, அழற்சியைக் குறைக்கலாம். தாழ்வான, போதிய ஆதரவு தரும் தலையணை கழுத்தைச் சரியான நிலையில் வைத்திருக்க உதவும். சிலருக்கு இரவில் உறங்குமுன் கழுத்தின் பின்புறம் கேப்சைசின் உள்ள களிம்பு தடவுவதும் பயனளிக்கலாம்.

மெதுவான நீட்டிப்பு, தசை வலுப்படுத்தும் பயிற்சிகளும் அவசியம். உடலியக்க நிபுணர்கள் உடல்நிலையை மேம்படுத்தவும், கழுத்து–தோள்தசைகளை வலுப் படுத்தவும், நெகிழ்வுத்தன்மையை மீட்டெடுக்கவும் பயிற்சிகள் கற்பிப் பார்கள். வெப்பச் சிகிச்சை, குளிர் ஒத்தடம், அல்ட்ராசவுண்ட், தோல் வழி மின்நரம்புத் தூண்டல் (TENS) போன்ற சிகிச்சைகளையும் அளிக்கலாம். நிபுணர் கண்காணிப்பில் யோகா செய்வது உடல்நிலை, நெகிழ்வுத்தன்மை, சமநிலை, தசை வலிமையை மேம் படுத்தி, மீண்டும் மீண்டும் வலி வருவதைக் குறைக்கலாம்.

மென்மையான கழுத்துப் பட்டை, குறிப்பாக பயணம் அல்லது கடுமையான வலியின்போது அசைவைக் கட்டுப்படுத்தி தற்காலிக நிவாரணம் தரலாம். ஆனால் நீண்ட நேரம் பயன்படுத்தினால் ஆதரவு தசைகள் பலவீனமடையும். மருத்துவர் குறிப்பாக அறிவுறுத்தாவிட்டால், ஒருமுறைக்கு மூன்று மணி நேரத்துக்கு மேல் அல்லது ஒரு–இரு வாரங்களுக்கு மேல் தொடர்ந்து அணியக்கூடாது.

இந்த நடவடிக்கைகளுக்குப் பிறகும் வலி இரண்டு அல்லது மூன்று வாரங்களைக் கடந்தால், அல்லது விழுதல், விளையாட்டுக் காயம், சாலை விபத்துக்குப் பிறகு வலி ஏற்பட்டால் மருத்துவப் பரிசோதனை அவசியம். சாதாரணக் கழுத்துவலிக்கு படப்பரிசோதனைகள் வழக்கமாகத் தேவையில்லை. ஆனால் தீவிரக் காயம் அல்லது நரம்பு அழுத்தம் சந்தேகிக்கப்பட்டால் அவை தேவைப்படும்.

எக்ஸ்–ரே மூலம் எலும்பு முறிவு, எலும்புத் தேய்வு, தவறான சீரமைப்பு, மூட்டுவாதம், தட்டு இடைவெளிக் குறுக்கம் ஆகியவை தெரியவரலாம். தட்டுகள், தசைநார்கள், நரம்புகள், முதுகுநாண் பற்றிய விரிவான தகவலை MRI அளிக்கும்; நரம்புவேர் அல்லது முதுகுநாண் அழுத்தம் சந்தேகிக்கப்படும்போது இது சிறந்த பரிசோதனை. CT ஸ்கேன் எலும்புகளின் முப்பரிமாணத் தோற்றத்தைத் தெளிவாகக் காட்டும். உணர்வின்மை அல்லது பலவீனம் படிப்படியாக அதிகரித்தால் நரம்பு கடத்தல் சோதனையும் தேவைப்படலாம்.

வைட்டமின் D குறைபாடு, கால்சியம் குறைவு, அழற்சி மூட்டுவாதம், முடக்குவாதம், அங்கிலோசிங் ஸ்பாண்டிலைட்டிஸ் அல்லது தொற்று போன்றவற்றைக் கண்டறிய ரத்தப் பரிசோதனைகள் பரிந்துரைக்கப்படலாம். அடிப்படைக் கோளாறுகளுக்கு சிகிச்சை அளிப்பது கழுத்துவலியையும் குறைக்கும்.

அறுவைச் சிகிச்சை அரிதாகவே தேவைப்படும். முதுகுநாண் அல்லது நரம்புவேரில் கடுமையான அழுத்தம், நீடித்த பலவீனம், போதிய அறுவைச் சிகிச்சையற்ற சிகிச்சைகளுக்கும் கட்டுப்படாத வலி உள்ளவர்களுக்கே அது பரிசீலிக்கப்படும்.

கழுத்து வலிமையானதோடு எளிதில் பாதிக்கப்படக்கூடிய பகுதியும் ஆகும். சரியான உடல்நிலை, தேவையற்ற அழுத்தத்தைத் தவிர்த்தல், முறையான உடற்பயிற்சி, அறிகுறிகள் நீடித்தால் சரியான நேரத்தில் மருத்துவ ஆலோசனை பெறுதல் ஆகியவை பல ஆண்டுகள் கழுத்தை ஆரோக்கியமாகவும் வலியின்றியும் வைத்திருக்க உதவும்.

எழுத்தாளர் ஒரு குழந்தை மருத்துவ நிபுணரும், Staying Healthy in Modern India என்ற நூலின் ஆசிரியருமாவார்.

Wordsworld

# இதுதான் புத்தகக் கடை!


*ரோமன் கால நீரூற்றுகளுக்கும் ஜார்ஜியன் கட்டிடக்கலைக்கும் புகழ்பெற்ற இங்கிலாந்தின் பாத் நகரில், Topping and Company Booksellers என்ற அற்புதமான புத்தகக் கடை உள்ளது.*

அறைக்குப் பின் அறை; மேற்கூரை வரை அடுக்கப்பட்ட, நுணுக்கமாக வகைப்படுத்தப்பட்ட புத்தகங்கள்; மர ஏணிகள்; புத்தகங்கள் நிரம்பிய மேசைகள்; அமர்ந்து வாசிக்க வசதியான நாற்காலிகள் என வாசகர்களின் சொர்க்கம் அது.

சுமார் 80,000 தலைப்புகளைக் கொண்ட இந்தக் கடைக்கு உலகெங்கிலும் இருந்து வாசகர்கள் வருகிறார்கள். எழுத்தாளர்களுடனான நிகழ்ச்சிகளும் ஏறத்தாழ தினமும் நடைபெறுகின்றன; அருந்ததி ராய், எலிஃப் ஷஃபக் போன்றோர் இதில் பங்கேற்றுள்ளனர். இரண்டு நாட்கள் தேடியதில் சில அருமையான நூல்கள் கிடைத்தன. விமானப்பயணத்தில் எடை வரம்பு இல்லாமல் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!



சந்தியா ராவ்




*பாத், இங்கிலாந்தில் உள்ள Topping and Company Booksellers புத்தகக் கடை.*

அவற்றில் ஒன்று, 2024–26 குழந்தைகள் கவிஞர் பட்டம் பெற்ற ஃபிராங்க் காட்ரெல்-பாய்ஸின் A British Childhood: How Our Children Live Now. நாவலாசிரியரும் திரைக்கதை ஆசிரியருமான அவர், 2012 லண்டன் ஒலிம்பிக் தொடக்க விழாவை டேனி பாய்லுடன் இணைந்து உருவாக்கியவர். பள்ளிகள், நூலகங்கள், நிறுவனங்கள், சிறைச்சாலைகளில் குழந்தைகளைச் சந்தித்த அனுபவத்தின் அடிப்படையில், இங்கிலாந்தில் குழந்தைகள் வளர வேண்டிய நிலையற்ற சூழல்களையும், குழந்தைகளைப் பாதுகாப்பதில் சமூகமும் அமைப்புகளும் கொண்டுள்ள குறைபாடுகளையும் இந்நூல் பதிவு செய்கிறது.

அவரது கருத்துகள் இங்கிலாந்துக்கு மட்டுமல்ல, உலகின் பல பகுதிகளுக்கும் பொருந்தும். குழந்தையிடம் ஒரே கதையை மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டியிருப்பதாகப் பெற்றோர் கூறும்போது, குழந்தைப் பருவத்தில் அது செறிவான சொற்களஞ்சியம் அல்லது கலாசார அறிவைப் பற்றியது அல்ல; ஆழமான உணர்வுப்பூர்வ இணைப்புக்கான இடத்தை உருவாக்குவது பற்றியது என பாய்ஸ் நினைவூட்டுகிறார். இந்நூல், அவரது விருதுபெற்ற முதல் நாவலான Millions-ஐ வாங்கி வாசிக்கத் தூண்டியது. இரு சிறுவர்களின் மடியில் பவுண்டு நோட்டுகள் நிரம்பிய பை விழுவதையும் அதனால் நிகழும் விளைவுகளையும் சொல்கிறது. குழந்தைகளுக்கான நூலாக இருந்தாலும், பெரியவர்களுக்கும் சிந்திக்க வைக்கும் வாசிப்பு.

காலின் ஸ்லேட்டரின் The History Trees: Extraordinary Tales of Trees Through Time மற்றொரு பொக்கிஷம். உலகெங்கும் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான ஆண்டுகளைக்

கடந்து நிற்கும் சுமார் 60 மரங்களின் கதைகள் இதில் உள்ளன. ஆஸ்திரேலியாவின் Boab Prison Tree, 1,500 ஆண்டுகளுக்கும் மேல் பழமையானது. அதன் உள்ளீடற்ற தண்டு, விண்ட்ஹாம் நீதிமன்றத்துக்குச் செல்லும் கைதிகளைத் தற்காலிகமாக அடைக்கும் இடமாகப் பயன்படுத்தப்பட்டது; சுமார் 30 பேரை அடைக்கும் இடம் அதில் இருந்தது.

பஹ்ரைனின் Tree of Life சுமார் 442 ஆண்டுகள் பழமையானது. பெரும் பாலும் பாலைவனமான தீவுக்கூட்டத்தில், நீண்ட வேர்களுடன் வறட்சியில் உயிர்வாழும் இந்த மரம் 1482-ல் நடப்பட்டதாக நம்பப்படுகிறது. ஸ்வீடனின் Old Tjikko என்ற Norway spruce மரத்தின் தண்டு சில நூறு ஆண்டுகள் பழமையானது; ஆனால் அதன் வேர் அமைப்பு 9,565 ஆண்டுகளுக்கு முந்தையது எனக் கதிரியக்கக் கார்பன் கணக்கீடு கூறுகிறது.



கடையில் புத்தகங்கள் அடுக்கப்பட்ட அலமாரிகள்.

இந்தியாவில் ஆந்திரப் பிரதேசம், அனந்தபூர் மாவட்டத்திலுள்ள ஹார்ஸ்லி மலைகள் அருகே நிற்கும் திம்மம்மா மரிமனு உலகின் அகலமான ஆலமரம். 550–650 ஆண்டுகள் வயதுடையதாக மதிப்பிடப்படும் அது, ஏழரை ஏக்கருக்கும் மேல் பரவியிருக்கிறது; 4,000-க்கும் அதிகமான விழுதுகள் அதைத் தாங்குகின்றன. ஒவ்வொரு மரத்தின் கதையும், வளர்ச்சி என்ற பெயரில் மரங்களை அழிக்காமல் காத்து வளர்க்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

Topping-ல் கிடைத்த விர்ஜீனியா எவன்ஸின் The Correspondent, 2026 Women's Prize for Fiction விருது பெற்றது. விருதுபெற்ற புனைகதை கடினமாக இருக்கும் என்ற எண்ணத்தை இது மாற்றுகிறது. சுமார் 300 பக்கங்கள் கொண்ட இந்நூல் மிக எளிதாக வாசிக்கக்கூடியது.




கடிதங்கள் வழியே சொல்லப்படும் இக்கதையின் நாயகி, எழுபதுகளில் உள்ள ஓய்வுபெற்ற, கூர்மையான, தளராத பெண் வழக்கறிஞர் சிபில் வான் ஆன்ட்வெர்ப். சிறுவயதிலிருந்து கடிதம் எழுதும் அவர், குடும்பம், நண்பர்கள், எழுத்தாளர்கள், மருத்துவர், காதல் விரும்பிகள், தோட்டக்கலைச் சங்கம் எனப் பலருடன் தொடர்பில் இருக்கிறார். அவரது கவனிப்புகள், ஆலோசனைகள், ரகசியங்கள், உலகம் அனைத்தும் கடிதங்கள் வழியே விரிகின்றன. பார்வை மெல்லக் குறையும்போதும், இரு காதல் விரும்பிகள் அவரது வாழ்க்கையில் வருகிறார்கள்.

கடுமையான தீர்ப்பொன்றால் வெறுப்புக் கடிதங்களையும் பெறும் சிபில், பல ஆண்டுகளாக மறைத்து வைத்திருக்கும் ரகசியம் படிப்படியாக வெளிப்படுகிறது. அது அதிர்ச்சியளிப்பதுடன் மனதை நெகிழ வைக்கிறது. எள்ளலும் நகைச்சுவையும் கொண்ட இந்த நாவல், மென்மையான, கூர்மையான, வெம்மையான கதைசொல்லலால் வாசகனை முழுமையாக ஈர்க்கிறது. சாதாரணமாகத் தோன்றும் தலைப்பு உங்களை ஏமாற்ற வேண்டாம்-The Correspondent அவசியம் வாசிக்கப்பட வேண்டிய புத்தகம்.


கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

படங்கள்: சந்தியா ராவ்



# லூசெர்னில் சுவை சர்ப்ரைஸ்

LBW



T C A ஸ்ரீனிவாச ராகவன்

ஆண்டுக்கு ஒருமுறை, மகனும் அவரது குடும்பமும் வசிக்கும் சுவிட்சர்லாந்துக்கு நானும் என் மனைவியும் செல்கிறோம். மிகவும் செலவு மிகுந்த நாடான அங்கு, நால்வருக்கான சாதாரண உணவுக்கே உணவகத்தில் சுமார் ரூ.25,000 ஆகலாம்; 200 கி.மீ. ரயில் பயணத்துக்கு ஒருவருக்கு சுமார் ரூ.10,000 செலவாகலாம். இதற்கு இந்திய ரூபாயுடன் ஒப்பிடும்போது சுவிஸ் ஃபிராங்கின் மதிப்பு உயர்ந்திருப்பதும் ஒரு காரணம்; ஒரு ஃபிராங்க் சுமார் ரூ.125. யூரோ சுமார் ரூ.105–106 எனக் குறைவாக இருந்தாலும், சுவிட்சர்லாந்தில் அவர்களது நாணயத்தையே பயன்படுத்த வேண்டும்.

வயதும் கூடிவருவதால், ஐரோப்பா முழுவதும் அவசர அவசரமாகச் சுற்றுவதை நாங்கள் குறைத்துவிட்டோம். பனிப்பாறைகள், மலைச் சிகரங்கள், ஏரிகள் அல்லது பசுக்கள் நிறைந்த புல்வெளிகளைக் காட்டிலும், பேரக்குழந்தைகளுடன் இருப்பதே எங்களுக்கு அதிக மகிழ்ச்சி தருகிறது.

ஒருநாள், லூசெர்ன் என அழைக்கப்படும் நகரத்துக்குச் சென்றிருக்கிறீர்களா என ஒருவர் கேட்டார். 13-ம் நூற்றாண்டில் அதன் புல்வெளிகளில் ஒன்றில்தான் சுவிட்சர்லாந்தின் ஜனநாயக அடித்தளம் அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. நாங்கள் செல்லவில்லை என்றதும், நிச்சயமாகச் செல்ல வேண்டும் என அறிவுறுத்தினர். கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் சென்றோம்.

வான்மாசைக் குறைப்பதில் பெற்ற வெற்றியால் சுவிட்சர்லாந்தில் கடுமையான வெப்ப அலைகள் ஏற்படுகின்றன. காற்று மாசு மிகக் குறைவு. ஆனால் ஏரோசால் துகள்கள் இல்லாததால் புறஊதாக் கதிர்வீச்சு கடுமையாகி வெப்பமும் அதிகரிக்கிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக வீடுகளில் குளிர்சாதனப் பெட்டிகள் அதிகாரபூர்வமற்ற முறையில் தடைசெய்யப்பட்டுள்ளன.

மிக வெப்பமான நாளில் நாங்கள் ரயிலில் லூசெர்னுக்குச் சென்றோம். மதிய உணவை எங்கு உண்பது என யோசித்துக்கொண்டிருந்தபோது, என் மனைவியின் கண்ணில் பிரணவ் யோகேஷ் என்ற இந்தியப் பெயர் பட்டது. அவர் தலைமைச் சமையல்காரராகப் பணிபுரிந்த நிமயா உணவகத்தில் இந்திய உணவு வழங்கப்பட்டது. ‘நிமயா’ என்றால் மென்மையான ஓடை அல்லது பகவான் கிருஷ்ணர் என இரு பொருள்கள் உண்டு. நாங்கள் அங்கே சென்றோம்.

சுவிட்சர்லாந்தில் இந்திய உணவுக்கு அதிகத் தேவை இல்லை; குறிப்பாக தென்னிந்திய, அதிலும் தமிழ் உணவுக்கு. எனவே, வடஇந்திய மாதுளை அலங்காரமின்றி தயிர்சாதத்தையும் பட்டியலில் சேர்க்குமாறு யோகேஷிடம் கூறினேன். தேடினால் தென்னிந்திய உணவு கிடைக்கும் என்றும் சொல்கிறார்கள். ஆர்டரின் பேரில் சமைத்துத் தரும் சில பெண்கள் உள்ளனர். மூலப்பொருட்களில் கலப்படம் இல்லாததால், உணவு இந்தியாவைவிடச் சுவையாக இருக்கலாம்.

தலைமைச் சமையல்காரர் என்றால் நாற்பது, ஐம்பது அல்லது அறுபது வயதில் இருப்பார் என நினைப்போம்; சீனி கம் படத்தில் அமிதாப் பச்சன் போல. ஆனால் பிரணவ் என அழைக்கச் சொன்ன யோகேஷுக்கு வயது 30 மட்டுமே. என் மனைவியின் எரிச்சலைப் பொருட்படுத்தாமல் அவரது வயதைக் கேட்டேன்; அவர் சொன்னார். லூசெர்னுக்கு வருமுன் வேறொரு இடத்தில் தலைமைச் சமையல்காரராக இருந்துள்ளார்.

பாரம்பரிய இந்திய உணவகங்களிலிருந்து வேறுபட்ட, அதிகச் சோதனை முயற்சியுள்ள உணவை வழங்குவதே அவரது நோக்கம். “இந்திய உணவகங்களுக்குள்ள கறி ஹவுஸ் என்ற பிம்பத்திலிருந்து விலக விரும்புகிறோம்,” என்றார்.

இந்தத் தொழிலை ஏன் தேர்ந்தெடுத்தார் என்று கேட்டபோது, அவரது பாட்டி 92 வயதிலும் வீணை வாசித்தார்; தாய் பரதநாட்டியக் கலைஞர்; சகோதரர் இசைப் பள்ளி நடத்தும் தபேலா வாத்தியக்காரர் என்றார். “படைப்பாற்றல் சமையலிலும் இருக்கலாம்,” என்றார். அவரது வழுக்கைத் தலையைப் பார்த்து, சமையல்காரர்கள் ஏன் வழுக்கையாக இருக்க விரும்புகிறார்கள் என மீண்டும் கேட்டேன். “உணவில் முடி விழாமல் இருக்கத்தான். சமையலறையில் நான் தொப்பி அணிய வேண்டியதில்லை,” என்றார்.

அது அருமையான உணவாக அமைந்தது; குறிப்பாகக் கட்டணம் மிகவும் நியாயமாக இருந்ததால், மிகுந்த மகிழ்ச்சியுடன் வெளியேறினோம்.■


BARCELONA
ROTARY
INTERNATIONAL
CONVENTION
SAVE THE DATE
BARCELONA, SPAIN | 26-30 JUNE 2027
Registration opens in September 2026 at convention.rotary.org.
Rotary

Posted at Egmore RMS Patrika Channel. Date of posting: 9–15 every month. Regd with RNI TNTAM/2018/76372. Rotary News Tamil Published 1st week of every month.
Registered No. TN/CCN/677/2025-2027 | Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹50
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP/611/25-27

ADVT.

PROUD BNI MEMBER

**Pankaj Shah**

COL Representative District 3131 2026-28
RI Convention Promotion Chair : Taipei, 2025-26
DRFC RID 3131 RY 2025-26
ARRFC ZONE 7 RY 2023-25
District Membership Chair 2022-25
District Learning Facilitator 2024-25
District Governor 2021-22
Charter Member : Rotary Club of Pune Sarasbaug



+91 98220 57299
rotary.pankajshah@gmail.com

Personal Secretary : 81490 57299 | Email : secretary.pankajshah@gmail.com

GDM RRFM

**Head Office**
Tel : +91 20 24404900 (30 lines)
Call Center : 7888039303.
admin@ramtilak.com

Shree Ganesh Dal & Besan Mills - Shirwal
Ramtilak Roller Flour Mills (p) Ltd. - Chakan
Mandar Health And Hygiene Pvt. Ltd. - Phaltan
M/s. Arun Narayandas Shah - Lonand
Shree Ganesh Shelters - Pune
M/s Deepchand Venichand Shah, Pune.

www.ramtilak.com | www.ganeshdal.com
• ISO 9000:2015 • ISO 22000:2015

SCAN for the Location

**Corporate Office:**
Shop No. 243,
Chatrapati Shivaji Market Yard,
Gultekadi, Pune,
Maharashtra-411037

CRESCO HEALTHCARE
Multibrand Pathology
www.crescohealthcare.com

PATHOLOGY HOME COLLECTION
MEDICAL STORE - CHEMIST AND DRUGGIST

To avail the services
**89564 66801/2/3/4/5**

Download Cresco app

**PATHOLOGY PARTNERS**

Grant Medical Foundation Ruby Hall Clinic | DMH | Bharati Vidyapeeth's Bharati Hospital and Research Centre Pune | Sahyadri Speciality Labs | Trutest Laboratories | Metropolis The Pathology Specialist